# மறையாசிரியர் முதல் தேர்வு

# கைநூல்



தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்

இலங்கை

## முதலாம் பாடம்

## 1. புனித நாட்டின் அமைப்பும் வரலாறும்:-

### 1.1. புனித நாட்டிற்கான வேறு பெயர்கள்:-

கானான், பலஸ்தீனா, இஸ்ராயேல் நாடு, வாக்களிக்கப்பட்ட நாடு, புனித நாடு

**(அ) கானான்.**

ஊதா நிற ஆடைகளை உற்பத்தி செய்யும் நாடு என்பது இதன் பொருள். இது புராதன கால பெயராகும். ஆரம்ப காலத்தில் இப்பெயர் பினிசியாவின் கடற்கரைக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டாலும் பின்னர் யோர்தான் நதியின் மேற்கு பகுதிக்கு பயன்படுத்தப்பட்டது. இந்த நாடு சிரியாவுக்கும் எகிப்துக்கும் இடைப்பட்ட - இஸ்ராயேலர் வாழ்ந்த நிலப்பரப்பாகும். சிதொன் துறைமுகத்திற்கு அண்மையிலான கடலில் வாழ்ந்த நத்தைகளின் ஓடுகளில் ஒருவகை ஊதா நிற சாயம் உற்பத்தியாகிறது. அந்நாட்டு செம்மறி ஆடுகளின் உரோமம் இந்த சாயத்தினால் நிறமூட்டப்பட்டு ஊதா நிற துணி உற்பத்தி செய்யப்பட்டதால் இப்பெயரைப் பெற்றது. மோசே இந்நாட்டுக்குத் தான் ஒற்றர்களை அனுப்பினார்.

நோவாவின் மூன்று புதல்வர்களில் ஒருவரான காம் என்பவர் வாழ்ந்த இடமாதலால் கானான் என பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது. மொசபத்தேமியாவிலிருந்து எகிப்துக்குச் சென்ற குலமுதுவர் ஆபிரகாம் வசித்த இடமும் இதுவாகும்.

**(ஆ) பலஸ்தீனா**

பலஸ்தீனா என்பதன் கருத்து பிலிஸ்தியரின் நாடு என்பதாகும். இப்பெயரை உரோமையர் பயன்படுத்தினாலும் யூதர் பயன்படுத்தவில்லை. காரணம் பலஸ்தீனரும் உரோமையரும் பரம எதிரிகளாக இருந்தனர். ஆயினும் தாவீது - கோலியாத் கதை திருவிவிலியத்தில் அடிக்கடி கூறப்படுகிறது. (தொநூ. 21/34, விப. 13/17, 1சாமு. 6/1, 27/7, 2அர. 8/2)

**(இ) இஸ்ராயேல் நாடு.**

இறைவன் வல்லமை உள்ளவர் என்பது இதன் கருத்தாகும். இஸ்ராயேல் என்பது இறைவனால் யாக்கோப்புக்கு கொடுக்கப்பட்ட பெயர்களில் ஒன்றாகும். (தொநூ. 32/28). தற்காலத்தில் இப்பெயர் மீண்டும் - பலஸ்தீனாவி லிருந்து யோர்தானை வேறுபடுத்தி சுதந்திரம் பெற்ற பின்னர் பயன்படுத்தப்பட்டது. (1948 வைகாசி 4ம் திகதிக்குப் பின்னர்.) இஸ்ராயேல் என்ற பெயர் (1சாமு. 13/19, 2அர. 5/2, எசே. 7/2, 21/17, மத். 2/20-22) ஆகிய பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**(ஈ) வாக்களிக்கப்பட்ட நாடு.**

ஆபிரகாமின் வழித்தோன்றல்களுக்கு அளிப்பதாக ஆண்டவர் வாக்குப்பண்ணிய நாடு இதுவாகையால் ‘‘வாக்களிக்கப்பட்ட நாடு’’ என பெயர் பெற்றது.

**(உ) புனித நாடு.**

கிறிஸ்துவின் பிறப்பு, தூதுபணி, பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியன இங்கு இடம் பெற்றதால் கிறிஸ்தவர்கள் இதனைப் ‘‘புனித நாடு’’ என அழைக்கிறார்கள்.

### 1.2. புனித நாட்டின் பூகோள அமைப்பும் இஸ்ராயேல் மக்களும்

**(அ) பூகோள பின்னணி**

தானிலிருந்து பெர்சிபா வரை பரந்து செல்லும் இந்நாட்டின் நீளம் 150 மைல்களாகும். அகலம் 50-60 மைல்களாக உள்ளது. பரப்பளவு 10,000 சதுர மைல்களாகும். யோர்தான் நதியிலிருந்து கிழக்குப்பகுதி 4000 சதுர மைல்களையும் மேற்குப்பகுதி 6000 சதுர மைல்களையும் கொண்டுள்ளது. இன்று இஸ்ராயேல் அரசின் பரப்பளவு 8000 சதுர மைல்களாகும். கலிலேயக் கடலின் நீளம் 13 மைல்கள், அகலம் 84 மைல்கள் ஆகும். அது மத்தியதரைக் கடலிலிருந்து 28 மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ளது. இஸ்ராயேல், ஆபிரிக்காவுக்கும் ஆசியாவுக்குமிடையில் அமைந்துள்ளது. வடக்கில் லெபனான், சிரியாவையும் கிழக்கில் யோர்தானையும் வடமேல் பகுதியில் எகிப்தின் சீனக் குடாவையும் எல்லையாகக் கொண்டுள்ளது. இஸ்ராயேலர் தமது அயல் இனத்தவரை எதிரிகளாகப் பார்த்தனர். இஸ்ராயேல் பொதுவாக ஒரு உலர்ந்த நாடாகும். வருடத்தில் இருமுறை மட்டுமே மழை பெய்யும். ஆயினும் இறைவன் இஸ்ராயேலை பாலும் தேனும் பொழியும் நாடாக அறிமுகம் செய்கிறார்.

**(ஆ) இஸ்ராயேல் மக்கள்**

இவர்கள் “இஸ்ராயேலர்” என அறிமுகப்படுத்தப்படுகின்றனர். இவர்கள் எபிரேய மொழியைப் பேசியதால் பிற நாட்டவர்கள், இவர்களை எபிரேயர் என அழைத்தனர். எபிரேயம் என்பதன் பொருள் “இதற்கு அப்பால்” என்பதாகும். ஆபிரகாம் ஒருமுறை எபிரேயர் என அறிமுகப்படுத்தப்பட்டார். (தொநூ. 14/13) எபிரேயம் என்னும் சொல் இஸ்ராயேல் என்னும் சொல்லைவிட ஆழமான கருத்தைக் கொண்டது. ஆரம்பத்தில் இப்பெயர் கொள்ளைக்காரர்களுக்குப் பாவிக்கப்பட்டதால் பழைய ஏற்பாட்டில் இப்பெயர் பயன்படுத்தப்படவில்லை. பின்னர் இப்பெயர் சில அர்மேனிய கோத்திரங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. இம்மக்கள் மொசபெத்தேமியாவிலிருந்தே முதலில் வந்தனர். இவர்கள் செமித்தியர் எனப்பட்டனர். அரமைக்கும் எபிரேயமும் இவர்களின் மொழிகளாகும். இஸ்ராயேலர் ஒரே கடவுள் கொள்கையையுடைய மக்களாவர். ஆதலால் இவர்கள் மற்ற இனத்தவரை விட சிறப்பானவர்கள்.

## 1.3. முக்கிய பிரிவு:-

**கலிலேயா, யூதேயா, சமாரியா**

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் நிலப்பரப்பாகிய பலஸ்தீனாவில் மத்திய தரைக்கடலுக்கும் யோர்தான் நதிக்கும் இடையில் அமைந்துள்ள பகுதி மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வட மாகாணம் கலிலேயா எனவும் மத்திய மாகாணம் சமாரியா எனவும் கிழக்கு மாகாணம் யூதேயா எனவும் அறிமுகப்படுத்தப்படுகிறது. யோர்தான் நதிக்கு கிழக்கே அமைந்துள்ள பகுதி ‘பெரேயா’ என அழைக்கப்படுகிறது

**(அ) கலிலேயா**

கார்மேல் மலைச்சாரலையும் எசட்ரெலொன் சமவெளியையும் கிழக்கு எல்லையாகவும் லெபனான் மலைச் சாரலை வடக்கு எல்லையாகவும் கொண்டுள்ள கலிலேயா, பலஸ்தீனா முழுவதிலுமே மிகவும் செழிப்பான நிலப்பரப்பாகும். சோளம், பார்லி, திராட்சை, ஒலிவம், அத்திக்காய், ஆகியவற்றோடு மேலும் பயன் தரும் விளைபொருட்கள் பலவும் மிகவும் செழிப்பாக இங்கே விளைந்தன.

யேசுவினது பகிரங்க வாழ்வின் ஆரம்பப் பகுதியில் அவர் போதித்த இடமாகிய கலிலேயக் கடல் அல்லது கெனசரெத் வாவி தென்கிழக்கில் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 700 அடி அளவில் விசாலமானது. நீளம் 13 சதுர மைல்கள் அளவிலாகும். இதன் ஆழம் 165 - 230 அடியாகும். பழைய ஏற்பாட்டில் கலிலேயக் கடலுக்கு கினரேத்து கடல், கெனசரேத்துக்கடல் என்ற பெயர்கள் பயன்படுத்தப்பட்டது. (எண் 34/11, 1மக் 11/67) புதிய ஏற்பாட்டில் கலிலேயக் கடல் கெனசரேத் பகுதி, கெனசரேத் ஏரி எனவும் (மத் 14/34, மாற் 6/53, லூக் 5/1), திபேரியக் கடல் எனவும் (யோவா 6/1) (யோவா 21/1) அழைக்கப்பட்டது. கலிலேயக் கடலும் அதனைச் சூழ உள்ள பகுதிகளும் யேசுவின் வாழ்வோடு தொடர்புபட்டுள்ளது.

**உ+ம்**

* முதல் சீடர்கள் நால்வரையும் அழைத்தல். (மத் 4/18)
* தொழுநோயாளரைக் குணமாக்கல். (மத் 8/1)
* புயலை அடக்குதல். (மத் 8/27)
* திருத்தூதர் பன்னிருவரை நியமித்தல். (மாற் 3/13)

நற்செய்தி நான்கிலும் கலிலேயாக் கடலைப் பற்றி 45 குறிப்பிடப்பட்டுள்ளது. கெனசரேத் ஏரிக் கரையைச் சூழ அமைந்துள்ள நகரங்கள்: - திபேரியா, பெத்சாய்தா, மக்தலா, கபர்நாகூம் என்பனவாகும். நசரேத், நயீம், கானா ஆகியன இங்குள்ள உள்ளூர்களாகும்.

பலஸ்தீனாவில் சனநெருக்கடியான நகரம் கலிலேயாவாகும். கமத் தொழிலும், மீன்பிடித் தொழிலும் இங்கு வாழும் மக்களின் முக்கிய தொழில்களாகும். இதனால் கலிலேய மக்கள் யூத சட்ட திட்டங்கள் பற்றிய அறிவற்றவர்கள் என யூத மக்கள் அவர்களை இகழ்ந்தனர்.

பலஸ்தீனாவில் உள்ள நகரங்களில், யூத இனத்தைச் சேராதவர்கள் வாழ்ந்த நாடுகளுக்கு மிகவும் அண்மையில் அமைந்திருந்த நாடு கலிலேயாவாகும். இதனால் அடிக்கடி பிற நாட்டவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இதனால் விருந்தினருடன் நட்பாக பழகுவதற்கு இவர்களால் முடிந்தது. எம் ஆண்டவர் தமது தூதுப் பணியை இந்த வலிமை மிக்க, தியாகம் நிறைந்த மக்கள் மத்தியிலிருந்தே ஆரம்பித்தார்.

**(ஆ) சமாரியா**

கலியேயாவுக்கு கிழக்கிலும் யூதேயாவுக்கு வடக்கிலுமாக அமைந்த பிரதேசம் சமாரியா என அழைக்கப்பட்டது. இது ஒரு மலைப்பிரதேசமாக இருந்தபோதிலும் செழிப்புள்ள நிலப் பிரதேசங்களும் இருந்தன. இங்கு வாழ்ந்த மக்கள் சிறிய ஆசியாவிலிருந்து வந்த வெளிநாட்டினருடன் கலந்த கலப்பு யூத இனத்திலிருந்து வந்தவர்களாவர். இதனால் சமாரியர் என பெயர் பெற்றனர். சமய செயற்பாடுகளில் அவர்கள் யூத சட்ட திட்டங்களைப் பின்பற்றினாலும் சமூக செயற்பாடுகளில் மற்ற யூதர்களினால் ஒதுக்கி வைக்கப்பட்டார்கள். அவர்கள் வேற்று நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பது இதற்கு காரணமாக இருந்தது. உண்மையான யூதர் சமாரியரை வெறுத்தனர். அவர்கள் தீண்டப்படாதவர்கள் என எண்ணினர். அவர்களுடன் புழங்குவதைத் தவிர்த்தனர். ஆனால் நம் ஆண்டவர் சமாரியரில் விசேட அன்பு காட்டியதை, அவர்களைப் புகழ்ந்து பேசியதன் மூலமும் அவர்களுக்கு உதவி புரிந்ததின் மூலமும் தெளிவாகக் காண்கிறோம்.

**(இ) யூதேயா**

பலஸ்தீனாவுக்குத் தெற்கே அமைந்துள்ள யூதேயா சிறிய மலைகளிலான பகுதியாகும். யூதர்களது சமய, சமுதாய வாழ்வின் நடுநிலையமாகிய எருசலேம் இந்தப் பகுதியில்தான் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 2400 அடி உயரமான மலைப்பிரதேசத்தில் அமைந்துள்ள ஆலயம் எருசலேமாகும். இத்திருத்தலம் யூதரின் முக்கிய வணக்கஸ்தலமாக இருந்தது. உரோமை ஆளுநரின் தலைமைப் பணியகமும் இந்நகரில்தான் அமைந்திருந்தது.

நகரின் வடமேற்கு பகுதியில் அமைந்திருந்த இத்தேவாலயம் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. புனித ஸ்தலம் தொடக்கம் புனித பலிப்பீடம் வரை படிக்கற்களுடன் அமைந்திருந்த இவ்வாலயமானது கம்பீரம், பலம், அழகுடன் காட்சியளித்தது. சமய வழிபாட்டுச் சடங்குகள் - சிறப்பாக பாஸ்கா திருவிழா காலத்தின்போது பலஸ்தீனாவின் அனைத்து பகுதிகளிலிருந்தும் வரும் யூதர் எருசலேம் ஆலயத்தில் ஒன்று கூடினர்.

யூதேயா மக்களில் பெரும்பாலானோர் பபிலோனியாவுக்குச் சென்று வாழ்ந்து திரும்பி வந்தவர்களாவர். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களும், இறைசட்டத்தைப் பின்பற்றுகின்ற மக்களும் தாம் மட்டுமே என அவர்கள் கூறினர். தமது அயலவர்களான வெளிநாட்டவருடன் தொடர்புகொள்ள விரும்பாத இவர்கள் பிறருக்கு மதிப்பளிப்பதில்லை. கதைக்கும் விதத்திலும் கூட தமது ஆளுமையை முனைப்பாகக் காட்ட முயன்றனர். கலிலேயரைப் போல பொறுமையுள்ளவர்கள் அல்லர். இதனால்தான் யூதேயாவில் யேசுவை கருத்திற் கொள்ளவில்லை.

## 1.4. சமூதாய நிலை

**(அ) சதுசேயர், குருக்கள், செல்வந்தர்**

மக்களின் சமய தலைவர்களாகவும், ஆளுநர்களாகவும் இவர்களே பணியாற்றினார்கள். இவர்கள் சட்டத்தை நுணுக்கமாக கடைப்பிடிப்பதோடு பஞ்சாகமத்தை மட்டுமே ஏற்றுக்கொண்டார்கள். ஓரே இறைவனை விசுவசித்தார்கள். மரணத்தின்பின் வாழ்வு, இறைதூதர், உயிர்ப்பு ஆகியவற்றை விசுவாசிக்கவில்லை. சாதோக்கின் குருக்கள் பரம்பரையினராவர். மேல் மட்டத்தினர், உயர் குலத்தோர், செல்வந்தர் ஆவர்.

**(ஆ) மூப்பர்கள்**

நாடு கடத்தல் காலத்தில் பபிலோனியாவில் தோன்றியவர்கள். இவர்கள் பரிசேயரின் தலைவர்கள். பபிலோனியாவில் ஆலயம் இல்லாததால் இறைவார்த்தையைப் பிரதி செய்தல் இவர்களது பொறுப்பாக இருந்தது. இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட யூத மக்களாவர். கிறிஸ்துவின் காலத்தில் சட்ட அறிஞர்கள் இவர்களே. மக்கள் இவர்களை ‘‘ரப்போனி’’ (குரு) என அழைத்தனர். அதனால் திருத்தூதரும் யேசுவை இவ்வாறே அழைத்தனர்.

**(இ) பரிசேயர்**

பரிசேயர் என்றால் மற்றவர்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்பது பொருள். இவர்கள் வெளிச்சடங்கு முறைகளில் மட்டும் விசேட கவனம் செலுத்தினார்கள். அழியா ஆன்மாவையும் வானதூதர்களையும் விசுவசித்தார்கள். யூதரல்லாதவர்களிடமிருந்து இவர்கள் விலகியே இருந்தார்கள். யூத சமூகத்திலிருந்த பெரிய, பலம் வாய்ந்த சமயக் குழு இவர்களாவர். யூத மறையையும் சட்டத்தையும் ஏனைய யூதர்களைவிட மேலாக பின்பற்றுவதற்காக அவர்கள் குழுவாக வேறுபட்டு நின்றார்கள்.

**(ஈ) சமாரியர்.**

ஒரே இனத்தவராக இருந்த போதிலும் சமய ரீதியாக ஒதுக்கப்பட்டிருந்ததால் வேறாக வாழ்ந்தார்கள். காரணம் அவர்கள் அசீரியாவில் அடிமைகளாக இருந்த காலத்தில் தாம் பின்பற்றிய யூத மறையை - பிறமத நம்பிக்கை, வழிபாடுகளுடன் கலந்தனர். அவர்கள் பஞ்சாகமத்ததை மட்டும் ஏற்றக்கொண்டார்கள். கெரிசிம் மலையில் ஆலயம் எழுப்பி அதில் வழிபட்டனர். ஏனைய யூத மக்கள் சமாரியா ஊடாக பயணிப்பதில்லை. காரணம் அவ்வாறு செல்பவர்களுக்கு சமாரியர் தீங்கிழைத்தார்கள். யூதர்கள் அவர்களை பிற இனத்தவருக்குக் கீழான நிலையில் கணித்தார்கள்.

**(உ) எசேனியர்**

கி.பி 64 வரை எசேனியர், சாக்கடலுக்கு அருகாமையில் கும்ரான் நகரில் வாழ்ந்தார்கள் என வரலாற்றை கும்ரான் ஏடுகளில் காண்கிறோம். அண்மையில் செய்த அகழ்வாராய்ச்சிகளிலிருந்து அவர்கள் குருக்கள் பரம்பரையிலிருந்து வந்தவர்கள், தபசு வாழ்க்கை வாழ்ந்தவர்கள் என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

## 1.5. மக்கள் வாழ்க்கை

இக்காலத்தில் இஸ்ராயேல் மக்களின் வாழ்வில் பெரிதாக மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டதாக தெரியவில்லை. பொதுமக்களிடமிருந்து தேவாலய வரி சேகரித்து உயர்மட்ட மக்கள், செல்வநிலையில் வாழ்ந்தார்கள். விசேடமாக எருசலேமுக்கு அண்மையில் வாழ்ந்து குரு மரபினர் பொதுமக்களை வருத்தி தாங்கள் ஏற்படுத்திக் கொண்ட சட்டம், சம்பிரதாயத்திற்கேற்ப உயர்நிலை வாழ்க்கை வாழ்ந்தார்கள். இடையர் வாழ்விலும் விவசாயத்திலும் மக்களின் பொருளாதாரம் தங்கியிருந்தது. கலிலேயாவில் பலர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டனர். (லூக் 5:1-11, மத் 4:18-22, மாற் 1:16-20) விவசாயம் பற்றிய மனநிலையை புதிய ஏற்பாட்டில் காணலாம். (மத் 13:1-9, 13:24-30, யோவா 15:1-11)

கலிலேயர்களைப் பலயீனர்கள், அறிவற்றவர்கள் என வெளி உலகினர் எண்ணினர். சமாரியர் தமது பிரதேசத்தில் மட்டுமே வாழ்ந்தனர். அவர்கள் முரட்டுக் குணம் படைத்தவர்கள். யூதேயாவில் வாழ்ந்த பலர் கிரேக்கமொழி கற்று அறிவாளிகளாயிருந்தனர். தலைக்கணம் கொண்டவர்களும் எருசலேமிற்கருகில் வாழ்ந்தனர். இவர்கள் இரட்டை வாழ்க்கை வாழ்ந்தனர். மோசேயின் சட்டத்தை நுணுக்கமாகக் கடைப்பபிடிப்பதாக கூறி மக்களிடமிருந்து ஆலயவரி சேகரித்து, சுகபோக வாழ்க்கை வாழ்ந்தனர். மொழிக்கேற்ப கிரேக்கமொழி கற்றோர், அரமெய்க் மொழி பேசுவோர் என சமுதாயம் பிரிக்கப்பட்டிருந்தது.

## 1.6. அரசியல் பின்னணி

அக்காலத்தில் பலஸ்தீனா முழுவதிலும் பரவியிருந்த அரசியல், சமய பின்னணி பற்றி சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

கிரேக்க கலாச்சாரம் பலஸ்தீனா முழுவதிலும் நன்றாக பரவியிருந்தது. பலஸ்தீனாவை உரோமைப் பேரரசன் ஆட்சி செய்தான். உரோமைப் பேரரசனால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களால் யூதேயா, சமாரியா, கலிலேயா ஆட்சிசெய்யபபட்டது. அவர்கள் பிரதி அரசராக செயற்பட்டனர். கிரேக்க அரசியல் பின்னணியின் அடிப்படையிலேயே இங்கும் அரசியல் பின்னணி அமைக்கப்பட்டிருந்தது. எகிப்திலும் அலெக்சாந்திரியாவிலும் வாழ்ந்த யூத மக்கள் கிரேக்க மொழியை தமது தாய்மொழியாகக் கொண்டனர். யூதேயாவின் நீதிமன்றமான ஆலோசனை சபை "செனற்ரின்" என அழைக்கப்பட்டது. இச்சபையில் கீழ்காண்போர் அங்கம் வகித்தனர்.

- குருமரபினர் அல்லது 24 குடும்பங்களிலும் உள்ள பிரதான குருக்கள் (1குறி 2)
- வயது முதிர்ந்த, அனுபவம் வாய்ந்த மக்கள் தலைவர்கள் (மாற்11:27)
- சட்ட வல்லுநர் அல்லது யூத சட்டம் பற்றிய அறிஞர்

யூதமக்களின் நீதிமன்ற உரிமைகள் அனைத்தும் செனற்ரின் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. கூட்டம் ஆலயத்திலேயே நடைபெற்றது. அரசியல் ரீதியாக உரோமைப் பேரரசுக்கு வரி செலுத்தப்பட்டது. வரி அறவிடுவோர் "வரிதண்டுவோர்" என அழைக்கப்பட்டனர்.

நடைமுறையிலிருந்த அரசியல் முறைக்கு சார்பாக மக்கள் இருந்த அதேவேளை அதற்கு எதிராகவும் சில மக்கள் இருந்தனர். செலொட்டியரும் சிகாரியரும் புரட்சியின் மூலம் சுதந்திரத்தை எதிர்பார்த்தனர். பரிசேயர் கிரேக்க – உரோம கலாச்சாரத்தை வெறுத்தாலும் சதுசேயர் அதனை ஏற்றுக்கொண்டனர்.

## 1.7. சமயப் பின்னணி

எருசலேம் ஆலயத்தில் சமய சடங்குகளை ஆரோனின் மரபிலிருந்து வந்த குருக்களே ஆற்றினர். தினமும் பலி ஒப்புக் கொடுத்தல், பலிப்பீடத்தில் நெருப்பு மூட்டுதல், விளக்கேற்றுதல், ஒப்புக்கொடுக்கும் உரொட்டி தயாரித்தல்,

சட்டங்களை அறிவித்தல் ஆகியன அவர்களின் பணியாக இருந்தது. ஆலயம் தூய்மையானது. தலைமைக் குரு ஒருவரும் இருந்தார். செபக்கூடங்கள் (synagogue) பல பலஸ்தீனாவில் இருந்தன. சபத்நாள் செபத்திற்காக இவை பயன்படுத்தப்பட்டன. எல்லா செபக் கூடங்களிலும் பத்துக்கட்டளையும் இறைவாக்குகளும் வைக்கப்பட்டிருந்தது. செபித்தலும் இறை வார்த்தைக்கு விளக்கம் கொடுத்தலும் அங்கே நடைபெற்றன. திருமறையின்படி தூய்மையாக்கும் சடங்குகள் மட்டில் விசேட கவனம் செலுத்திய, வலிமை மிகு குழு சதுசேயராவர். தானதர்மம் செய்தல், உபவாசமிருத்தல் ஆகியன சமய சம்பிரதாயமாக இருந்தது. சபத், சிறப்பான – சமய அனுஷ்டிப்பு நாளாகும். அவர்கள் அதனை நுணுக்கமாகக் கடைப்பிடித்தார்கள். முக்கியமான திருவிழாக்கள் சில இருந்தன. அவற்றின்போது மக்கள் ஆலயத்தில் ஒன்றுகூடினர். சிறப்பான செபப் புத்தகம் திருப்பாடல்களாகும். முக்கிய வழிபாட்டுத்தலம் எருசலேம் ஆலயமாகும். முக்கிய திருவிழாக்கள் நான்காகும். பாஸ்கா விழா சிறப்பான கொண்டாட்டமாகும்.

அவ்வாறே மக்கள் சட்ட திட்டங்கள், சடங்குகளைப் பின்பற்றுவதற்கேற்ப தூயவர்கள், தூய்மையற்றவர்கள் என கணிக்கப்பட்டனர். பஞ்சாகமத்தின் சட்டதிட்டங்களும் முன்னோர்களின் சம்பிரதாயமும் மறைச் சட்டங்களாயிருந்தன. எருசலேம் ஆலயம், செபக் கூட மண்டபம், புனிதத்தலம் ஆகியன சமய திருத்தலமாக விளங்கின. ஒப்புக் கொடுக்கப்பட்ட பலிகள்:- எரி பலி, பங்கு கொள்ளும் பலி, பாவப் பரிகார பலி, தானியப் பலி, அப்பம் ஒப்புக்கொடுக்கும் பலி என்பனவாகும்.

## 1.8. பொருளாதார பின்னணி.

"ஷெகல்" என்பது அவர்களின் பணத்திற்குப் பயன்படுத்தப்பட்ட பொதுவான பெயராகும். பெருங் குடியினரும் மதத் தலைவர்களும் செல்வந்தர்களாக இருந்தபோதிலும் பலஸ்தீனாவின் பொதுமக்கள் ஏழைகளாக இருந்தார்கள். இவர்களின் முக்கியமான தொழில்கள்:- விவசாயம், மந்தை மேய்த்தல், மீன் பிடித்தொழில், மரவேலை என்பனவாகும். தொழிலுக்கேற்ப ஆளுநர், தொழிலாளர், கமக்காரர், கூலியாட்கள் என சமுதாயம் பிரிக்கப்பட்டிருந்தது. அன்றைய யூத சமுதாயத்திலே வரிவசூல் முறைகள் இரண்டு இருந்தன. அவை:- ஆலயத்திற்கு செலுத்த வேண்டிய வரி, உரோமை அரசுக்கு செலுத்த வேண்டிய வரி ஆகியனவாகும். வெளியூர்களில் வாழும் எல்லா யூதர்களும் வரிப்பணத்தை செலுத்தவதற்காக வருடந்தோறும் ஆலயத்திற்கு வருகைத்தர வேண்டும். குருக்கள், வரி பணத்தினால் சுகபோக வாழ்க்கை வாழ்ந்தனர். தமது ஒரே தலைவர் ஆண்டவர் என்பதால் உடல் வரி, இடம் வரி என உரோமை அரசாங்கத்திற்கு வரி செலுத்த அவர்கள் விரும்பவில்லை. நாணயத்தில் சீசரின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தமை யூத மக்களுக்கு அருவருப்பானதாக இருந்தது. அவர்கள் அதை சிலை வழிபாடாக கருதினார்கள். அவர்கள் மேலும், உரோமை "தினாரி" நாணயத்தையும், கிரேக்க "திராக்மா" வெள்ளி நாணயத்தையும் பயன்படுத்தினர். ஆலய வரி வெள்ளி நாணயமாக செலுத்தப்பட்டது,

## 1.9. முக்கியமான விழாக்கள்

**முன்னுரை**

இஸ்ராயேல் மக்கள் வருடந்தோறும் முக்கிய திருவிழாக்களைக் கொண்டாடுவதற்காக குடும்பத்தினருடன் எருசலேமிற்கு வருகை தந்தனர். அத் திருவிழாக்கள்:-

- (புளிப்பற்ற அப்பங்களை உண்ணும்) பாஸ்கா திருவிழா (லேவி 23:5-8, விப 23:14-17)
- பெந்தகோஸ்தே விழா (லேவி 23:15)
- கூடாரவிழா எனப்படும் அறுவடை விழா (விப 23-16)
- அர்ப்பண விழா (யோவா 10:22)

**இவற்றைத் தவிர மேலும் சமய கொண்டாட்டங்கள்**

(அ) ஓய்வு நாள்

(ஆ) பச்சாத்தாப நாள்

(இ) தானிய விழா

**பாஸ்கா விழாவோடு தொடர்புடைய இரண்டு விழாக்கள்:-**

- பண்டைய இடையர்கள் திருவிழா
- கானான் நாட்டின் விளைச்சல் திருவிழா

### 1. பாஸ்கா விழா

பண்டைய இடையர்கள் தமது மந்தைகளைப் புதிய புல் வெளிகளுக்கு இட்டுச் செல்லும் முன் சமய சடங்குகளை நிறைவேற்றினார்கள். செம்மறி ஆட்டை அல்லது ஆட்டுக் குட்டி ஒன்றைக் கொன்று அதன் இரத்தத்தைக் கூடாரங்களின் முன் உள்ள தூண்களில் பூசினார்கள். மந்தைகளுக்கு இறை பாதுகாப்பை வேண்டுவதே இதன் கருத்தாக இருந்தது. இஸ்ராயேலர் இந்த விழாவுக்கு தமது ‘‘கடத்தல்’’ அதாவது ‘‘எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று அங்கிருந்து கடந்து செல்லல்’’ என்ற புதிய கருத்ததைக் கொடுத்து, அதனை நிறைவேற்றினார்கள். கானானியர் தானியங்களை அறுவடை செய்த பின்னர் முதலாவதாக புளியாத அப்பம் செய்து உண்டார்கள். (பழைய புளிக்காரத்தை சேர்க்காது புதிய புளிக்காரம் செய்யும் வரை) அன்றிரவு அவர்கள் எகிப்திலிருந்து வெளியேறும்போது அவர்களது மா புளிப்படைந்திருக்கவில்லை. முதல் நாள் புளிக்காத அப்பத்தையே அவர்கள் உண்டார்கள். அதனால் இந் நிகழ்வை விடுதலைப்பயணத்துடன் தொடர்புபடுத்தி திருவிழாவைக் கொண்டாடினார்கள். இந்த விழா நிசான் மாதம் 14ம் திகதி (பங்குனி அல்லது சித்திரை) கொண்டாடப்பட்டது. இம்மக்கள் கானான் நாட்டில் குடியேறிய பின்னர் இந்த இரண்டு விழாக்களையும் ஒன்றிணைத்து – அதாவது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றதையும் புளிக்காத அப்பம் உண்டதையும் நினைவிற் கொண்டு பாஸ்கா விழாவைக் கொண்டாடினார்கள்.

### 2. பெந்தகோஸ்தே விழா

பெந்தகோஸ்தே என்பது (பென்டகொஸ்டரிஸ்) கிரேக்க சொல்லாகும். அது 50 நாள் என பொருள்படும். இதனை வார விழா எனவும் கூறுவர். (வி.ப 34:22, லேவி 23:15) முதல் விளைச்சலை அறுவடை செய்த அன்று கதிர்களைப் பலிபீடத்தின் முன்வைப்பர். ஏழு வாரங்களின் பின்னர் 50ம் நாள் இவ்விழா கொண்டாடப்படும். அவ்வேளை புளித்த அப்பம் இரண்டை காணிக்கையாக செலுத்துவர். இது கானானியரின் விழாக்களைப் பின்பற்றியதாகும். புளித்த அப்பம் ஒப்புக்கொடுத்த பின்னர் ஆட்டுக்குட்டி அல்லது காளை மாட்டைப் பலியிடுவர். பிற்காலத்தில் இந்த விழா சீனாய் உடன்படிக்கையுடன் தொடர்புபடுத்தப்பட்டது. இது அறுவடை விழா. திருத்தூதர் பணியின் இரண்டாம் அதிகாரத்தில் குறிப்பிடப்படும் பெந்தகோஸ்தே திருநாள் இதுவாகும். அன்று பழைய பெந்தகோஸ்தே திருநாளைக் கொண்டாடுவதற்காக எருசலேம் ஆலயத்தில் மக்கள் ஒன்று கூடினர். கிறிஸ்து உயிர்த்து 50ம் நாளில் தூய ஆவி திருத்தூதரில் இறங்கினார். இக் கருத்துக்களை ஒன்றிணைத்து இன்று பெந்தகோஸ்தே திருவிழா கொண்டாடப்படுகிறது.


### 3. கூடார விழா

இந்த விழா நிலத்தின் பலனை (வீட்டுத் தோட்ட பழங்களை) சேகரித்ததன் பின்னர் ஏழாம் மாதம் பதினைந்தாம் நாளன்று கொண்டாடப்படுகிறது. (லேவி 23:33-43) தினமும் காலையும் மாலையும் எரிபலி ஒப்புக் கொடுப்பர். இறுதி நாளன்று பெரியளவில் எரிபலி ஒப்புக்கொடுக்கப்படும். (லேவி 23ம் அதிகாரம்) இது பிற மதத்தினரான கானானியரின் வழிபாட்டு முறையாகும். இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் வாழ்ந்த கூடார வாழ்வு இங்கு நினைவுகூரப்படுகிறது.

### 4. ஆலய அர்ப்பண விழா

நான்காம் அந்தியோக் அரசன் யூதர்களுக்கு பலாத்காரமாக கிரேக்க கலாச்சாரத்தையும் கிரேக்க சமயத்தையும் கற்பிக்க முயற்சி செய்தான். பரிசுத்த ஏடுகளை எரித்து யூத சட்ட திட்டங்களைப் பின்பற்றுவதைத் தடைசெய்தான். அவன் கி.மு 167 மார்கழி 25ம் நாள் ஆலயத்திலே சியுஸ் கடவுளின் சிலையை ஸ்தாபித்து வைத்தான். பின்னர் பலிப்பீடத்தில் பன்றிகளைப் பலியிட்டான். மூன்று வருடங்களின் பின்னர் மக்கபியஸ் அரசன் மேற் கூறப்பட்ட அந்தியோக் அரசனை தோற்கடித்த பின்னர் ஆலயம் மீண்டும் அர்ப்பணம் செய்யப்பட்டது. மார்கழி 25ம் நாளிலிருந்து 10 நாட்கள் வரை திருநாள் கொண்டாடப்பட்டது. இவ் விழாக்காலத்தில் மக்கள் ஒலிவ் கிளைகளைக் கைகளில் ஏந்தி திருப்பாடல் 30ஐ பாடிய வண்ணம் ஆலயத்திற்கு ஊர்வலமாக சென்றனர். (2மக் 10:6-8) அவ்வாறு செல்லும்போது திருப்பாடல் 113 லிருந்து 118 வரை பாடிக்கொண்டு சென்றனர். ஊர்வலம் ஆலயத்தையடைந்த பின் எரி பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. எல்லா வீடுகளிலும் விளக்கேற்றப்பட்டது. முதலாம் நாளில் ஒரு விளக்கும் தினமும் ஒவ்வொரு விளக்கை கூட்டியும் இறுதி நாளில் பத்துமாக விளக்கேற்றினர். பின்னர் இவ்விழா ஒளி விழா என பெயரிடப்பட்டது.

1.10. கிறிஸ்துவின் காலத்து புனித நாட்டின் படம்



## இரண்டாம் பாடம்

## 2. பைபிள் (திருவிவிலியம்) பற்றிய பொதுவான அறிமுகம்.

### 2.1 அறிமுகம்

பைபிள் என்ற சொல் ''பிபிலோஸ்'' என்ற கிரேக்க சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். அதன் கருத்து புத்தகம் ஆகும். அவ்வாறே ''பிபிலியா'' என்ற கிரேக்க சொல்லின் பொருள் புத்தகங்கள் என்பது. கிறிஸ்தவர்களின் புனித நூலை ''பைபிள்'' என்று அழைக்கத் தொடங்கியவர் தூய கிளமெண்ட்.

திருவிவிலியம் ஒரு தனி நூலைப் போன்று புத்தகசாலையாகவும் இருக்கிறது. அதில் 73 புத்தகங்கள் உள்ளன. அவை 1500 ஆண்டுகளுக்குள் எழுதப்பட்டது.

திருவிவிலியம் என்பது விஞ்ஞான, உயிரியல், வரலாறு நூல் அல்ல. அது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஏற்பட்ட அன்பின் கதையாகும். இறைசித்தம், மனித இயல்பு, மீட்புக்கான வழி பற்றிய விடயங்கள் அதிலே குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதனுள் எழும் மூன்று பிரதான வினாக்களுக்கு சரியான விடைகளைத் தரும் ஒரே நூல் திருவிவிலியமாகும்.

**அவ் வினாக்களாவன:-**

i. நான் யார்?
ii. நான் எதற்காக இவ்வுலகில் வாழ்கிறேன்?
iii. உலகில் எனக்குரிய இடம் என்ன?

**திருவிவிலியத்தில் இறைசித்தம் மூன்று விதங்களில் காட்டப்படுகிறது. அவை**

i. மனிதவாழ்வின் நிகழ்வுகள் வழியாக.
ii. கவிதை, சங்கீதம், கதைகள் வழியாக.
iii. அடையாளங்கள் வழியாக.

இறையூக்கத்தினால் இறைவனைப் பற்றியும் அவர் தேர்ந்தெடுத்த மக்களைப் பற்றியும் எழுதியிருப்பதால் அது ''திருவிவிலியம்'' எனப்படுகிறது. பரிசுத்த நூல், இறைவார்த்தை, சட்டம் என்பன அதற்கான வேறு பெயர்களாகும்.

திருவிவிலியம், கத்தோலிக்க – கிறிஸ்தவ – யூத மதங்களுக்கு பொதுவான, சமமான, மறை பெறுமதி வாய்ந்த நூலாகும். அவ்வாறே உலகில் அதிக மொழிகளுக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. – உலகில் அதிக அச்சு பிரதி செய்யப்படுகின்ற – விற்பனை செய்யப்படுகின்ற – வாசிக்கப்படுகின்ற – எக்காலத்திலும் பெறுமதி வாய்ந்த அதிசயமான நூல் இதுவேயாகும்.

**திருவிவிலியத்தின் இரு பெரும் பிரிவுகள்:-**

**i.** பழைய ஏற்பாடு – இறைவன் இஸ்ராயேலருடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு பற்றியது.
**ii.** புதிய ஏற்பாடு – இறைவன் அனைத்து மனித குடும்பங்களோடும் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பு பற்றியது. (எபி 1/1-3)

## 2.2 நோக்கமும் தலைப்பும்

### 2.2.1 நோக்கம்

திருவிவிலியம் பல்வேறு ஆசிரியர்களினால், பல்வித காலத்தில் பல்வித நோக்கங்களுடன் எழுதப்பட்டது. ஆயினும் திருவிவிலியம் முழுவதிலும் முக்கிய நோக்கம் இறை அரசாகும். இறை அரசு பற்றிய அவரது உடன்படிக்கை பழைய ஏற்பாட்டிலும் இறையரசின் மேன்மை புதிய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடக்கத்திலிருந்தே ஆண்டவர், விண்ணரசை பெற்றுத்தருவதற்காக எவ்வாறு செயற்பட்டார் என்பதை திருவிவிலியம் வெளிப்படுத்துகிறது. அவ்வாறே விண்ணரசைப் பெற்றுக் கொள்வதற்காக மனிதன் இறைவனுடன் உடன்படிக்கையில் பிரவேசித்து அதனைக் கடைப்பிடிக்க வேண்டிய விதம் பற்றி வெளிப்படுத்துகிறது.

**2.2.1 தலைப்பு**

திருவிவிலியத்தின் முக்கிய தலைப்பு யேசு ஆவார். பழைய ஏற்பாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட விசேட மக்கள் மூலம் இறைவனால் தமது வருகைக்கு ஆயத்தம் செய்யப்பட்டவர் - புதிய ஏற்பாட்டில் தனது மக்களிடம் வந்தவர். – ஆதியிலிருந்தே இறை தந்தையுடன் இருந்தவர் யேசு கிறிஸ்து ஆவார். **(லூகா 24:27, எபேசி 1:9-10, 1பேது 1:20)**

## 2.3 நூல் வகைப்படுத்தல்

| திருவிவிலியம் | பழைய ஏற்பாடு | புதிய எற்பாடு | நூல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| எபிரேயர் | 39 | – | 39 |
| கிறிஸ்தவம் | 39 | 27 | 66 |
| கத்தோலிக்கம் | 46 | 27 | 73 |

**பழைய ஏற்பாடு**

- **எபிரேய பிரிவு**
  - **சட்ட நூல் (தோரா)**
  - **இறைவாக்கினர் நூல் (நபிகள்)**
  - **எழுத்தாக்கம் (கெட்டுபிம்)**
- **கத்தோலிக்க பிரிவு**
  - **சட்ட நூல்**
  - **வரலாற்று நூல்**
  - **இறைவாக்கினர் நூல்**
  - **ஞான நூல்**

- கத்தோலிக்க பிரிவின்படி பழைய ஏற்பாட்டின் நூல்கள் நான்கு வகையாகும். அவை:

(i) **சட்ட நூல் - பஞ்சாகமம்**

தொடக்கநூல், விடுதலைப்பயணம், லேவியர், எண்ணிக்கை, இணைச்சட்டம். (ஐந்து நூல்)

(ii) **வரலாற்று நூல்கள்**

யோசுவா, நீதித்தலைவர்கள், ரூத், 1சாமுவேல், 2சாமுவேல், 1அரசர், 2அரசர், 1குறிப்பேடு, 2குறிப்பேடு, எஸ்ரா, நெகேமியா, தோபித்து, யூதித்து, எஸ்தர், 1மக்கபேயர், 2மக்கபேயர். (16 நூல்கள்)

(iii) **ஞானாகம நூல்கள்**

யோபு, திருப்பாடல்கள், நீதிமொழிகள், சபை உரையாளர், இனிமைமிகு பாடல், சாலமோனின் ஞானம், சீராக்கின் ஞானம், (07 நூல்கள்)

(iv) **இறைவாக்கினர் நூல்கள்**

எசாயா, எரேமியா, எசேக்கியேல், புலம்பல், பாரூக்கு, ஒசேயா, யோவேல், ஆமோஸ், யோனா, மீக்கா, அபகூக்கு, செப்பனியா, ஆகாய், ஒபதியா, செக்கரியா, நாகூம், மலாக்கி (17 நூல்கள்)

- **சட்டநூல்கள் (பஞ்சாகம்)**

திருவிவிலியத்தில் முதல் ஐந்து நூல்களுள் (பஞ்சாகமம்) சட்ட நூலில் அடங்கும். இந்த ஐந்து நூல்களிலுமுள்ள பொதுவான தலைப்பு – கருத்து, இஸ்ராயேல் மக்கள் இறை மக்களாக நியமனம் பெறுதலாகும். அதாவது எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றுக் கொள்ளும் நிகழ்வாகும். இந்த பஞ்சாகமம் முழுவதிலும் விசேட ஒருவராக காட்டப்படுபவர் மோசேயாவார். சீனாய் உடன்படிக்கை சிறப்பான ஒரு கேந்திர நிகழ்வாகும். இஸ்ராயேலரின் சட்டங்கள் சுருக்கமாக இதில் அடங்குகிறது. இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு பற்றிய அடிப்படை உண்மை பஞ்சாகமத்தின் தொடக்கநூலில் குறிப்பிடப்படுவதோடு இறைவன் அனைத்தையும் படைத்தவராக எம்முடன் கதைக்கிறார். விடுதலைப் பயணத்தில் இஸ்ராயேல் மக்களின் விடுதலையையும் லேவியராகமத்தில் குருக்கள் இனத்தாரின் பிறப்பு வரலாறும் எண்ணாகமத்தில் எகிப்திலிருந்து புறப்பட்ட மக்களின் எண்ணிக்கையும் குறிப்பிடப்படுவதோடு குரு குல சடங்கு முறைகளும் காட்டப்படுகிறது. இணைச்சட்டத்தின் மூலம் சீனாய் உடன்படிக்கையும் மோசேயின் சட்டம் பற்றிய ஆழமான மறை உண்மையும் காட்டப்படுகிறது.

- **வரலாற்று நூல்கள்**

இறந்த கால நிகழ்வுகள் பற்றிய செய்திகள் உள்வாங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்திற்கு வழிகாட்டப்படுகிறது. இஸ்ராயேல் அரசத்துவம் காட்டப்படுகிறது. மோசேயின் பின் யோசுவாவின் தலைமைத்துவம் பற்றி பேசப்படுகிறது. நீதிபதி இல்லாவிடினும் தலைவர்கள் பற்றிய வரலாற்று செய்திகள் உள்ளன. தாவீது, சாலமோன் அரசர்களின் பதவி காலம் வர்ணிக்கப்படுகிறது. பபிலோனிய அடிமைத்தனமும் எஸ்ரா, நெகேமியா ஆகியோர் எருசலேம் ஆலயத்தைக் கட்டியெழுப்பிய வரலாறும் எழுதப்பட்டு உள்ளது. பொறுப்படன் கூடிய மகனைப் பற்றி தோபித்து நூலில் குறிப்பிடப்படுகிறது. யூதித்து, எஸ்தர் நூலில் வீரச் செயல்கள் பற்றிய செய்திகளைக் காண்கிறோம். புழைய ஏற்பாட்டில் முதலாவதாக மறைசாட்சியானவர் மக்கபேயர் என, மக்கபேயர் நூல் காட்டுகிறது.

- **ஞானாகம நூல்கள்**

ஞானம், இறைவனுடன் தொடர்புடையது என ஞான நூல்களில் காணக் கூடியதாயிருக்கிறது. ஞானத்தின் ஆரம்பம் இறைவன் என காட்டப்படுகிறது. யோபு நூல் மேன்மையான ஞான நூலாகும். அது நீண்ட உரையாடல் பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. இறைவனிடம் செபிப்பதற்கு வழிகாட்டும் சங்கீதங்கள் அடங்கிய நூல் திருப்பாடலாகும். இந்நூல் திருச்சபையின் சிறப்பான செபமாக அமைந்துள்ளது. ஆண்டவரின் ஞானம் உள்ளோருக்கு மகிழ்ச்சி கிடைப்பதாக நீதி மொழிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- **இறைவாக்கினர் நூல்**

இறைவாக்கினர் என்றால் இறைவனின் பெயரால் பேசுபவர்களாவர். இஸ்ராயேல் இறைவாக்கினர், இறைவனுடன் தொடர்புடைய இறைவனின் சீடத்துவம் பெற்றவர்களாவர். இறைவனின் வார்த்தையை காலத்திற்கு, நாட்டிற்கு ஏற்ற விதத்தில் மக்களுக்கு அறிவிப்பதே இவர்களின் முக்கிய பணியாக இருந்தது. இஸ்ராயேல் வரலாற்றிலே முக்கிய இடத்தைப் பெற்ற இவர்கள் தனியாகவோ குழுவாகவோ வாழ்ந்தார்கள். இறைவாக்கினர் நூல் இறைவாக்கினரால் எழுதப்பட்டது அல்ல. அவை இறைவாக்கினரின் மரணத்தின் பின் ஒன்று சேர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. சிலவேளை அவர்களின் சீடர்களினால் எழுதப்பட்ட சில பகுதிகளும் உள்வாங்கப்பட்டிருக்கலாம். புத்தகத்தின் அளவிற்கேற்ப இறைவாக்கினர் நூலை கீழ் கண்டவாறு இரு வகைப்படுத்தலாம்.

(i) பெரிய இறைவாக்கினர் நூல்
(ii) சிறய இறைக்கினர் நூல்

**பெரிய இறைவாக்கினர் 3 பேர்**

எசாயா, எரேமியா, எசக்கியேல்

**சிறிய இறைக்கினர் 12 பேர்**

ஓசேயா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீக்கா, நாகூம், அபக்கூக்கு,செப்பனியா, ஆகாய், செக்கரியா, மலாக்கி

**இவர்கள் பேசிய முக்கிய தலைப்புக்கள்:-**

* சமூக நீதி
* ஒரே இறை கொள்கை
* இறைவனின் நாள்
* துன்புறும் ஊழியன்
* சட்டத்திற்கு மதிப்பளித்தல்
* மெசியா மனநிலை
* உடன்படிக்கை மனநிலை

**இறை செய்தியை இறைவாக்கினர்,**

- காட்சி வழியாக
- செவிமடுத்தல் வழியாக
- உள்ளார்ந்த ஆற்றல் வழயாக பெற்றுக் கொண்டனர்.

**எசயாவின் நூல் கி.மு 765-687**

இஸ்ராயேலினதும் யூதேயாவினதும் வீழ்ச்சி பற்றியும் இறைவனில் நம்பிக்கையின்மையால் முழு இனமும் பெற்ற தண்டனை பற்றயும் இந் நூலிலே குறிப்பிடப்படுகிறது. மெசியாவைப் பற்றிய முதல் இறைவாக்கும் இந் நூலில்தான் உள்ளது. (2:1-5, 7:10-11) இறைவனின் புனிதத்தன்மை, வலிமை, சர்வவல்லமை ஆகியவையும் இதில் காணலாம். நம்பிக்கையின் இறைவாக்கினர் என திருவிவிலியத்தில் இவர் அறிமுகப்படுத்தப்படுகிறார்.


**எரேமியாவின் நூல் கி.மு 646**

இவரது நூலின் தலைப்பு அழிவு ஆகும். (1-10, 20:8) அமைதியான இயல்புடைய இவர் - மக்களுடன், அரசருடன், குருக்களுடன் பொய்யான இறைவாக்கினருடன், அரசு முழுவதுடனும் கண்டிப்பானவராக, அவருக்கு சவாலாக வாழ்ந்த விதம் அவரது நூலிலே குறிப்பிடப்படுகிறது. ஒருவரின் செயலுக்கேற்பவே அவருக்கு நன்மையும் தீங்கும் ஏற்படுகிறதென்றும் மனிதனின் தீய உள்ளத்தின் பலனான பாவத்தினால் இறைவனுடனான நட்பு முறிந்துவிடுவதாகவும் அவர் கூறுகிறார்.

**எசேக்கியேல் நூல் கி.மு 586**

இவர் ஒரு குருவாக இருந்தாலும் இவரது கண்ணோட்டம், நடத்தை எல்லாமே தூய்மையின் சட்டத்தை ஒத்திருந்தது. அடையாளத்துடன் செய்தியை முன்வைக்கிறார். எருசலேமின் அழிவைப்பற்றி எழுதியுள்ளார். நாடு கடத்தல் பற்றிய உவமைகள் மூன்றை எழுதியுள்ளார். அவை:-

**i.** உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு (37:1-14)
**ii.** ஆண்டவர் நல் ஆயன் (34:11-22)
**iii.** கோல்கள் இரண்டைப் பற்றிய உவமை (37:15-28)




**i. வரலாற்று நூல்**

மாற்கு, மத்தேயு, லூக்கா, யோவான், திருத்தூதர் பணி (ஐந்து நூல்கள்)

**ii. திருமுகங்கள்**

**(அ) பவுலின் திருமுகங்கள்**

உரோமர், 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசையர், 1 தெசலோனிக்கர், 2 தெசலோனிக்கர், 1திமொத்தேயு, 2திமொத்தேயு, தீத்து, பிலமோன் (13 நூல்கள்)

**(ஆ) பொது திருமுகங்கள்**

எபிரேயர், யாக்கோபு, 1 பேதுரு, 2 பேதுரு, 1 யோவான், 2 யோவான், 3 யோவான், யூதா ( 8 நூல்கள்)

**iii. இறைவாக்கு நூல்**

திருவெளிப்பாடு (1 நூல்)

**மாற்கு நற்செய்தி**

கி.பி 65-70 காலப் பகுதியில் எழுதப்பட்டது. இவரின் சின்னம் சிங்கம். உரோமையிலுள்ள பிற இனத்தவர்களுக் காக எழுதப்பட்டது. 16 அதிகாரங்களைக் கொண்ட சுருக்கமான நற்செய்தி இதுவாகும். மாற்கு தூய பேதுருவின் சீடராவர். நசரேத்தூர் யேசு உண்மையான இறைவனும் உண்மையான மனிதனுமானவர் என இந் நற்செய்தயில் குறிப்பிடப்படுகிறது. அருங்குறிகள் (புதுமை) 18 குறிப்பிடப்பட்டுள்ளது. நற் செய்தியில் பல பகுதிகள் கலிலேயா மறைத்தூதுப் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பாடுகளின் நற்செய்தி எனவும் குறிப்பிடப்படுகிறது.

**மத்தேயு நற்செய்தி**

கி.பி 80-90 காலப்பகுதியில் எழுதப்பட்டது. சின்னம் மனித முகம். பலஸ்தீனாவில் வாழ்ந்த யூதர்களுக்காக எழுதப்பட்டது. 28 அதிகாரங்களைக் கொண்ட நீண்ட நற்செய்தியாகும். மத்தேயுவுக்கு மட்டுமே உரிய 42% விடயங்கள் இதில் உள்ளன. அவர் யேசுவின் சீடர், வரி அறவிடுபவர். யேசு, வாக்களிக்கப்பட்ட மீட்பர் என்பது இவரது தலைப்பாக உள்ளது. யூத மறையின் நிறைவே கிறிஸ்தவ மறை என்றும், திருச்சபை புதிய இஸ்ராயேல் என்றும் காட்ட முயற்சிக்கிறார். பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பட்ட 70 பகுதிகள் இதில் உள்ளன. கிறிஸ்தவ மறையைத் தழுவுமாறு யூதருக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. இறை அரசின் நற்செய்தி எனவும் இதனைக் கூறலாம். அதிக பகுதிகளில் இறை அரசு பற்றி குறிப்பிடப்படுகிறது.

**லூக்கா நற்செய்தி**

கி.பி அல்லது கி.பி 80-90க்கு பின் எழுதப்பட்டது. எருது இந் நற்செய்தியின் சின்னம். புறவினத்தாருக்காக எழுதப்பட்டது. லூக்காவுக்கே உரிய 55% விடயங்கள் இதில் உள்ளன. யேசுவின் இரக்கமும் மீட்பும் எல்லா மனிதருக்குமே உரியது என்பது இவரின் தலைப்பாக உள்ளது. இவர் புறவின வரலாற்றாசிரியர், வைத்தியர், திறமையான எழுத்தாளர் என்ற கோணத்திலிருந்து யேசுவின் வாழ்க்கை கதையைப் பார்க்கிறார். சிறப்பாக புறவினத்தவருக்கு யூத பழக்க வழக்கங்களை விளக்குகிறார்.

**யோவான் நற்செய்தி**

உவமைகள் ஒன்றுமே இதில் குறிப்பிடப்படவில்லை. கி.பி 90-100 காலப் பகுதியில் அக்காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவ சபையினருக்கு எழுதப்பட்டது. சின்னம் கழுகு. 21 அதிகாரங்களை மட்டுமே உள்ளடக்கியதாயினும் மறை பற்றிய ஆமான கருத்துக்களையுடைய நற்செய்தி. கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை ஆழப்படுத்துவதே இந் நற்செய்தியின் நோக்கமாகும். யேசு மீட்பர் மட்டுமல்ல இறை மகனாயும் இருக்கிறார் என்று உறுதிப்படுத்துகிறார். யேசு சாவை வெற்றி கொண்டவர் என்ற கருத்தை ஆரம்பத்திலிருந்தே முன்வைக்கிறார். ஆண்டவர் தம் மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார் என்பது இதன் தலைப்பாக உள்ளது.

**திருத்தூதர் பணி நூல்**

இது லூக்கா நற்செய்தியின் இரண்டாம் பகுதியாகும். இந்நூல் எழுதப்பட்டதற்கான நோக்கம், மீட்பின் நற்செய்தியை அனைவருக்கும் வெளிப்படுத்துவதானது வரலாற்று நிகழ்வு மட்டுமல்ல அவை மறை பற்றிய உண்மைகளை மற்றவர்களுக்கு அறிவித்தல் என காட்டுவதாகும்.

| | | |
|---|---|---|
| அதிகாரம் 1-5 வரை | – | கிறிஸ்து தன் திருச்சபையுடன் எப்போதும் இருப்பதற்காக தூய ஆவியை அனுப்பிய நிகழ்வு குறிப்பிடப்படுகிறது. |
| அதிகாரம் 6-12 வரை | – | ஸ்தேவான், பிலிப்பு, பேதுரு, பர்னபாஸ் ஆகியோரின் மறையுரை விளக்கப்படுகிறது. |
| அதிகாரம் 13-28 வரை | – | பவுலடியாரின் தூதுரைப்பயணம் மூன்று, உரோமைக்குச் சென்ற வழியில் தூய ஆவியனால் ஆட்கொள்ளப்பட்டதால் உலகெங்கும் நற்செய்தியைப் போதித்தல் பற்றி விளக்கப்படுகிறது. |

**பவுலின் திருமுகங்கள்:-**

13 திருமுகங்களை இவர் எழுதியுள்ளார். இவரால் ஏற்படுத்தப்பட்ட குழுமங்களுக்கான, இவரது அறிவுரை இவற்றில் உள. கொரிந்திய குழுமத்தில் இளைஞர், வளர்ந்தோருக்கிடையே ஏற்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வாக **கொரிந்தியர்** திருமுகம் எழுதப்பட்டது. உரோமை குழுமத்தை இவர் ஆரம்பிக்கவில்லை. அது ஒரு கலப்பு குழுமமாகும். யூதருக்கும் புறவின கிறிஸ்தவர்களுக்குமிடையே பிரச்சினை ஏற்பட்டதால் யூத மறை கிறிஸ்தவ மறையுடன் தொடர்புடையது என காட்டுவதற்காக **உரோமையர்** திருமுகம் எழுதப்பட்டது. புதிய ஏற்பாட்டிலே கிறிஸ்துவின் வாழ்க்கைப்பலியும் அவரைப்பற்றிய மேன்மையான ஆழமான கருத்துக்களும் **பிலிப்பியர்** திருமுகத்திலே முன்வைக்கப்படுகிறது. பவுலடியாரின் திருமுகத்தில் சரியாகவும் சரியான ஒழுங்கு முறையாகவும் மறை முன்வைக்கப்பட்டிருப்பது **எபேசி** திருமுகத்திலாகும். யேசு என்ற மனிதரில் இறைவன் முழுமையாக வெளிப்பட்டுள்ளார் என **கொலோசியருக்கு** எழுதிய திருமுகத்தின் வழியாக காட்டப்படுகிறது. மோசேயின் சட்டத்தை பின்பற்றுவதாலல்ல, நம்பிக்கையினால் மட்டுமே இறைவனுக்கு ஏற்புடையவராக முடியும் என தர்க்க ரீதியாக **கலாத்தி** திருமுகத்தில் குறிப்பிடப்படுகிறது.

கிறிஸ்தவ வாழ்வு பற்றி அறிவுறுத்தி கிறிஸ்துவின் வருகை பற்றி நம்பிக்கையுடனும் பொறுமையுடனும் வாழ்வதற்கு **1, 2 தெசலோனிக்கர்** திருமுகங்களில் வழிகாட்டப்படுகிறது. **தீத்து** திருமுகம் மிகவும் குறுகியது. திருச்சபையில் தலைமை வகிப்போர், பெண்கள், ஆண்கள், பிள்ளைகள், அடியாட்கள் ஆகிய அனைவருக்கும் மறையை எவ்வாறு அளிக்க வேண்டும் என இத்திருமுகங்களில் அறிவுரை வழங்கி காட்டப்படுகிறது. **பிலமோன் திருமுகத்தில்** தனது அடிமையுடன் நல்லுறவு கொண்டு வாழ அழைப்பு விடுக்கிறார். **திமொத்தி திருமுகத்தில்** அவருக்கு அறிவுரை வழங்கும் பவுலடியார் அப்போஸ்தலிக்க மறையின்படி வாழவும் அம் மறையைத் தகுதியுடையோருக்குப் பொறுப்பளிக்குமாறும் வேண்டுகிறார்.

**திருமுகங்கள் இரு வகைப்படும்.**

**(அ) குழுமங்களுக்கு அனுப்பிய திருமுகங்கள்:- (9)**

உரேமையர், 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசையர், 1 தெசலோனிக்கர், 2 தெசலோனிக்கர்

**(ஆ) தனிப்பட்ட திருமுகங்கள்:- (4)**

1 திமொத்தேயு, 2 திமொத்தேயு, தீத்து, பிலமோன்

**பொதுத் திருமுகங்கள்**

ஏழு திருமுகங்கள் இதிலே அடங்குகின்றன. பழைய ஏற்பாட்டை நன்கு அறிந்து கிறிஸ்தவ மறையைத் தழுவிய யூதருக்காக இத்திருமுகம் எழுதப்பட்டது.

- யாக்கோபினால் **யாக்கோபு** திருமுகம் எழுதப்பட்டது. அதில் நற்செயல்கள், நன்நடத்தை ஆகியவற்றிற்கு முக்கிய இடம் அளிக்கிறார்.
- போலிப் போதகர்களைக் கண்டித்து யூத பாரம்பரியத்திற்கேற்ப அவர்களுக்குத் தண்டனையளிக்கக் வேண்டுமென காட்டுவதற்கு **யூதா** திருமுகம் எழுதப்பட்டது.
- **1 பேதுரு, 2 பேதுரு** திருமுகங்களில் தூய பேதுரு தமது திருமுழுக்கை நினைவுறுத்தி என்றோ ஒரு நாள் நாம் இவ்வுலகை விட்டுச் செல்ல வேண்டுமெனவும் விண்ணகம் நோக்கி பயணிக்க வேண்டுமெனவும் காட்டுகிறார்.
- 1,2,3 யோவான் திருமுகங்களில் பேதகர்களைச் சாடுகிறார். இதில் தூய யோவான் கிறிஸ்துவின் இறை இயல்பைப் பற்றியும் அப்போஸ்தலிக்க படிப்பினைகள் பற்றியும் கூறுவதோடு **தூய்மையில்லாத நம்பிக்கை பயனற்றது** என்பதையும் அறிவுறுத்துகிறார்.

யேசு உண்மையானவர், இறை தந்தையின் இறுதி வெளிப்பாடு என காட்டும் **எபிரேய** திருமுக ஆசிரியர் துன்புறுத்தல்களினால் கிறிஸ்தவ நம்பிக்கையை இழந்துவிடக்கூடிய ஆபத்திலிருந்த கிறிஸ்தவர்களைத் தைரியப்படுத்துகிறார். யேசு இறைவாக்கினருக்கும் மோசேக்கும், பழைய ஏற்பாட்டின் குருக்களுக்கும் மேலானவர். மேன்மையான குரு எனற ரீதியில் அவர், பழைய ஏற்பாட்டின் தகனப்பலியை முழுமைப்படுத்துகின்றவர், மீட்பைப் பெற்றுத் தருபவர் என விளக்குகிறார்.

**இறைவாக்கு நூல் (திருவெளிப்பாடு)**

திருவெளிபாடு நூல் தொமீசியன் பேரரசன் காலத்தில் நடைபெற்ற வேத கலாபனை காரணமாக எழுதப்பட்ட நூல் என அறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். இந்நூல் கி.பி 77-90 கால அளவில் எழுதப்பட்டாலும் கி.பி 70ல் எழுதப்பட்ட நூல்களும் உள்ளன.

சின்ன ஆசியாவில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது. யேசுவின் மரணம், உயிர்ப்பு வழியாக இறைவனின் மீட்புச் செயல் நிறைவேற்றப்பட்டதாக வெளிப்படுத்தப்படுகிறது. துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு இது எதிர்பார்ப்பின் செய்தியாக அமைகிறது. தமது அன்றாட வாழ்வின் நிகழ்வுகள் வழியாக கிறிஸ்துவின் மரணம், உயிர்ப்பில் பங்கு கொள்வதற்கு தரப்படும் அழைப்பாகும். திருவெளிப்பாட்டு நூலின் சிறப்பம்சம், அடையாளங்கள் வழியாக முன்வைக்கப்படுதலாகும். விலங்கு, நிறம் அடையாளங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

அவை ஆட்டுக்குட்டி, அரக்கப் பாம்பு, விலங்கு மற்றும் சிவப்பு, வெண்மை ஆகியனவாகும். இந்நூலில் திருவழிபாடு, கிறிஸ்து பற்றிய மறை, கிறிஸ்துவியல் இறுதி கால மறை ஆகியவை பற்றிய முக்கிய விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. கலாபனைக் காலத்தில் துன்புற்ற கிறிஸ்தவர்களுக்கு வாசிப்பதற்கு எழுதப்பட்ட திருமுகம் எனவும் சொல்லப்படுகிறது.

### 2.4 பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையிலான தொடர்பு

**(அ) உடன்படிக்கை**

பழைய ஏற்பாடு என்ற சொல் தூய பவுலிடமிருந்தே பெறப்பட்டது. உ+ம் 2 கொரிந்தியர் 3:14, எபிரேய திருமுகத்தில் ‘‘முதல் உடன்படிக்கை’’, 8:7-8 ‘‘புதிய உடன்படிக்கை’’ (9:15-20) என்ற பதங்கள் உள்ளன. ‘‘உடன்படிக்கை’’ எபிரேய மொழியில் ‘‘பரியித்’’, கிரேக்க மொழியில் ‘‘டியாதேகே’’ உடன்படிக்கை – தொநூ. 6:18, 17:1-14, விப. அதி 19-24, எண். 25:6-15, எரே. 31: 31-34, 1கொரி 11:23-25

**(ஆ) பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்கும் உள்ள தொடர்பு**

‘‘**புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையில் மறைந்துள்ளது.**

**புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையை வெளிப்படுத்துகிறது.’’** (தூய அகுஸ்தினார்)

பழைய உடன்படிக்கை இறை இறைவெளிப்படுத்துதலின் முதல் பாகமாகும். அது புதிய உடன்படிக்கையின் நிறைவு பெறுகிறது. (எபி1:1-3) இதில் காட்டப்படும் இன்னொரு விடயம், பழைய உடன்படிக்கையும் புதிய உடன்படிக்கையும் பிரிக்க முடியாத அளவுக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது என்பதாகும். இந்த இணைப்பு கிறிஸ்துவிலாகும் அது காட்டப்படுவது, உடன்படிக்கை இரண்டுக்குமிடையே உள்ள ஒத்தமைவைப் போலவே வேற்றமையையும் விளக்கமாக முன்வைப்பதனாலாகும். இவ்வாறு பார்க்கும்போது பழைய உடன்படிக்கையிலே யேசுவின் முன் அடையாளம் காட்டப்படுகிறது. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

**பழைய உடன்படிக்கை கிறிஸ்துவின் முன்னடையாளம்**

முதலாவதாக இறைவார்த்தையையும் இறை ஞானத்தையும் உதாரணமாகக் கொள்ளலாம். பழைய உடன்படிக் கையிலே இறைவார்த்தை, இறை ஞானம் என்ற மனநிலை இறைவனின் படைப்புடன் தொடர்புடையது. முதலாவ தாக இறை வார்த்தையானது நிகழ்வுகளை ஏற்படுத்துகின்ற – பலன் அளிக்கின்ற ஒரு உந்து சக்தியாகும். அது இறைவனின் செயற்பாடு. அது அவரின் இயல்புடன் நிச்சயமாக தொடர்புடையது. (தொநூ. 1:1, 2:4) இந்த வார்த்தை இறைவாக்கினரில் மீட்பின் நிகழ்வாக மாற்றம் பெறுகிறது. அது மனித இதயங்களுக்கு சவாலை முன்வைக்கிறது. (எசா. 1) மன மாற்றத்திற்கு மனிதனை உட்படுத்துகிறது. அது கட்டளைகளாக இறை சித்தத்தை வெளிப்படுத்துகிறது. (விப. 20:1-17) ஞானம் இறைவனுடன் தொடர்ர்புடையது. படைப்பின்போது அது ஆண்டவருடனேயே இருக்கிறது. (சீராக். 1) இந்த மனநிலையையே (தன்னில்) கொண்ட புதிய ஏற்பாடு யேசுவை இறை வார்த்தையாகவும் ஞானமாகவும் முன்வைக்கிறது. (யோவா 1:1-14, எபேசி 1:3-23, கொலோ 1:15-20) இந்த திருவிவிலிய பகுதிகளிலிருந்து பழைய உடன்படிக்கையில் வார்த்தை, ஞானம் ஆகிய மனநிலை கிறிஸ்துவில் மனிதவதாரமெடுத்து முழுமை பெறுவது விளக்கப்படுகிறது.

பழைய உடன்படிக்கையில் மெசியா பற்றிய இறைவாக்கு கிறிஸ்துவில் நிறைவு பெறுவதாக நற்செய்தியில் குறிப்பிடப்படுகிறது. (உ+ம் மத். 1:23 = எசா. 7:14, மத். 2:6 = மீக்கா 5:2) மெசியா பற்றிய மனநிலை பழைய உடன்படிக்கையில், லௌகீக அரசுடன் தொடர்புடையது. ஆனால் கிறிஸ்து உள்ளார்ந்த, ஆன்மீக பண்புகள் நிறைந்த அரசின் மெசியாவாக முன்வைக்கப்படுகிறார். (யோவா 18:33-38) ஆயினும் கிறிஸ்து தாவீதின் மரபிலிருந்து வந்து (மத் 1) அமைதியின் அரசனானதன் மூலம் (லூக் 2:8-14) மெசியா மனநிலையை உறுதிப்படுத்தினார்.

இவ்வாறு எசாயா இறைவாக்கினர் நூலில் குறிப்பிடப்படும் - ஆண்டவரின் துன்புறும் ஊழியன் என்ற கருத்து யேசுவில் நிறைவு பெறுகிறது. துன்பப்பாடுகளை நற்செய்தியாளர்கள், எசயா 52:13 - 53:12 லிருந்து முன்வைத்துள்ளார்கள் என்பது தெளிவு. யேசுவின் மரணம், உயிர்ப்பு, ஆகிய கேந்திர நிகழ்வுகளில் பழைய உடன்படிக்கை நிறைவு பெறுவதாக திருத்தூதர் பணியிலும் தூய பவுலின் திருமுகங்களிலும் காணக்கூடிய தாயிருக்கிறது. (தி.ப 2:14-36, 1கொரி 1:18-2:16)

கிறிஸ்துவும் பழைய உடன்படிக்கையும் தொடர்பாக பல கருத்துக்களை முன்வைக்கலாம். அவற்றில் முக்கிய மனநிலை இரண்டு. அவை:- **உடன்படிக்கையும் குருத்துவமுமாகும்.** இஸ்ராயேலர் தொடர்ந்தும் - மீண்டும் மீண்டும் மீறிய சீனாய் உடன்படிக்கைக்கு பதிலாக ஆண்டவர், புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவதாக எரேமியா இறைவாக்கினர் மூலம் வாக்குறுதி அளிக்கிறார். (எரே 31:31-34)

எபிரேய திருமுக ஆசிரியர் குறிப்பிடுவதன்படி, யேசு, தமது வாழ்வை தியாகம் செய்ததன் மூலம் எரேமியா இறைவாக்கினர் குறிப்பிட்ட உடன்படிக்கை செயற்பட்டதாக உறுதியாக வெளிப்படுத்துகிறார் (எபி. அதி 8-9). அந்த வாழ்க்கைப் பலி பழைய உடன்படிக்கையில் தினமும் ஒப்புக்கொடுக்கப்பட்ட – பாவம் போக்கும் பலியை நீக்கி நிலையான பலியை ஏற்படுத்தியதாக அறிவுறுத்துகிறார். புதிய உடன்படிக்கையில் புதிய இறை மக்கள் உருவாகியிருப்பதாக புதிய ஏற்பாட்டை பல்வேறு விதங்களில் எமக்கு விளக்குகிறார். (1பேது 2:4-5, திவெ 1:6) இவற்றிலிருந்து முழுமையற்ற உடன்படிக்கை முழுமை பெறுவதைக் காண்கிறோம். கிறிஸ்துவின் உன்னத (மேன்மையான) குருத்துவத்தைப் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். அவரது குருத்துவம் பழைய உடன்படிக்கையில் ஆரோனின் குருத்துவத்திலிருந்து முற்றாக வேறுபட்டதாக முன்வைக்கப்படுகிறது.

முதலாவதாக அவர், லேவியர் கோத்திரத்திலிருந்து அல்ல, யூதர் கோத்திரத்திலிருந்தே தோன்றுகிறார். அக் காலத்தில் குருவாக அல்ல, **ஒரு முறை மட்டும் தம்மை** பிறருக்காக – பாவ பலியாக ஒப்புக்கொடுத்ததாக எபிரேய திருமுக ஆசிரியர் கூறுவதன் மூலம் பரம்பரையாக வரும் இஸ்ராயேல் குருவுடன் அவருக்கு தொடர்பில்லை என காட்டுகிறார் (எபி 10). அவ்வாறாயின் அவரது குருத்துவத்தின் அடிப்படை யாது? அது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தராதல் - இணைப்பாளராதல் ஆகும். இறைத்தன்மைக்கும் மனிதத்துவத்திற்கும் பங்குதாரரான யேசு தம் வாழ்வை பலியாக தந்ததன் மூலம் வேறு யாராலும் செய்ய முடியாத அளவுக்கு இணைப்பாளர் பணியை நிறைவேற்றி உன்னத குருவாக தம்மை நிலை நிறுத்தினார்.

மேற்கூறப்பட்ட விடயங்களிலிருந்து, பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன் படிக்கைக்குமிடையில் பிரிக்க முடியாதளவு தொடர்பிருப்பது விளக்கப்படுகிறது.

**(இ) கிறிஸ்துவும் திருவிவிலியமும்**

யூத மக்கள் எபிரேய விவிலியத்தை இறை வார்த்தையாகவும் அதனைத் தமது வாழ்வுக்கும் மேலானதாகவும் கொண்டனர். யூத இனத்தவரான யேசவின் விவிலியமும், திருவிவிலியத்தின் பழைய உடன்படிக்கையில் அடங்கும் எபிரேய விவிலியத்தின் பழைய உடன்படிக்கையில் அடங்கும் எபிரேய விவிலியமாகும். அவர் இறைவார்த்தை மட்டில் கொண்டிருந்த மனநிலையை கீழ் காணும் விவிலிய பகுதியல் காணலாம். விண்ணும் மண்ணும் ஒழிந்து போகுமுன் திருச்சட்டம் யாவும் நிறைவேறும். அதன் ஒரு சிற்றெழுத்தோ ஒரு புள்ளியோ ஒழியாது என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். எனவே, இக்கட்டளைகளில் மிகச்

சிறியது ஒன்றையேனும் மீறி அவ்வாறே மக்களுக்கும் கற்பிக்கிறவர் விண்ணரசில் மிகச் சிறியவர் என கருதப்படுவார். இவையனைத்தையும் கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுவார். **(மத் 5:18 – 19)**

i. திருவிவிலியத்தில் (இறைச் சட்டத்தில்) இறைவார்த்தை கருவாக இருந்ததை யேசு ஏற்றுக் கொண்டார்.

ii. திருவிவிலியத்தைக் கற்றார். அதனால் அதனைப் பற்றிய ஆழ்ந்த அறிவு அவருக்கிருந்தது. (லூக் 4)

iii. மக்களுக்கு திருவிவிலியத்தைக் கற்பித்தார், விளக்கினார். (லூக் 24)

iv. அன்றாட வாழ்வில் அதனைப் பயன்படுத்தினார்.

- அவர் சோதிக்கப்படும்போது, இணைச்சட்ட நூலிலுள்ள வாக்கியங்களை பதிலாக அளித்தே அதனை வெற்றி கொண்டார். (இ.ச 6:16,8:3)
- பரிசேயர், சட்ட அறிஞர், மூப்பரின் பல்வித சவால்களுக்கும் திருவிவிலியத்தைப் பயன்படுத்தியே வெற்றி கொண்டார்.

v. இறை வார்த்தையின்படியே வாழ்ந்தார்.

கிறிஸ்துவே புதிய உடன்படிக்கையின் இறைவார்த்தை (யோவா 1:1) அவர் தமது “இறை வார்த்தையைப் போதித்தும் செயற்படுத்தியும் மக்களை சுகப்படுத்தினார், வலிமையுள்ளோராக்கினார், நல்வழிப்படுத்தினார், மக்களை கட்டியெழுப்பினார், விடுதலையளித்தார், ஒன்றுபடுத்தினார்.”

## 2.5. திருவிவிலியம் பற்றிய பல்வேறு கருத்துக்கள்

### (அ) திருவிவிலியம், இறைவனை சந்திக்கும், அனுபவிக்கும் ஒரு வழியாகும்.

“நம் வானகத்தந்தை தம் மக்களை விவிலிய நூல்களில் அன்போடு எப்போதும் சந்தித்து உரையாடுகிறார்” (இறை வெளிப்பாடு பற்றிய வத்திக்கான் சங்க வெளியீடு எண் 21)

### (ஆ) விவிலிய அறிஞர் ரேமன் ஈ பிரவுன் அடிகளார்

- “பின்னைய இஸ்ராயேல் மக்களுக்கு வழிகாட்டுவதற்காக இறைவன் இஸ்ராயேல் மக்களுடனும் ஆரம்ப திருச்சபையுடனும் ஏற்படுத்திக் கொண்ட உறவின் முதல் அனுபவங்களை சேமித்து வைத்துள்ள - இஸ்ராயேலினதும் ஆரம்ப திருச்சபையினதும் புத்தகசாலை திருவிவிலியமாகும்.”
(“RESPONSES TO 101 QUESTIONS ON THE BIBLE”, 29)
- “இஸ்ராயேல் மக்களுடனும் ஆரம்ப திருச்சபையுடனுமான இறைவனின் உறவு பற்றிய செய்தியாகும்.”
(“RESPONSES TO 101 QUESTIONS ON THE BIBLE”, 29)
- “பாதுகாப்பாக எழுத்து வடிவில் வரும் நிகரற்ற வழிகாட்டியாகும்”
(“RESPONSES TO 101 QUESTIONS ON THE BIBLE”, 29)
- “மற்ற நூல்களோடு ஒப்பிடும்போது திருவிவிலியமானது நிகரற்ற, தனிரக, சிறப்பான - இறைவார்த்தைகள் அடங்கிய நூலாகும்”
(“RESPONSES TO 101 QUESTIONS ON THE BIBLE”, 29)

### (இ) பிலிப் சி – திசாநாயக்க அடிகளார்

“இருபது நூற்றாண்டுகள் அளவில் பரந்து பயணிக்கும் பரம்பரை மறையின் ஞானத்திற்கேற்ப அதனைப் புரிந்து கொள்ளும் திருச்சபைத் தாயினால் நம்பிக்கையுடன் கை வைக்கும் இந்த திருவிவிலியமானது மறையின் ஊற்றைப்போல நிலையான வாழ்வை நோக்கிப் பயணிக்கும் மனிதனுக்கு வாழ்வாக, ஒளியாக, ஊற்றாக உள்ளது - இறை வெளியீடு.”

### (ஈ) காலொஸ் மெஸ்டஸ்

“திருவிவிலியம் என்பது இறை வெளிப்பாடு என்ற விதை விதைக்கப்பட்டு மக்களின் நம்பிக்கை அனுபவங்கள் என்ற மண்ணில் விதைந்த - திருவழிபாடு என்ற பசளையினால் வளமாக்கப்பட்ட சூரிய ஒளி, மழை ஆகிய வானக அனுசரணையினால் வளர்ந்து செழித்தோங்கிய ஒரு விருட்சமாகும்.”
(The Bible, A book born through )

### (உ) காலொஸ் எப் அபெசாமிஸ்

“இஸ்ராயேலரினதும் ஆரம்ப திருச்சபை வாழ்வினதும் அனுபவங்களும் நம்பிக்கையும் எழுதப்பட்ட ஒரு நூலாகும்”
(Exploring the core of Biblical Faith )

## மூன்றாம் பாடம்

## 3. திருவிவிலியத்தில் இறையூக்கமும், எழுத்தமைவும், ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்களும்.

### 3.1 அறிமுகம்

- பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு இறையூக்கம் பற்றிய அனுபவங்கள் உண்டு. அவற்றை அவர்கள் எழுதியுள்ளார்கள். இவ்வனுபவங்களை எழுதும்போது இறைவனின் வெளிப்படுத்தல்கள் இறைவார்த்தைகளாக முன்வைக்கப்பட்டுள்ளது. இறைவன் விசேட விதமாக தெரிந்து கொண்டவர்கள் மூலம் வெளிப்படுத்தியவைகளை இறை செய்திகளாக முன்வைத்தல் ''இறையூக்கம்'' எனப்படும்.

  வெளிப்படுத்தப்பட்ட இந்த செய்திகள் மறை பொருளாகும். இந்தச் செய்திகளை எழுதிய எழுத்தாளர்கள் அவர்களது மொழிப்பிரயோகத்தின்படி எழுதும்போது இறைவன் அவர்களுடன் இருந்தார். அதனை விபரிப்பது இலகுவானதல்ல. அது மறைபொருளாகும்.

- இவ்வாறு மனிதன்மீது தாக்கத்தை ஏற்படுத்திய இறை ஊக்கம் மனிதனில் செயற்படுகிறது. முக்கியமான சந்தர்ப்பங்களில் அது அதிகமாக செயற்படுகின்றது. பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்களின் வாழ்வின் அனைத்து முக்கிய சந்தர்ப்பங்களிலும் இறையூக்கம் செயற்பட்டதைக் காணக் கூடியதாக உள்ளது. அது ''மேய்ப்பின் இறை ஊக்கம்'' எனப்படுகிறது.

**உதாரணம்**

- ''உடனே சாமுவேல் எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து அவன் சகோதரர் முன்னிலையில் அவனைத் திருப்பொழிவு செய்தார். அன்று முதல் ஆண்டவரின் ஆவி தாவீதின் மேல் நிறைவாக இருந்தது. (1சாமு 16:13)
- தம் மந்தையை மேய்ப்பவரோடு கடலில் நின்று கரையேற்றியவர் எங்கே? அவருக்குத் தம் தூய ஆவியை அருளியர் எங்கே? (எசா 63:11)
- ஆண்டவரின் இறையூக்கம் வார்த்தையின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. இது வாய்மொழி இறையூக்கம் எனப்படும்.

**உதாரணம்**

- ''உன் மேலிருக்கும் என் ஆவியும், உன் வாயில் நான் வைத்துள்ள வார்த்தைகளும் உன் வாயில் நின்றும் உன் வழிமரபினர் வாயில் நின்றும் வழி வழி வரும் உன் தலைமுறை வாயில் நின்றும் இன்றும் என்றும் நீங்கிவிடாது என்றார் ஆண்டவர்.'' (எசா 59:21)
- ''எப்படிப் பதில் அளிப்பது என்ன பதிலளிப்பது என்ன பேசுவது என நீங்கள் கவலைப்பட வேண்டாம். ஏனெனில் நீங்கள் பேச வேண்டியவற்றைத் தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்குக் கற்றுத் தருவார்.'' (லூக் 12:11,12 )
- ''தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட மனிதர்கள் கடவுள் அருளியதை உரைத்ததே இறைவாக்காகும். அது ஒருபோதும் மனித விருப்பத்தால் உண்டானது அல்ல'' (2 பேதுரு 1:21)

- ஆண்டவர் தமது வார்த்தைகளையும், சில நிகழ்வுகளையும் எழுதி வைக்கும்படி கட்டளையிட்டமையும், அதனை எழுதி வைக்கும்படி கூறியமையும் 'எழுத்து செயற்பாட்டு இறையூக்கம்' எனப்படும்.

**உதாரணம்**

- ''ஆண்டவர் மேசேயை நோக்கி இதை நினைவுகூரும்படி ஒரு நூலில் எழுதிவை. நான் அமலேக்கியரின் நினைவை வானத்தின் கீழிருந்து ஒழித்திடுவேன் என்பதை யோசுவாவின் காதுகளிலும் போட்டுவை'' என்றார். (விப. 17:14)
- ''இப்பொழுது நீ சென்று அவர்கள் முன் பலகையில் பதித்து ஏட்டுச்சுருள் ஒன்றில் எழுதிவை. வருங்காலத்திற்கென என்றும் சான்றாக அது விளங்கும்'' (சொயா 30:8).
- ''நான் உனக்குச் சொல்லியிருக்கும் சொற்களையெல்லாம் ஏட்டுச்சுருளில் எழுதிவை'' (எரே 30:2)

திருவிவிலியத்தை எழுதியோரை இறைவன் சிறப்பாக ஊக்குவித்தார். நூல் எழுதும் செயல்களுக்குப் பங்களிப்புச் செய்தவர்கள் மீது இறை ஊக்கம் நிறையவே இருந்தது. அதனை அளவிட முடியாது, இறைவனால் மனிதனுக்கு அளிக்கப்பட்ட சுதந்திரத்தில் இறைவன் தலையிடவில்லை. இறைவனால் மனிதனுடைய சுதந்திரத்திற்கு எவ்வித தடைகளும் ஏற்படவில்லை.

படைப்பின்போது அவர்களுக்கு வழங்கப்பட்ட உன்னத நிலை பாதுகாக்கப்படும்படி தாம் வாழும் சூழல், சமுதாய சிந்தனை, கருத்துக்கள், எண்ணக்கரு ஆகியவற்றைப் பயன்படுத்தி அவர்களது மொழிநடையில் எழுதுவதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

கத்தோலிக்க பார்வையின்படி இந்த நிகழ்வு ஒரு மறை பொருளாகும். செய்தி என்றால் என்ன என்பதைக் கவனித்தால் அது மனிதனின் அன்றாட வாழ்வின் செயற்பாடுகளில் பல்வேறு விதத்தில் பெறப்படுகிறது. இச் செய்திகளில் சில சரியானவையாகவோ சில தவறானவையாகவோ இருக்கலாம். ஆனால் திருவிவிலியத்தின் செய்திகளைப் பார்க்கும் போது, அவை இறையூக்கம் என ஏற்றுக் கொள்ளும் கிறிஸ்தவனுக்கு திருவிவிலியத்தின் எல்லா செய்திகளுமே இறை செய்திகளாக இருக்கிறது. இறை ஊக்கத்தை ஏற்றுக் கொள்ளும் கிறிஸ்தவனுக்குத் திருவிவிலியத்தில் எல்லாச் செய்திகளும் இறை செய்தியாதலால் கட்டாயமாக அந்தச் செய்தி இறைவனின் செய்தியாகவே இருக்கிறது, எவரேனும் திருவிவிலிய செய்தியினால் தவறான வழியில் வழிநடத்தப்பட்டால் திருவிவிலியத்தின் பிரதான ஆசிரியரான இறைவனோ உப ஆசிரியரான எழுத்தாளரோ அதற்குப் பொறுப்பானவரல்ல. மாறாக அதற்கு விளக்கம் அளிப்பவரே பொறுப்பாளராவார்.

**திருவிவிலியத்தை முழுமையாக நோக்கின் அங்கு கதைகளும், செய்திகளும் இருப்பதைக் காணலாம். கதைகளை பின்வருமாறு பிரிக்கலம்.**

- சில கதைகள் வரலாற்றுக்கு அமைய நிகழ்ந்த உண்மை நிகழ்வுகளாகும்.
  உ + ம் : திருவிவிலியத்தில் திருத்தூதர் பணியில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிகழ்வுகள்.

- சில கதைகளில் சில நிகழ்வுகள் மாத்திரம் உண்மையாக இருக்கலாம்.
  சில விளக்கங்கள் உண்மையற்றதாகவும் இருக்கலாம். காலப் போக்கில் அவை பொய்யானவை என உறுதிப்படுத்தப்படலாம்.
  உ + ம் : திருவிவிலியத்தில் இயேசுவைப் பற்றிக் கூறப்புடும் சில நிகழ்வுகள்.
- மற்றுமொரு வகையான கதைகளும் உண்டு. அவை புனை கதைகள் எனப்படும். இக் கதையின் மையமான நிகழ்வுகள் பெரும்பாலும் அக்கால மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ப எழுதப்பட்டவைகளாகும்.
  உ + ம் : - லோத்தின் மனைவி உப்புத்தூணாகியது.
  - ஈசாக்கைப் பலியிடக் கொண்டு சென்றமை.
- இவை தவிர்ந்த இயற்கை மாற்றங்கள் தொடர்பான புனைக்கதைகளும் உண்டு. அவை உவமைகள் எனப்படும். அவை ஆழமான செய்திகளைத் தருகின்றன.
  உ + ம் : மன்னிக்கும் தந்தை (காணாமற்போன மகன்), நல்ல சமாரியன், யோபுவின் கதை.

திருவிவிலியத்தில் உள்ள சில கதைகளைப் பொதுவாக நோக்கின் அவற்றை உண்மை நிகழ்வுகள் என கொள்ளக்கூடியதாக இருப்பதுடன், சில கதைகள் நம்ப முடியாதவையாகவும் உள்ளன. காலப் போக்கில் இன்று அவை உண்மையற்றவைகளாகக் கொள்ளப்படுகின்றன. அதன்படி இறை ஊக்கம் அடையக் கூடிய மனிதனின் அறிவு சிந்தனை, திறமை என்பவற்றை மழுங்கச் செய்யாது மேலும் வளர்ச்சி அடையக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது எனலாம்.

திருவிவிலியத்தில் பிரதான ஆசிரியரும், துணை ஆசிரியரும் உளர். பிரதான ஆசிரியர் இறைவன். துணை ஆசிரியன் மனிதன். துணை ஆசிரியர் பிரதான செய்தியை அளிக்கவே வழிநடத்தப்பட்டார். ஆகவே திருவிவிலியம் மனித எழுத்தாளரால் எழுதப்பட்டதால் அது மனிதத்தன்மை கொண்டதாகும். அது இறை ஊக்கத்தினால் எழுதப்பட்டமையி னால் இறைத்தன்மை கொண்டதாகும்.

திருவிவிலியத்தில் இஸ்ராயேலரின் வரலாறு முழுவதிலும் இறை பிரசன்னம் காணப்படுகிறது. பகைவரின் ஆக்கிரமிப்பு, போர்களில் அடைந்த வெற்றி, தோல்வி என்பனவற்றில் இறைவன் மையமாக செயற்படுகிறார் என்ற மனநிலை மக்கள் மத்தியில் நிலவியது.

இஸ்ராயேல் மக்கள் பகைவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டபோது அடைந்த தோல்வியானது மக்கள் உடன்படிக்கையை மீறியதால் இறைவனால் வழங்கப்பட்ட தண்டனையாக அமைந்தது. அவ்வேளைகளில் மக்கள் மனம் வருந்தினர். அவ்வாறு மனம் வருந்தியபோது அவர்கள் மீட்கப்பட்டனர். இது தொடர்பாக வரலாற்று விபரங்களும், வாய்மொழிக் கதைகளும் உள்ளன.

இந்தக் கதைகள் அனைத்திற்கும் ஒரு நோக்கம் உண்டு. அது மறையைக் கற்பிக்கும் பொருட்டேயாகும். ஆபிரகாம் எகிப்திற்கு வரும்போது நடைபெற்ற சம்பவம் (தொநூ 12:10-20), லோத்தின் மனைவி உப்புச் சிலையாகியது (தொநூ. 19:26) என்பன இதற்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். துணை ஆசிரியர்கள் இறையூக்கத்தினால் செயற்பட்டு அவர்கள் தமது சுதந்திரத்தைப் பொருட்படுத்தாது மூல ஆசிரியருக்குத் தேவையான செய்தியை முன் வைத்தமையை இதன் மூலம் காணலாம். எழுத்து வடிவம் பெறும்போது சூழலில் தாக்கம் சிறப்பாக இருந்துள்ளது. இயற்கையின் ஆசிரியர் இறைவன், ஆதலால் துணை ஆசிரியர் தம்மில் தாக்கத்தை ஏற்படுத்திய சூழலில் இறைவனின் செய்தியை முன்வைத்தனர்.

உ + ம்: மரம் ஒன்றினை வரைவதற்கான தேவை ஏற்படும்போது இரண்டு விதமான சூழலில் வாழும் இருவர் தங்கள் சூழலில் பார்த்த, தொட்டுணர்ந்த, கண்ணுக்குப் புலப்பட்டவைகளை வரைவர். இருவருக்கும் மரம் பொதுவானது, சரியானது. எனினும் முன்வைத்த முறையிலே பல தரப்பட்ட நிலை காணப்படுகிறது. அவ்வாறே இறைவனின் செய்தியை மனித ஆசிரியர்கள் தாம் அறிந்து கொண்ட விதத்தில் சொல் வடிவம் கொடுத்து அதனை நிகழ்கால மொழியில் அவர்களுடைய சிந்தனை, கருத்துக்கள், எண்ணங்கள், கலாச்சார மதிப்பீடுகள், பழக்க வழங்கங்கள், பண்பாடுகள் என்பனவற்றைச் சேர்த்து நூல் வடிவம் பெறச் செய்தனர். அவ்வேளையில் சிந்தித்தல், முடிவெடுத்தல், முன்வைத்தல் போன்றவற்றில் சுதந்திரமாகத் தமது அனுபவங்களை வெளிப்படுத்துவதற்கு அவர்களுக்கு சுதந்திரம் இருந்தது. இதன்படி மூல ஆசிரியரின் செய்தியைத் துணை ஆசிரியர் தமது பழக்க வழக்கமான மொழி நடையில் முன்வைத்தமை தெளிவாகிறது.

திருவிவிலியத்தில் அடங்கியுள்ள அனைத்து உண்மைகளும் இறை ஊக்கத்தால் எழுதப்பட்டவை என இரண்டாம் வத்திக்கான் சங்கம் இறையூக்கம் பற்றி கூறுகிறது. பழைய, புதிய ஏற்பாட்டில் உள்ள அனைத்து நூல்களினதும் ஆசிரியர் இறைவனாவார். அந்த நூல்களில் இறை வார்த்தை அடங்கியிருப்பதாலும், நூல்களாக அவை திருச்சபைக் குக் கிடைத்திருப்பதாலும் அது புனிதமானதென அப்போஸ்தலிக்க விசுவாசத்தின்படி திருச்சபை ஏற்றுக்கொள்கிறது. திருவிவிலியத்தை எழுதுவதற்கு இறைவன் சிலரைத் தெரிந்து கொண்டார். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டோர் தமது திறமைகளைப் பயன்படுத்தினர்.

இந்த சந்தர்ப்பத்தில் இறைவன் அவர்களில் செயற்பட்டார். அவர்கள் நேர்மையான ஆசிரியர்களாக இறைவனின் கருத்து அனைத்தையும் எழுதினர். ஆதலால் இந்த எழுத்தாளர்கள் வெளிப்படுத்திய அனைத்தும் பரிசுத்த ஆவியின் வரத்தால் எழுதப்பட்டவை எனக் கருதுவதோடு அந்த எழுத்துக்களில் எமது மீட்பின் பொருட்டு இறைவனது கருத்துக்கள் உண்மையான, உறுதியான, நம்பிக்கையான, தவறற்ற வெளிப்பாடாக உள்ளதென ஏற்றுக்கொள்ள வேண்டும். (இறை வெளிப்பாடு இல ii)

மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்பிப்பதற்கும், கண்டிப்பதற்கும், சீராக்குவதற்கும் நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனள்ளது (2திமொ. 3:16,17) என எழுதப்பட்டிருப்பது இதனாலேயேயாகும்.

இறைவனின் வெளிப்படுத்துதலை, பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எழுத்துரு பெறச் செய்த இந்த மாபெறும் வல்லமை, ஆற்றல், ஆவி **இறை ஊக்கமாகும்**. இந்த வல்லமை இயற்கைக்கு முரணானதோ, காட்சியானதோ, பரவசம் ஏற்படுத்தும் ஒன்றானதோ அல்ல. உண்மையில் அந்த எழுத்தாளர்களின் திறமைகளைப் பயன்படுத்தி அவர்களுடைய தனித்துவத்திற்குப் பங்கம் ஏற்படாத வகையில் அவர்களுக்கே உரிய எண்ணங்கள், மொழிகள், இலக்கியம், எழுத்து வடிவம், சொற்பிரயோகம் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தம்முடைய எழுத்து வன்மையை வளர்ப்பதற்கு இந்த இறை ஊக்கம் துணைபுரிந்தது.

**எனவே**

- திருவிவலயம் தனித்தனியே சேகரிக்கப்பட்ட நூல் தொகுதி ஒன்றல்ல. அது உயிருள்ள ஒன்றாகும்.
- இறையூக்கத்தால் ஆசிரியர் எழுதியவற்றிலிருந்து, வாசிப்போர் இறை வெளிப்படுத்தல் பெறுகிறார்கள்.
- பிரதான காரணங்கள், துணைக்காரணங்கள் என்பனவற்றின் தொடர்பில் அடிப்படையிலேயே இறைவனின் பங்களிப்பும், எழுத்தாளருடனான தொடர்பும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். துணை எழுத்தாளரின் தொடர்பாடலின் குறைகள், மூல எழுத்தாளரின் உதவியினால் குறைந்தன.

இறைவாக்கினர்கள், இறைவார்த்தையைத் தமக்கே உரிய மொழி வன்மையில் போதித்தனர். அவர்களின் சூழல், மொழி, சமூக அமைப்பு என்பன இதற்குத் துணையானதுடன் தூய ஆவி மிகவும் சிறப்பான விதத்தில் உதவினார்.

நிகழ்காலத்தைப்போல அல்லாது முற்காலத்தில் ஒரு நூல் ஒரு ஆசிரியரைச் சார்ந்திருக்கவில்லை. எழுத்தாளர் குழுவினரையே அது கொண்டதாக இருந்தது. ஆதலால் முற்கால எழுத்தாளரும், நூலும் ஏதேனும் ஒரு குழுவினைச் சேர்ந்ததாக கருதப்படுகிறது.

**அதன்படி**

- முதலில் குழுவுக்குக் கிடைத்த இறை ஊக்கத்தின்படி குழுவின் ஆசிரியர்கள் இறை வார்த்தையைப் போதித்தனர். எழுதினர்.
- குழுவுக்குப் பொதுவாகவும் எழுத்தாளருக்கு தனிப்பட்ட விதத்திலும் இறை ஊக்கம் கிடைத்து இறை செய்தியைப் போதித்தனர், எழுதினர்.

இறைவன் திருவிவிலியத்தின் ஆசிரியராவார். அவர் தன் மகனின் வழியாக அப்போஸ்தலிக்க திருச்சபைக்குத் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். அவ்வாறே அப்போஸ்தலிக்க திருச்சபை தம் விசுவாசத்தை எழுதிவைத்தது. அதன்படி சிலவேளை இஸ்ராயேல் மக்களும், திருச்சபையும் திருவிவிலியத்தின் உண்மையான எழுத்தாளர்களாகக் கருதப்படலாம். இப்பகுதிக்குள் பழைய ஏற்பாட்டில் குலமுதுவர்கள், குருக்கள், இறைவாக்கினர், அறிவாளிகள் ஆகியோரும், புதிய ஏற்பாட்டில் திருத்தூதரும் அடங்குவர்.

**நினைவிற்கொள்ள வேண்டியவை.**

- திருவிவிலியத்தில் அடங்கியுள்ள கருத்துக்களை மனித ஆசிரியர், தாம் புரிந்து கொண்ட விதத்திலேயே வெளிப்படுத்தியுள்ளனர். இதனை சரியாக விளங்கிக் கொள்ளவும், உண்மையென ஏற்றுக் கொள்ளவும் வேண்டுமாயின் அந்த ஆசிரியர்கள் விடயங்களை முன் வைக்கும் முறை பற்றிய சரியான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- தவறுகள் விடும் மனித ஆசிரியர், தவறுகள் விடாத ஆசிரியரை விட வேறுபட்டவர். சில சந்தர்ப்பங்களில் மனிதன் ஏற்றுக் கொண்ட நம்பிக்கையை எழுத்தில் காணலாம்.
- திருவிவிலியத்தின் தவறற்ற வழுவா தன்மையைப் பற்றிக் கூறுமிடத்து கிழக்கில் உள்ளவர்கள் சிந்திக்கும் விதமும், செமித்திக் மொழியின் சிறப்பினையும் கவனத்தில் கொள்ள வேண்டும். கிழக்கிலுள்ளோர் ஆன்மீகத்தை மீறிச் செல்லவில்லை.
- சில வேளைகளில் மனித எழுத்தாளர் மூல எழுத்தமைவின் அடிப்படை நிகழ்வுகளின் சரியான யதார்த்த இயல்பை விட வெளித் தோற்றத்திற்கு முக்கிய இடம் கொடுத்து விளக்குவதை அவதானிக்கலாம்.
- திருவிவிலியத்தின் ஒருமைப்பாடு எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டுமாகையால் திருவிவிலியத்தின் எந்தவொரு பகுதியிலாவது கருத்து அல்லது பொருள் வேறொரு பகுதியின் கருத்துக்கு அல்லது பொருளுக்கு நேர் எதிராக இருக்க முடியாது,

திருவிவிலியம் ஒரு விஞ்ஞான நூல் அல்ல. அதன் மொழி நடையை நவீன விஞ்ஞானக் கொள்கைளோடு ஒரு போதும் ஒப்பிட முடியாது.

மூல ஆசிரியரின் தொடர்பாடலுக்கு அமையவே துணை ஆசிரியர் செயற்படுவார். அந்தத் தொடர்பாடல் பலதரப்பட்டவையாகும். இறை ஊக்கம் திருவிவிலியத்தின் அனைத்துப் பிரிவிலும், அனைத்து நூல்களிலும் அடங்கியுள்ளது. வசனத்தில் மட்டுமல்ல ஒவ்வொரு சொல்லிலும் அடங்கியுள்ளது.

**இறை ஊக்கத்தை இவ்வாறு சுருக்கமாக வகைப்படுத்திக் காட்டலாம்.**

- மேய்ப்பு இறை ஊக்கம் :- செயற்படுத்துவதற்காக கிடைக்கும் இறையூக்கமாகும். குருக்கள், தலைவர்கள்ால் செயற்படுத்தப்படுகிறது. (எசா 54:21)
- வாய் மொழி இறை ஊக்கம் :- இறைவார்த்தையை அறிவிப்பதற்கென கிடைக்கும் இறை அனுசரணையாகும். இறைவாக்கினருக்கும், அப்போஸ்தலருக்கும் இது உரிமையாகும். (லூக் 12:11-12)
- எழுத்து மூல இறை ஊக்கம் :- மேலே குறிப்பிட்ட இரு முறைகளையும் மேலும் செயற்படுத்தல். எழுத்து வடிவம் பெறச் செய்வதற்குக் கிடைக்கும் இறை ஊக்கம். (விப 17:14)

**திருவிவிலியம் இறை ஊக்கத்தால் எழுதப்பட்டுள்ளது என்பதற்குத் திருச்சபையின் வெளிப்படுத்தல்கள்.**

- எபிரேய, கிரேக்க எழுத்து வழக்கு மொழிகளுக்குப் பதிலாக முதன் முறையாக வேறு மொழியில், அதாவது ஜேர்மன் மொழியில் திருவிவிலியத்தை கி.பி 1527ல் மாட்டின் லூதர் எழுதி வெளியிட்டார். கி.பி 395ல் முதல் முறையாகத் திருவிவிலியத்தின் முதல் இரண்டு மூல மொழியிலிருந்து இலத்தீன் மொழிக்குத் திருவிவிலியத்தை மொழி பெயர்த்தவர் புனித எரோம் ஆவார்.
- கி.பி 1893ல் திருத்தந்தை 13ஆவது லியோ ‘புரொவிடென்சிமுஸ் டேயுஸ்’ (PROVINDENTISSMUS DEUS) எனும் சுற்றுமடல் மூலம் இறை பாதுகாப்பு பற்றியும், பழைய ஏற்பாட்டினதும், புதிய ஏற்பாட்டினதும் பிரதான எழுத்தாளர் இறைவன் என்பது பற்றியும் வெளிப்படுத்தினார்.
- கி.பி 1920 பங்குனி 15ம் திகதி பாப்பரசர் 15ம் ஆசீர்வாதப்பர் ‘ஸ்பிரிடுஸ் பரக்லிடுஸ்’ (SPRIRUS PARACLITUS) என்னும் வெளியீட்டின் மூலம் திருவிவிலியத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை அது இறை ஊக்கத்தில் எழுதப்பட்டது எனக் கூறினார்.

- கி.பி 1943 புரட்டாதி 30ஆம் திகதி பாபரசர் 12ம் பத்திநாதர் வெளியிட்ட 'டிவயினோ அப்லான்டே ஸ்பிரிட்டு' (DIVINO AFFLANTE SPIRITU) எனும் வெளியீட்டிலும் இறையூக்கம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
- கி.பி 1965 நவம்பர் 18ஆம் திகதி இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 'டெயிவர்பம்' (DEIVERBUM) என்னும் வெளியீட்டிலும் திருவிவிலியம் இறையூக்கத்தால் எழுதப்பட்டடுள்ளது எனக் குறிப்பிடுகிறது.

**வெளிப்படுத்துதல்களின் (வெளியீடுகளின்) சுருக்கம்**

- அறிவும், ஞானமும் மட்டுல்ல மனித ஆசிரியர்களின் சகல செயற்பாடுகளும் தூய ஆவியானவரின் வழிநடத்துதலின் கீழ் செயற்படுகின்றது.
- மனித ஆசிரியர்கள் மட்டுமல்ல அவர்களுக்க அனுசரணையாக இருந்த அனைவருடையவும் அறிவு, செயல்கள் யாவும் தூய ஆவியினால் வழிநடத்தப்பட்டது.
- திருவிவிலியத்தின் எல்லாப் பகுதிகளுமே பரிசுத்த ஆவியின் வழிநடத்தலினால் எழுதப்பட்டது.

## 3.2 ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்கள்

ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் படிப்பினைகளுக்கு அமைய பழைய ஏற்பாட்டு நூல்கள் 46 ஆகும். புரட்டஸ்தாந்தரும், யூதர்களும் 39 நூல்கள் மாத்திரம் இறையூக்கத்தினால் எழுதப்பட்டதெனக் கூறுகின்றனர். இதன்படி சீராக்கின் ஞானம், சலமோனின் ஞானம், தோபித்து, யூதித்து, பாரூக், மக்கபேயர் I, II, தானியேல் 12,13 ஆம் அதிகாரங்கள், எஸ்தர் (101 வசனங்கள்) என்பன எபிரேய விவிலியத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரதிகளில் இல்லை. எபிரேய விவிலியத்தின் - திருவிவிலியத்தில் யூத பழைய ஏற்பாட்டின் எல்லா நூல்களையும் ஏற்றுக் கொள்ளும நாம் அவற்றை ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்கள் என கூறுகின்றோம். இவற்றை விட மேலே குறிப்பிடப்பட்டுள்ள இணைத்திருமுறை நூல்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாகும். எபிரேய விவிலியத்தில் காண முடியாத இவை இறை இறையூக்கத்தினால் எழுதப்பட்டடுள்ளது என்பதை கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக்கொள்வதற்கான காரணம் யாது என்பதை பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

### அ) பழைய ஏற்பாட்டின் முக்கிய பிரிவுகள்

ஏற்றுக்கொள்ளப்பட்ட இணைத்திருமுறை நூல்கள் தொடர்பான சிக்கல்கள் திருவிவிலியத்தில் மூலப் பிரதிகளிலுள்ள பல்வேறு வகைப்பட்டவைகளுடன் தொடர்புடையதாகும். எனவே அப்பிரதி பற்றிக் கற்பது கட்டாய தேவையாகும். எமது சிக்கல்களைத் தீர்க்கும் பொருட்டு சில எபிரேய, கிரேக்க பிரதிகளில் மட்டும் கவனம் செலுத்துவோம். எபிரேய பிரதிகளில் பல்வேறுபட்ட தன்மைகளை திருவிவிலிய அறிஞர்கள் பின்வருமாறு விளக்குகிறார்கள். அதாவது அவை மூவித மரபுகளுக்கு அமையவே கட்டியெழுப்பப்பட்டுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர். பலஸ்தீன, அலெக்சாந்திரிய, பபிலோனிய எழுத்து மரபுகளுக்கு அமைய அவைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### I. ஏற்றுக்கொள்ளப்பட்ட எபிரேய பிரதி எனப்படும் மெசொரெட்டிக் பிரதி

கி.பி 10ம் நூற்றாண்டுக்குரிய இது பபிலோனிய எழுத்து மரபுக்குரியது. திருவிவிலியத்தின் எபிரேயப் பிரதிகளுக்கு கி.பி 6ம் நூற்றாண்டில் எழுத்து வடிவம் கொடுத்த பாரம்பரிய மெசொரெட்டிக்கர் எனப்படும் மசோரியர் தொடர்புடையவை "மெசொரெட்டிக் பிரதி" என அழைக்கப்படுகிறது. விவிலிய நூல்கள் 39 இருக்கின்றன. இவ்வாறு 39 நூல்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதானது எருசலேமுக்கு மேற்கில் அமைந்துள்ள மத்திய தரைக்கடலுக்கு அருகாமையில் ஒரு சிறிய நகரமாகிய ஜமீனியாவில் (ஜபிதே) கி.பி 90இல் நடைபெற்ற ராபிகளின் ஆலோசனை சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவே என சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

இந்த விடயம் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியது. இது தொடர்பாகக் கேட்கப்பட வேண்டிய சில வினாக்களாவன:

அ) அக்காலத்தில் ஜமீனியாவில் இருந்தது சட்டக் கல்லூரியா? அல்லது ரபீக்களின் (போதகர்களின்) குழுவா? இதற்குத் திருப்தியான விடை இல்லை.

ஆ) ஜமீனியாவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்களின் ஆசிரியர்களுக்கு என்ன நடந்தது?

இ) உரிய நூல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல் பட்டியலில் இருந்து நீக்குவது தொடர்பான குறிப்பெதுவும் இல்லாமைக்கான காரணம் என்ன?

மேற்கூறிய வினாக்களுக்கு விடை காண்பது மிகவும் கடினம். அதனால் ஜமினியாவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது என கொள்ளலாம்.

**II. கும்ரான் ஏடுகள்**

கி.பி 1947-1956 இற்கும் இடையிலான காலத்தில் சாக்கடலுக்கு அருகிலிருந்த குகைகளில் இருந்து கண்டெடுக்கப்பட்ட ஏட்டுச்சுருள்கள் ஏராளமானவை. இவற்றில் அனுமதிக்கப்பட்ட எபிரேய விவிலியத்தின் அனைத்த நூல்களும் சிறிதளவேனும் இருக்கின்றன. மேலும் இணைத்திருமுறை நூல்களில் சலமோன் ஞானம், யூடித், மக்கபேயரின் இரு நூல்கள் என்பன அங்கு இருக்கவில்லை. இவை தவிர்ந்த கி.மு 135 - கி.பி 68 வரை அங்கே வாழ்ந்த கும்ரான் மக்களின் (எசேனியர்) வேறு நூல்களும் கண்டெடுக்கப்பட்டன. எசேனியர் எருசலேமில் குருக்கள் பரம்பரைக்கு உறவு முறையானவர்கள் என்பது அவர்களின் ஏடுகளிலிருந்து தெரிகிறது. எருசலேம் ஆலயத்தில் நடைபெற்ற சடங்குகளில் அவர்களின் ஏடுகளில் இருந்து தெரிகிறது. எருசலேம் ஆலயத்தில் நடைபெற்ற சடங்குகளில் அவர்கள் பங்குபற்றாமை, எருசலேம் குருக்கள் பரம்பரையினர் பற்றி அவர்களது நூல்களில் காணப்படும் கடுமையான விமர்சனம், மீண்டும் ஆலயம் சென்று புதிய முறையில் சடங்குகளைச் செய்தல் ஆகிய இவைகள் - சிறப்பாக எசேனியரின் குருக்களுடன் தொடர்புடைய பகுதியாக விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் கடுமையான ஒறுத்தலுடன் கூடிய தப வாழ்க்கை வாழ்ந்தனர்.

இங்கு கண்டெடுக்கப்பட்ட நூல்களில் விடுதலைப்பயண நூலின் ஒரு பகுதி கி.மு 3ம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கருதப்படுகிறது. இந்தப் பிரதி குறைந்த பட்சம் மெசொரெட்டிக் பிரதியை விட 1000 ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. அவை பலஸ்தீன எழுத்து மரபினைச் சேர்ந்தவை. மெசொரெட்டிக் பிரதியுடன் ஒப்பிடும்போது கும்ரான் பிரதிகளில் வித்தியாசம் இருப்பதைக் காணலாம். எஸ்தரின் நூல் தொடர்பாக எவ்வித தகவல்களும் இல்லாமையால் இது எசேனியரால் புறக்கணிக்கப்பட்டதாக இருக்கலாம். முதலில் எஸ்தரின் நூலில் இஸ்ராயேலின் இறைவனின் பெயர் (யாவே) இல்லாமையும், அதில் பிற்காலத்தில் ஆடம்பர விழாவாக இருந்த பூரிம் என்ற திருவிழா குறிப்பிடப்பட்டிருப்பதையும் இவ்வாறு தவிர்க்கப்பட்டமைக்கான காரணங்களாகக் கொள்ளலாம். இவைகளிலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட திருவிவிலிய நூல்களில் சில, யூதர்களிடம் இல்லை என்பது தெரிய வருகிறது. மேலம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்களுடன் எவ்விதத்திலும் தொடர்பற்ற ஜூபிலியரின் நூல் கும்ரானில் மிகப் புனித நூலாகக் கருதப்பட்டமையிலிருந்து இந்தக் கருத்துக்கள் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

**ஆ) கிரேக்க பிரதி**

இணைத்திருமுறை நூல்கள் பற்றிய ஆய்வுக்கு நேரடியாகத் தொடர்புடைய செப்துவாஜிந் பிரதியின்பால் கவனத்தைத் திருப்புவது இங்கு எமக்குப் போதுமானது என்பதைக் குறிப்பிட வேண்டும். கி.பி. 3ம் நூற்றாண்டில் எகிப்தில் அலெக்சாந்திரியாப் பிரதேசத்தில் வாழ்ந்த யூதர்கள் கிரேக்கப் பண்பாட்டு தாக்கத்தினால் கிரேக்க மொழியை தம் தாய் மொழியாகக் கருதினர். அதனால் தமது புனித நூலைக் கிரேக்க மொழியில் மொழி பெயர்த்தனர். கி.பி. 3ம் நூற்றாண்டளவில் ஐந்நூல் கிரேக்க மொழியில் இருந்ததாக "அரிஸ்தயாஸ் மித்யாவ" என்ற நூலிலிருந்து தெரிகிறது. அதன்படி திமித்ரியஸ் என்ற இரண்டாம் டொலமி நூலகப் பொறுப்பாளரின் வேண்டுகோளின்படி எருசலேமிற்கு வந்து 72 மொழிப்பெயர்ப்பாளர்கள் தனித்தனியே மொழி பெயர்த்த மொழிபெயர்ப்பு ஒரே மொழி பெயர்ப்பு என்று வெளிப்படுத்தப்பட்டதானது இறைவனின் விசேட அனுசரணை என முன்வைக்கப்படுகின்றது. எது எவ்வாறு இருப்பினும் கிரேக்க மொழி பெயர்ப்பு மிக மேன்மையானதாக கருதப்பட்டமை இந்த புனைக் கதைகளிலிருந்து விளங்குகிறது.

இணைத்திருமுறை நூல்கள் செப்துவாஜிந் பிரதிகளிலிருந்தே எமக்குக் கிடைத்துள்ளன. இது அலெக்சாந்திரிய எழுத்து மரபினைச் சேர்ந்தது. செப்துவாஜிந் பிரதிகளுக்கும், மெசொரெட்டிக் பிரதிகளுக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் உண்டு என்பதைக் குறிப்பிட வேண்டும். அவ்வாறே மெசொரெட்டிக் பிரதிக்கும் கும்ரான் பிரதிக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உண்டு. இவை பெரும்பாலும் செப்துவாஜிந் பிரதிகளிலும் அவ்வாறே காணப்படுகிறது என்பது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயமாகும். செப்துவாஜிந் பிரதிக்கும், கும்ரான் பிரதிக்கும் இடையே இந்த தொடர்பில் ஒருவித சமநிலை உண்டென்பது இதிலிருந்து தெளிவாகிறது.

**செப்துவாஜிந் பிரதி தொடர்பாகப் பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்வது பொருத்தமாகும்.**

அ) மரணத்தின் பின்னான மறுவாழ்வு பற்றிய புதிய ஏற்பாட்டுப் படிப்பினைகளுக்கான அடிப்படை செப்துவாஜிந் பிரதியில் காணப்படும் இணைத்திருமுறை நூல்களில் உள்ளன. (எ+டு: ஞான நூல் 3ம் அதிகாரம்)

ஆ) இந்த இணைத்திருமுறை நூல்கள் முழுமையாக இறையியல் கருத்துக்களை முன்வைக்கின்றது. (எ+டு: சீராக்கின் ஞானம், சாலமோனின் ஞானம்)

இ) ஏற்றுக்கொள்ளப்பட்ட எபிரேயப் பிரதிகளிலிருந்து மாறுபட்ட சில செப்துவாஜிந் பகுதிகள் புதிய ஏற்பாட்டில் இறைவார்த்தையாக அறிமுகமாகிறது. (எ+டு: மத். 1:23)

ஈ) செப்துவாஜிந் பிரதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருமுறை நூல்கள் ஒவ்வொன்றும் அருகருகே காணப்படு கிறது. இவை இரண்டும் உயர் நிலையில் கணிக்கப்பட்டமையே இதற்கான காரணமாகும். இவ்வாறு இல்லாதிருப்பின் அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களிலிருந்து புறம்பாக வைக்கப்பட்டிருக்கும்.

உ) அலெக்சாந்திரிய யூதர்களிடையே சிறப்பாக ஆரம்ப கிறிஸ்தவ சபையினுள் இணைத்திருமுறை நூல்கள் வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. மேலே கூறப்பட்ட காரணங்களை நோக்கின் செப்துவாஜிந் பிரதி தொடர்பாக கற்றலின் அவசியம் தெளிவாகிறது.

**கவனத்தில் கொள்ள வேண்டியவைகள்**

பலஸ்தீன யூதர்களின் திருவிவிலியத்தில் (மெசொரெட்டிக் பிரதி) இணைத்திருமுறை நூல்கள் அகற்றப்பட்டமைக்கான காரணங்களாக சில அறிஞர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் சிலவற்றைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

I) யூதர்களுக்கும், ஆரம்பக் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான தர்க்கங்களில் அதாவது இயேசுவின் இறை சுபாவம், மெசியா பணி போன்ற படிப்பினைகளை உறுதி செய்வதற்கு செப்துவாஜிந் பிரதியை சிறப்பாக இணைத்திருமுறை நூலைப் பயன்படுத்தியமை.

I I) பரிசேயர் மற்றும் சமயப் பிரிவினையாளரிடையே நிலவிய முரண்பாடு

இவ்வாறானவை யூதர்களிடையே ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல்களை ஒழுங்கு செய்வதற்கு தூண்டுதலாக இருந்ததென புனித ஜஸ்டின் கி.பி. 160ம் ஆண்டளவில் “டிரிப்போவுடனான உரையாடல்” என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

பழைய ஏற்பாட்டின் முடிவிற்கும், புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட காலமாகிய 400 ஆண்டுகளில் இந்த இணைத்திருமுறை எழுத்து வடிவம் பெற்றது. இந்த காலகட்டத்தில் யூதர்களின் சமய, அரசியல் வரலாற்றில் முக்கிய விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை மறத்தல் ஆகாது.

கத்தோலிக்க திருச்சபையில் பழைய ஏற்பாட்டு நூல்கள் 39 இற்குப் பதிலாக 46 நூல்கள் பற்றி கி.பி. 1546ம் ஆண்டு திரிதெந்தின் (Trent) பொதுச் சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல் தொகுதி**

கி.பி. 393ம் ஆண்டு ஹிப்போ பொதுச்சங்கத்திலும், கி.பி. 397, கி.பி. 419 கார்தேஜ் பொதுச்சங்கத்திலும், கி.பி. 401ல் முதலாம் இனசன்ட் பாப்பரசர் துலுசின் ஆயர் எக்ஸ்ஹுபேரியசுக்கு அனுப்பிய மடலிலும், கி.பி. 1441ல் புளோரன்ஸ் பொதுச்சங்கத்திலும் குறிப்பிடப்பட்ட நூல்கள் ஆகியன திரித்தெந்தின் பொதுச்சங்கத் தில் திருச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களாகும். எனினும் இதற்கு முன்னர் எருசலேமின் சிரில், எப்பிபானியஸ், ஜோண் டமசின், கிரகோரியார், எரோம் உட்பட சில திருச்சபைத் தந்தையர்கள் இணைத் திருமுறை நூல்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும். புரட்டஸ்தாந்தர், லூதர், கல்வின், சுவிங்ளி ஆகியோரைப் பின்பற்றி எபிரேய பிரதிகளுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நூல்களை மாத்திரம் ஏற்றுக்கொண்டனர்.

## 3.3 திருவிவிலிய மொழி

### அ) பழைய ஏற்பாடு

- பழைய ஏற்பாட்டின் பெரும்பகுதி கானானிய செமித்திய மொழியான எபிரேய மொழியில் எழுதப்பட்டது. அது வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக எழுதப்பட்டது.
- பழைய ஏற்பாட்டின் சிறிய பகுதியொன்று எழுதப்பட்டது மற்றுமொரு செமித்திய மொழியான அரமயிக் மொழியிலாகும். இதன்படி எபிரேய பழைய ஏற்பாட்டில் அரமயிக் பதங்கள் உள்ளன.

உ+ம்: தொடக்க நூல் 31:47

எரேமியா 10:10-11

தானியேல் 2:4-7:28

எஸ்ரா 4:8-6:18, 9:12-26

- பபிலோனிய நாடு கடத்தலுக்கு முன்னர் இஸ்ராயேல் எபிரேய மொழியைப் பேசினர் நாடு கடத்தலின் பின்னர் படிப்படியே அது மறைந்த மொழியாகியது. எழுத்து வடிவத்திற்கும், வழிபாட்டிற்கும் மட்டுபடுத்தப்பட்டது.

- பாரசீகத் தாக்கத்தின் விளைவாக நாடு கடத்தலின் பின்னர் இஸ்ராயேலரிடையே அரமயிக் மொழி பிரசித்தி பெற்றது. கிறிஸ்துநாதரும் அந்த மொழியையே பேசினார். புதிய ஏற்பாட்டில் சிறப்பாக முதல் நற்செய்தியான மாற்கு நற்செய்தியில் அரமயிக் வசனங்கள் அதிகமாகப் பாவனையில் உள்ளன. “எப்வெத்தா” (மாற். 7:34), “அக்கெல்டமா”, “கொல்கொத்தா”, “ராக்கா”, “மெமொன்”, “கேபஸ்”, “ரப்போனி”, “தலிதாகும்” (மாற். 5:41), “ஏலி”, “ஏலிலாமா” “சபத்தானி” (மாற். 15:34)

- இவை தவிர்ந்த ஐரோப்பிய மொழிகளான கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளும் பலஸ்தீனாவில் பாவனையில் இருந்தன. பிலிப், அன்ரு என்பன கிரேக்க பெயர்களாகும். கலிலேயாவில் இயேசுவின் சொந்த மக்களும் அரமயிக் மொழியைப் போன்று கிரேக்க மொழியையும் பேசினர்.

- கிறிஸ்துவுக்குப்பின் ஏழாம் நூற்றாண்டில் அரேபிய ஆக்கிரமிப்பின் பின்னர் அரமயிக் மொழி படிப்படியே மறைந்த மொழியாகியது. எனினும் எலியேசர் பேன் யெஹுடான் என்பவரால் எபிரேய மொழி மீண்டும் உயிர் பெற்றது.

- இதன்படி இன்று இஸ்ரயேலில் அரபு, ஆங்கிலம் என்பன வேறு மொழிகளாகவும், எபிரேயம் மூல (முக்கிய) மொழியாகவும் பாவனையில் உள்ளன. இன்று எபிரேய மொழி லெபனனில் சிரியாவின் பக்கத்திலுள்ள கலமுன் மலையிலுள்ள மலுலா, ஜபாடின், பாக்கா பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் மாத்திரம் பேசப்படுகிறது. 10,000 பேர் வரையில் அரமயிக் மொழியைப் பேசக் கூடியயோராகவும் உள்ளனர். அங்குள்ள புனித ஜோர்ஜ் ரோமன் கத்தோலிக்க ஆலயத்திலும், புனித டெக்ளா கிரேக்க ஒத்தொடொக்ஸ் ஆலயத்திலும் வழிபாடுகள் கிரேக்க, அரபு, அரமயிக் மொழிகளில் நடாத்தப்படுகின்றன.

**ஆ) புதிய ஏற்பாடு**

- புதிய ஏற்பாடு முதன் முதல் ஆரிய, இந்து, ஐரோப்பிய மொழிகளான கிரேக்க மொழியிலேயே எழுதப்பட்டது. எமலிக், அயோனிக், டோரிக், அட்டிக் என கிரேக்க மொழி வளர்ச்சி பெற்றது.

- கி.மு. 323ல் மகா அலெக்சாந்தரின் காலத்தில் “கொயினே” என்ற எளிமையான கலப்பு கிரேக்க மொழி தோற்றம் பெற்றது. புதிய ஏற்பாடு அந்த மொழியிலேயே எழுதப்பட்டது. பேரரசரின் ஆக்கிரமிப்புடன் அந்த மொழி மேற்கு ஆசியாவின் சர்வதேச மொழியாகியது.

- “கொயினே” கிரேக்க மொழி எளிய நடையைக் கொண்டிருந்த புதிய ஏற்பாட்டை எவராலும் விளங்கிக் கொள்ள கூடியதாக இருந்தது. அந்த மொழி எண்ணத்திலும், கருத்திலும் உள்ள சிறு வேறுபாடுகளைக் கூட வெளிப்படுத்துகிறது. அந்த மொழி அனைவருக்கும் பொது சர்வதேச மொழியாக இருந்ததால் கிறிஸ்தவ மதம் விரைவாகப் பரவியது.

**“இறைத் திட்டம் ஆச்சரியத்திற்குரியது”**

## நான்காம் பாடம்

## 4 . திருப்பலி அறிமுகமும் அதனைப் பற்றிய அறிவைப் பெறுதலும்

### திருவிவிலியத்தில் காணப்படும் பல்வித பலி முறைகள்

இறை மக்கள், தம்மைப் படைத்து ஆண்டு நடாத்தும் இறைவனைப் புகழ்வதற்காகவும் ஆராதிப்பதற்காகவும் பாவங்களுக்கு மன்னிப்பு பெறுவதற்காகவும் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காகவும் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதற்காகவும் பழங்காலத்திலிருந்தே ஆண்டவருக்கு பலி ஒப்புக் கொடுத்தார்கள் என திருவிவிலியத்தில் குறிப்பிடப்படுகிறது. காயின், ஆபேலின் பலி, நோவாவின் பலி, மெல்கிசதேக்கின் பலி, ஆபிரகாம் தன் மகனைப் பலியிடுதல், மோசே குருக்கள் மரபொன்றை உருவாக்குதல், சக்கரியாவின் பலி, பாஸ்கா செம்மறியைப் பலியிடுதல் ஆகியன திருவிவிலியத்தில் நாம் காணும் சிறப்பான நிகழ்வுகளாகும். அன்று யூதர்களின் பாஸ்காவுக்கு புதிய கருத்தைக் கொடுத்த கிறிஸ்து புதிய ஏற்பாட்டின் பாஸ்கா மூலம் பண்டைய பலி முறைகளை புதிதாக மாற்றியமைத்தார்.

### திருப்பலி அறிமுகம்

கிறிஸ்தவ திருவழிபாட்டின் மையம் திருப்பலியாகும். பண்டைய காலத்திலிருந்தே நடைமுறையிலிருந்த காணிக்கை ஒப்புக்கொடுத்தலை முழுமை பெறச் செய்து புதிய நிலைக்குட்படுத்திய யேசு, குருவும் பலியிடப்படும் பொருளுமாகி அன்று கல்வாரி மலையில் தம்மையே பலியாக தந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். இன்றும் திருப்பலியின்போது அப்ப, இரசம் வழியாக கிறிஸ்து தம்மை இறை தந்தைக்கு ஒப்புக் கொடுக்கிறார். இன்று திருப்பலியிலே பலி ஒப்புக் கொடுப்பதற்கு கிறிஸ்துவுக்கு பதிலாக இருப்பவர் குருவானவராவார். தூய லூக்கா குறிப்பிடுவதன்படி அவர்கள் அப்பத்தை எடுத்து நன்றி கூறி அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து “இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்றார். (லூக் 22:19) கிறஸ்துவின் கட்டளைப்படி திருப்பலி என இன்று ஒப்புக்கொடுக்கப்படுவது இந்த பலியாகும்.

### திருப்பலி என்றால் என்ன?

புதிய ஏற்பாட்டு சடங்கின்படி குருவானவரின் பலி ஒப்புக்கொடுத்தல் - அப்பம், இரசம் ஆகியன கிறிஸ்துவின் உடலாக, ஆன்மாவாக, இறைத்தன்மையுடன் இணைத்து பலியாக இறைதந்தைக்கு ஒப்புக்கொடுத்தல் திருப்பலியாகும். (பெரிய குறிப்பிடம்) சிலுவையில் போலவே இங்கேயும் யேசு தன்னையே பலியாக தந்தைக்கு ஒப்புக்கொடுக்கிறார். அதற்கு உதவியாக குருவானவரைப் பயன்படுத்துகிறார். சகல கத்தோலிக்க மக்களும் ஒரே நம்பிக்கையும் ஒரே நோக்கமும் உடையவர்களாக - இறை மக்களாக ஒன்றிணைந்து கிறிஸ்துவிலும் தூய ஆவியின் ஒன்றிப்பிலும் இறைவனுக்கு நன்றியும் ஆராதனையும் செலுத்தி, தமது வாழ்வைப் பலியாக ஒப்புக்கொடுத்து ஆண்டவரது மீட்பின் மறையுண்மையை உலகில் உயிரூட்டம் பெறச் செய்வதே திருப்பலியின்போது நடைபெறுகிறது. கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பையே திருப்பலியில் நாம் நினைவுகூருகிறோம். அவரது பாஸ்கா மறைபொருளில் இணைகிறோம். குல்வாரி பலியைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்காக யேசு தருப்பலியை ஏற்படுத்தினார். இதனால் திருப்பலியானது இறை, மனித உறவை உறுதிப்படுத்தும் மேன்மையான அடையாளமாயிருக்கிறது.

திருப்பலி →
- பலியாகும்
- பலி உணவாகும்
- நன்றி செலுத்துதல், நினைவுகூருதல்.

### திருப்பலியும் சிலுவைப் பலியும் எவ்வாறு ஒரே பலியாகிறது?

பலிகள் இரண்டிலும் ஒப்புக்கொடுப்பவரும், ஒப்புக்கொடுக்கப்படுபவரும் காணிக்கைப் பொருளும் ஒரே கிறிஸ்து ஆவார். திருப்பலியும் சிலுவைப் பலியும் ஒரே நோக்கத்திற்காக ஒப்புக்கொடுக்கப்படுகிறது. திருப்பலியை நிறைவேற்றும் குருவானவர் கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்குதாரராகிறார். இப்பலிகளில் வேறுபாடு யாதெனில், கல்வாரி மலையில் இரத்தம் சிந்தி பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இறுதி இராவுணவின்போது அப்பத்தையும் இரசத்தையும் தமது திரு உடலாக, திரு இரத்தமாக மாற்றினார். இன்று திருப்பலிப் பீடத்தில் அதே பலி அப்ப, இரச அடையாளங்கள் வழியாக நிறைவேற்றப்படுகிறது. இன்று, கண்ணுக்கு புலப்படும் இரத்தம் சிந்துதல் இல்லை. சிலுவைப் பலியின் மூலம் மனிதனுக்கு மீட்பைப் பெற்றுக் கொடுத்ததுடன், இன்று திருப்பலியில் மீட்பின் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**திருப்பலி**

இறைவார்த்தை வழிபாடு, நற்கருணை வழிபாடு என பிரதான இரண்டு பகுதிகள் இருந்தாலும் ஒரே வழிபாடாக உள்ளது.

**இறைவார்த்தை வழிபாடு**

திருப்பலி, ஆரம்பத்திலிருந்து விசுவாசிகள் மன்றாட்டு வரை, இறைவார்த்தை வழிபாடாகும். அதில் முக்கிய பகுதிகள் பல உள்ளன, பழைய, புதிய ஏற்பாடுகளிலிருந்து வாசிக்கப்படும் முதலாம், இரண்டாம் வாசகங்கள் இப் பகுதியில் அடங்கும். மூன்றாம் வாசகம் நற்செய்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அன்றைய தினத்திற்குரிய வாசக பகுதியாகும்.

**ஆரம்ப வழிபாடு**

இது வருகைப் பவனியுடன் ஆரம்பமாகிறது. இஸ்ராயேல் மக்கள் மோசேயின் தலைமையின் கீழ் எகிப்தில் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குச் செல்லுதலும், தமது தூதுப் பணியை நிறைவுசெய்து, கிறிஸ்து வெற்றி அரசரைப்போல் எருசலேமுக்கு வந்ததையும் இங்கே நாம் நினைவு கூருகிறோம். வருகைப் பவனியின்போது கிறிஸ்தவ ஒன்றியம் முழுவதும் வருகைப் பாடலில் பங்கு கொள்வர். கடந்த காலத்தில் இதன் மூலம் ஒன்றியத்தின் ஒற்றுமையை எதிர்பார்த்தனர். ''டிடாஸ்காலியா அப்போஸ்டொலோரும்'' என்ற நூலின் படிப்பினைக்கேற்ப கிறிஸ்துவின் உடலாகிய தூய திருச்சபை நற்கருணை மறை உண்மையை – மறைபொருளை நிறைவேற்றுவதற்கு பங்கு கொள்ளுதலையும் (Koinonia) ஒன்றுபடுத்தலையும் (communion) கிறிஸ்துவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குருவுடன் ஏற்படுத்திக் கொள்ளுதல் என்பது இதன் மூலம் உணர்த்தப்படுகிறது.

**விளித்தல்**

- ஆண்டவர் உங்களோடு இருப்பாராக (ரூத் 2:4, 2தெச 3:16)
- ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவின் அருளும் ……………. உங்கள் அனைவரோடும் இருப்பதாக. (2 கொரி 13:13)
- நம் தந்தையாம் …………. அருளும் அமைதியும் உரித்தாகுக. (1கொரி 1:3)
- உங்களோடு இருப்பதாக. (கலா 6:18)

**பச்சாதாப வழிபாடு**

எமது தவறுகளை ஏற்றுக்கொண்டு அவற்றிற்கு மன்னிப்பு பெற்று நன்மனதோடு திருப்பலிக்கு ஆயத்தமாகுதல் இதன் நோக்கமாகும். திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்கு முன் ஒப்புரவு அவசியம் (மத் 5:23-24). பிறரை நாம் மன்னித்தால் மட்டுமே இறைவன் எம்மையும் மன்னிப்பார். (மத் 6:12, 18:35)

**வானவர் கீதம்**

உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமை உண்டாகுக. ஞாயிறு தினங்களிலும் சில மறைசாட்சிகளின் திருநாட்களிலும் வானவர் கீதம் பாடப்படும். இருப்பினும் சில காலங்களில் - சிறப்பாக தவக்காலத்திலும் திருவருகைக் காலத்திலும் இது பயன்படுத்தப்படுவதில்லை. இந்த வானவர் கீதம் லூக் 2:14ஐ அடிப்படையாகக் கொண்ட புகழ்ச்சிப் பாடலாகும்.

**பொதுச் செபம் (Collect)**

குருவானவர் மட்டுமே செபிப்பார். இதன்போது அன்றைய நாளுக்குரிய திருவிழா அல்லது தலைப்புப் பற்றி குருவானவர் குறிப்பிடுவார். மக்களை ஒன்று சேர்ப்பார். தூய தமதிருத்துவத்தின் செயற்பாட்டை அச்செபத்தின் மூலம் வெளிப்படுத்துவார். குருவானவரின் செபத்தின் பின் நாம் ''ஆமென்'' என பதில் அளிப்போம். (1பேது 5:11) இவ்வாறு எமது பணிவையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்துவோம்.

**இறைவார்த்தை வாசித்தல்**

இரண்டு வாசகங்கள் வாசிக்கப்படும். இங்கே இறைவன் எம்மோடு பேசுகிறார்.

**முதலாம் வாசகம்**

முதலாம் வாசகத்திற்காக திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் திருப்பாடல் தவிர மற்ற எந்த பழைய ஏற்பாட்டு நூலிலிருந்தும் ஒரு பகுதியைப் பயன்படுத்தலாம். பாஸ்கா காலத்தில் திருத்தூதர் பணியிலிருந்து சில பகுதிகள் பயன்படுத்தப்படும். முதலாம் வாசகத்தின் பின் சொல்லப்படும் பதிலுரைப்பாடல் திருப்பாடலிலிருந்து எடுக்கப்படுகிறது.

**இரண்டாம் வாசகம்**

திருத்தூதர் பணி அல்லது திருமுகங்களிலிருந்து இவ்வாசகம் எடுக்கப்படும். அதன் பின் ஆர்ப்பரிப்பு அல்லது அல்லேலூயா பாடப்படும். தவக்காலத்தில் அல்லேலூயா தவிர்ந்த ஆர்ப்பரிப்பு சொற்பதம் மட்டும் பாடப்படும்.

இறைவார்த்தை வழிபாட்டின் உச்ச சந்தர்ப்பம் நற்செய்தியை வாசிப்பதாகும். நற்செய்தி மூலம் கிறிஸ்து தன் மக்களை, நம்பிக்கைக்கும் மனமாற்றத்திற்கும் அழைக்கிறார்.

**மறையுரை**

அன்று கிறிஸ்து மக்களுக்கு போதித்ததுபோல் (மாற் 1:21, மத் 13:53-58) அன்றைய நாளுக்குரிய நற்செய்தி பகுதி மக்களுக்கு வாசித்து விளக்கம் அளிக்கப்படுகிறது. அதன் மூலம் விசுவாசிகளுக்கு ஆன்மீக ஊட்டம் அளிக்கப்படுகிறது. கிறிஸ்தவ வாழ்வுக்கு வழிகாட்டப்படுகிறது. மறையுரை – பங்கு குடும்பங்களுக்கு அளிக்கப்படும் மறைபாடமாக இருக்கிறது. குழுமியிருக்கும் இறை மக்களுக்கு இறைவன் தம் வார்த்தையாலும் செயலாலும் செயற்படுவதைக் காட்டுவதே இதன் நோக்கமாக இருக்கிறது.

**விசுவாசப் பிரமாணம்.**

கி.பி 325ல் நிசேயா பொதுச்சங்கத்தில் வெளிப்பட்ட விசுவாசப்பிரமாணம் திருப்பலியின்போது பயன்படுத்தப்படு கிறுது. இது ஆரம்ப கிறிஸ்தவ சபையில் திருமுழுக்கின்போது விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்திய அப்போஸ்தலரின் விசுவாசப்பிரமாணத்தை விட நீளமானது. இந்த நிசேயா விசுவாசப்பிரமாணம் 515ம் ஆண்டிலிருந்து திருப்பலியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தூய பவுல், பல வேளைகளிலே தனது குழுமத்தின் விசுவாசிகளை செபிப்பதற்கு ஊக்கப்படுத்துகிறார். (1திமொ 2:1-3) இச்சந்தர்ப்பத்தில் இறைமக்கள் தமது தேவைகளை இறைவனிடம் முன்வைப்பர். இதற்காக ஒரு ஒழுங்கு முறையைத் திருவழிபாடு முன்வைக்கிறது.

**அதாவது**

- திருச்சபையின் பல்வேறுபட்ட தேவைகளுக்காக
- உலகின் மீட்புக்காக, மக்கள் தலைவர்களுக்காக
- பல்வித தேவைகளினால் துன்புறுபவர்களுக்காக
- பங்கின் மக்களுக்காக
- இது தவிர முதல் நன்மை, உறுதிப்பூசுதல், திருமணம், மரணச் சடங்குகள் போன்ற விசேட சந்தர்ப்பங்களின் போது அவற்றிற்கு ஏற்ற வகையில் மன்றாட்டை ஆயத்தம் செய்தல்.

**திருப்பலியின் முக்கிய பகுதி நற்கருணை வழிபாடாகும்**

கிறிஸ்வின் இறுதி இராவுணவு நிகழ்வு மீண்டும் உயிரூட்டம் பெறுகிறது. இப்பகுதி காணிக்கை ஒப்புக்கொடுத்தலுடன் ஆரம்பமாகி திருப்பலியின் இறுதிவரை பரந்து செல்கிறது. நற்கருணை, வழிபாட்டில் முக்கிய பகுதிகள் நான்கு உண்டு. அவை:-

- காணிக்கை தயார் செய்தல்.
- நற்கருணை மன்றாட்டு
- திருவிருந்து சடங்கு
- முடிவு செபம் (சடங்கு)

**காணிக்கை ஒப்புக்கொடுத்தல்**

ஆண்டவரின் காலத்திலும் கூட ஆலயத்திற்கும் இறை வழிபாட்டிற்கும் உதவியாக காணிக்கை சேகரித்தார்கள். ஒரு முறை அவருக்கும் தூய பேதுருவுக்கும் வரி செலுத்த வேண்டி ஏற்பட்டதாக நற்செய்தியில் காண்கிறோம். (மத்:17:24-27) அவ்வாறே ஏழைகளுக்கு உதவுவதற்காகவும் (1கொரி 16: 1-4) குருவானவரின் செலவுகளுக்காகவும் எமது காணிக்கையை அளிக்க வேண்டும். எமது வாழ்வின் அன்றாட பணிகள், சிரமம், உழைப்பு, துக்கம், மகிழ்ச்சி ஆகியவற்றை காணிக்கையாக, எங்களுக்காக பலியாகும் கிறிஸ்துவோடு இணைந்து இறைதந்தைக்கு ஒப்புக்கொடுப்பதற்காக எங்கள் வாழ்க்கைப் பலியையும் இப்பலியுடன் இணைகிறோம். காணிக்கையாக சந்தனக்குச்சி, உலர் உணவு வகைகள், உடைகள், பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். காணிக்கைப் பவனியின்போது பாடுதல் பொருத்தமானது. ஆயினும் பவனியின் பின்னர் பாடலை நிறுத்தி, செபத்தில் பங்கு கொள்ள வேண்டும்.

- காணிக்கை மீது மன்றாட்டு
- நற்கருணை மன்றாட்டு
- விசுசாவத்தை அறிக்கையிடுதல்
- தூய ஆவியிடம் வேண்டுதல்.

திருப்பலிச் சடங்கில் மிக முக்கியமானது, மேன்மையான செபமாகும். இறைவனின் மீட்புச் செயலுக்கு நன்றி புகழ் பாடுதல் இங்கே நிகழ்கிறது. அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் திரு உடலாகவும் திரு இரத்தமாகவும் மாற்றம் பெறுவதும் மீட்பு பணி நடைபெறுவதும் இச்சந்தர்ப்பத்திலாகும்.

1. கூடியிருக்கும் இறைமக்களுக்காக குருவானவர் இறைவனிடம் பரிந்துரைப்பார். இறைமக்கள் தமது விசுவாசத்தின் (நம்பிக்கை) அடிப்படையாகும் மறையுண்மையை அறிக்கையிட்டு செபத்தில் பங்கு கொள்வர்.
2. திருச்சபை, இறைவனின் படைப்பு, மீட்பு, தூய்மைப்படுத்தும் செயற்பாடு ஆகியவற்றுக்காக கிறிஸ்து வழியாக தூய ஆவியில், இறைதந்தைக்கு புகழ்ச்சி பாடல் பாடுவர்.
3. சகல விசுவாசிகளையும் ஒன்றுபடுத்துமாறு குருவானவர் தூய ஆவியிடம் மன்றாடுவர். இப் பலி திருச்சபையுடனும் புனிதர்களின் ஐக்கிய பிரயோசனத்தோடும் நடைபெறுவது இதன் வழியாக காட்டப்படுகிறது.

- தூய ஆவியிடம் செபிப்பர்.
- திருச்சபை முழுவதற்கும் - அதன் தலைமைத்துவம், சமூகத்திற்காகவும் செபிப்பர்.
- மரியாள், திருத்தூதர், மறைசாட்சிகள், சகல தூயவர்களையும் நினைவுகூருவர்.
- இறந்தோரும், வாழ்வோராகிய நாமும் இப்பலி வேளையிலே இறை சமூகத்துக்குக் கொண்டு வரப்படுகிறோம்.
- இறைவனின் அனைத்து படைப்புக்களுக்காகவும் செபிப்பர்.
- புகழ்ச்சி பாடல் - திரித்துவ செபத்துடன் நிறைவு பெறும். அது தந்தை, மகன், தூய ஆவிக்கு மகிமை, புகழ், நன்றி கூறி முடிவடையும்.
- ''இவர் வழியாக, இவரோடு, இவரில்......... என்றென்றும் உமக்குரியதே.'' மக்கள் ''ஆமென்'' என பதிலளிப்பர்.

**நற்கருணை புகழ் பாடல்**

இறைமக்களுடன் ஒப்புக் கொடுக்கும் யேசுவின் செபமாகும். இது முழுமையாக குருவானவராலேயே சொல்லப்பட்டாலும் மக்களின் மூவித புகழ்ச்சி மூலம் அதாவது:-

- தூயவர் என்று பாடுதல்.
- விசுவாச மறை உண்மைகளை அறிக்கையிதல்.
- கம்பீரமாக ஆமென் கூறுதல். (Great Amen) மூலம் மக்களும் இணைத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த ஆர்ப்பரிப்பை (புகழ்ச்சி) சத்தமிட்டு சொல்வதானது திருப்பலியில் செயற்பாடுடன் பங்கு கொள்ளும் பண்பாக அமைகிறது.

**திருவிருந்து**

இது பரலோக மந்திர செபத்துடன் ஆரம்பமாகிறது. இறையரசு இவ்வுலகில் நிலையாக வருவதற்கும், பிறரின் குற்றங்களை நாம் மன்னிப்பதுபோல எமது பிழைகளை மன்னிக்குமாறும் இச்செபத்தின் மூலம் நாம் வேண்டுகிறோம். (மத் 6:12)

மன்னிப்பு அளித்தும் மன்னிப்பைப் பெற்றும் அமைதியை ஏற்படுத்துவோம். அனுபவிப்போம். அந்த அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வோம். (உரோ 16:16, 1கொரி 16:20)

நற்கருணை உட்கொள்வதற்கு முன் நூற்றுவர் தலைவரைப்போல் அவர் எங்களுள் வருவதன் மூலம் நாம் பெறும் வாழ்வை வெளிப்படுத்துவோம் (மத் 8:8). நுற்கருணை பெற்றுக்கொள்ளும்போது ''ஆமென்'' என சொல்லு வோம். அவ்வாறு கிறிஸ்துவை அறிந்து கொள்வதால் எமது சகோதர சகோதரிகளில் அவரைக் காண்போம்.

**இறுதி வழிபாடு**

தேவநற்கருணை பகிர்ந்தளிக்கப்பட்ட பின் தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் ஆசீரையும், அமைதியையும் கொண்டு செல்ல அழைப்பு விடுக்கப்படுகிறது.

**திருப்பலியின் செயற்பாட்டுடன் பங்கு கொள்வதற்கு!!**

- திருப்பலியில் ஆரம்பம் முதல் இறுதிவரை பங்கேற்றல்.
- திருப்பலி செபங்களில் பங்கு கொள்ளுதல்.
- பாடல்களில் பங்கு கொள்ளுதல்.
- தம் பிழைகளுக்காக மன்னிப்பு பெற்றுக் கொள்ளுதல்.
- காணிக்கை ஒப்புக்கொடுத்தலில் பங்கு கொள்ளுதல்.
- தேவ நற்கருணை பெற்றுக் கொள்ளுதல்.
- சமாதானம் அறிவிக்கும்போது அனைவருக்கும் சமாதானம் தெரிவித்துக் கொள்ளுதல்.

## ஐந்தாம் பாடம்

## 5. திருச்சபையின் அதிகாரபூர்வ வழிபாடு

**அறிமுகம்**

திருவழிபாடு என்பது கிரேக்க – 'லெயிடுர்ஜியா' (LEITOURGIA) என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். "லெயிடுர்ஜியா" என்ற கிரேக்க சொல் 'லாஓஸ் எர்கொன்' என்ற சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். "லாஓஸ்" என்பது மக்கள் என பொருள்படும். எர்கொன் என்றால் பிரசித்தி பெற்ற வேலை. அதன்படி 'லெயிடுர்ஜியா' என்ற சொல்லின் கருத்து மக்களுக்காக மக்களிடையே வேதனமின்றி ஆற்றும் அதியுயர் பணியாகும். அதனால் அக்காலத்தில் நடைபெற்ற பிரசித்தி பெற்ற விழா மற்றும் கட்டாய அரசபணி போன்ற பொது பணிகள் 'லெயிடுர்ஜியா' என கருதப்பட்டது. இதனை சமய கண்ணோட்டத்தின்படி பார்க்கும்போது அது இறைவனை வணங்குதல் ஆகும். திருத்தந்தை 23ம் அருளப்பரின் "மிடியாதோர் தேய்" (MEDIATORDEI) என்ற நூலின் கருத்து இவ்வாறு காட்டப்படுகிறது.

யேசு அவரது மறை உடலான திருச்சபையோடு, தூய ஆவியில், தந்தை இறைவனுக்கு செலுத்தும் அதி உயர் செபம் திருவழிபாடாகும். 1961-1965 வரை நடைபெற்ற 2ம் வத்திக்கான் சங்கத்தில் இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது.

திருவழிபாடு என்றால் கிறிஸ்துவை தலைமையாகவும் சகல விசுவாசிகளை உறுப்புகளாகவும் கொண்ட மறையுடலால் தந்தை இறைவனுக்கு அதி உயர் ஆராதனையும் மகிமையும் நன்றியும் செலுத்துதலாகும். அத்துடன் மனிதரைத் தூய்மைப்படுத்தும், இறைமக்களை திருச்சபையின் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் உயர்ந்த இடமாகவும், திருச்சபைக்கு வலிமையைக் கொண்டுவரும் ஊற்றாகவும் இருக்கிறது.

திருவழிபாட்டில் எலனிஸ்த கருத்து மக்கள் ஒன்றாக இறைவனுக்கு செலுத்தும் ஆராதனை என்பதாகும். கிறிஸ்துவின் மறைபொருளை கொண்டாட்டமாக நடத்துவதாகும், நினைவுகூருவதாகும். செயற்பாட்டுடன் ஆண்டவரை வணங்கும்போது மக்களில் மாற்றம் ஏற்படுகிறது. சகோதரத்துவம் வளர்ச்சி பெறுகிறது. இறைவனுடன் நெருங்கிய உறவு ஏற்படுகிறத்

**திருவழிபாட்டின் இயல்பும் முக்கியத்துவமும்.**

சகல மக்களுக்கும் மீட்பைப் பெற்றுக் கொடுப்பதற்காக கிறிஸ்து தமது மரணம், உயிர்ப்பு, விண்ணேற்றத்தின் மூலம் இறைவனுடன் எம்மை நட்புடையோராக்கி இறைவனுக்கு அளிக்கக் கூடிய அதி மேன்மையான ஆராதனையாக – பலியாக தம்மையே எமக்காக ஒப்புக்கொடுத்தார். அந்த பலியில் எம்மையும் பங்குகொள்ளச் செய்வதற்காக திருச்சபையை ஏற்படுத்தினார். இந்த மீட்பின் மறை நிகழ்ச்சி அவரால் ஏற்படுத்தப்பட்ட திருமுழுக்கு அருளடையாளம் மூலம் யதார்த்த நிலையைப் பெற்றது. மீட்பு, ஆராதனை பற்றிய அவரது அந்த மேன்மையான பணியில் திருவழிபாடு மூலம் எம்மையும் பங்குதாரராக்குகிறார். திருவழிபாடுகள் அனைத்தும் கிறிஸ்துவினதும், திருச்சபையினதும் நிறைவான செயற்பாடாக இருக்கிறது. அதனால் திருப்பலிகள் இறைபுகழ்ச்சிப் பாடல், அருளடையாளங்கள் மூலமாக மக்கள் திருவழிபாடுகளில் பங்குகொள்வதற்கு – முதலாவதாக விசுவாசம், மனமாற்றம் நோக்கி அழைக்கப்படுகின்றார்கள். திருச்சபை அவர்களை ஒன்றுபடுத்தி மேன்மையான திருவழிபாடாகிய திருப்பலியல் பங்கு கொள்ளச் செய்கிறது. ஆண்டவரின் திருவிருந்தை உட்கொள்வதற்கு வழி சமைக்கிறது. மறைதூதுப் பணிகள் அனைத்தினதும் நோக்கம் மக்கள் அனைவரையும் திருவழிபாட்டிற்கு அழைப்பதாகும். திருவழிபாட்டை – முதன்மையான திருவழிபாடு, பல்வேறு பக்தி முயற்சிகள் என இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

- **முதன்மையான திருவழிபாடு**
  - திருப்பலி
  - அருளடையாளங்கள்
  - திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செபம் அல்லது இறைபுகழ் பாடல்
- **பல்வேறு பக்தி முயற்சிகள்**
  - திருமணி ஆராதனை
  - செபமாலை
  - நற்கருணை ஆசீர்வாதம்
  - மாலை ஆராதனை
  - குணமளிக்கும் வழிபாடு
  - திருவிவிலிய வழிபாடு, பல்வேறு பக்தி முயற்சிகள்

**திருவழிபாட்டு ஆண்டு**

கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளையும் மீட்பின் பணியையும் என்றென்றும் நினைவுகூருவதற்காகவும் (ANAMNESIS), மக்களை அதில் வாழ வைப்பதற்காகவும் உத்தியோகபூர்வமாக ஓர் ஆண்டு கால வட்டத்திற்குள் கொண்டாடுவதற்கு திருச்சபையின் காலப்பகுதி பிரித்து தயாரிக்கப்பட்டுள்ளது. அது திருவழிபாட்டு வருடம் என அழைக்கப்படுகிறது. தந்தை இறைவனை ஆராதனை செய்யவும் அவரது புகழ் பாடுவதற்கும் எம்மைத் தூய்மையாக்கி அருளடையாளங்களை வழங்குவதற்கும் திருச்சபை ஆவண செய்கிறது. இவ் வருடத்தில் பயன்படுத்தப்படும் வாசகங்கள் சமநோக்கு நற்செய்திகளுக்கேற்ப மூன்று (வருட) காலப் பகுதிக்கு பிரிக்கப்பட்டுள்ளது. இறைவாசக நூலில் இந்த கால (வருட) பகுதியைக் காணலாம். முதலாம் ஆண்டில் மத்தேயு நற்செய்தியும் இரண்டாம் ஆண்டில் மாற்கு நற்செய்தியும் மூன்றாம் ஆண்டில் லூக்கா நற்செய்தியும் பயன்படுத்தப்படுகிறது. யோவான் நற்செய்தியானது மாற்கு நற்செய்தியில் குறைவான பகுதிகளை நிவர்த்தி செய்வதற்கு பாஸ்கா காலத்தில் பயன்படுத்தப்படுகிறது.

**திருவழிபாட்டின் பல்வேறு காலங்கள்**

- திருவருகைக் காலம்
- நத்தார் காலம்
- பொதுக் காலம்
- தவக் காலம்
- பாஸ்கா காலம்
- பொதுக் காலம்

**திருவருகைக் காலம்**

இது நான்கு ஞாயிறு வாரங்களைக் கொண்ட காலமாகும். ஆண்டவரின் மனிதவதாரமும், அவரது இரண்டாம் வருகையும் எமது உள்ளத்தில் அவரது வருகை நடைபெறும் விதம் பற்றியும் ஆராய்ந்து பார்ப்பதற்கு திருவருகைக் காலம் எம்மை அழைக்கிறது. இது எதிர்பார்ப்பின் காலமாகும். ஆண்டவரின் வருகையையிட்டு உண்மையான வாழ்க்கை மாற்றத்தை (metanoia) அனுபவத்திற்கு அழைக்கப்படுகிறோம். அவரது வருகையை மூன்று விதமாக காண்கிறோம்.

1. வரலாற்று வருகை - Historical coming
2. இரண்டாம் வருகை - Messianic Second coming
3. எம்முள் தொடர்ச்சியாக வரும் வருகை - Continuous coming

**திருவருகைக் காலத்தின் முக்கிய பிரிவுகள் இரண்டு**

1. முதலாம் ஞாயிறு முதல் மார்கழி 16ம் திகதி வரையிலான காலப்பகுதி இரண்டாம் வருகையை அல்லது பருசியாவை (PAROUSIA) நினைவுறுத்துகிறது.
2. மார்கழி 17 முதல் 24ம் திகதி வரையிலான காலப்பகுதி முதலாம் வருகை அல்லது வரலாற்று வருகையை நினைவுறுத்துகிறது.

**திருவருகைக்கால வாசகங்களில் ஐந்து பேரைப் பார்க்கிறோம்.**

அவர்கள்:-

- ஆபிரகாம், தாவீது, எசாயா, திருமுழுக்கு அருளப்பர், மரியாள்

- **நத்தார் காலம்**

  திருவருகைக் காலத்தின் நான்கு வாரங்களின் பின்வரும் மார்கழி 25ம் நாள் நத்தார் பண்டிகையுடன் நத்தார் காலம் ஆரம்பமாகிறது.

  அன்றைய திருப்பலிகள் மூன்று

  - நள்ளிரவுத் திருப்பலி
  - காலைத் திருப்பலி
  - பகல் திருப்பலி

மூன்று அரசர்கள் திருவிழாவிற்குப் பின்னர் (அதாவது தை 2-8ம் திகதிக்குள் வரும் ஞாயிறன்று) நத்தார் காலம் நிறைவு பெறுகிறது. இக் கால பகுதிக்குள் மாசில்லாக் குழந்தைகள் திருவிழா, திருக்குடும்ப திருவிழா, தேவ அன்னையின் திருவிழா (தை 1ம் திகதி) மூன்று அரசர்கள் திருவிழா, இறுதியில் ஆண்டவருடைய திருமுழுக்கு விழாவுடன் இக்காலம் நிறைவு பெறுகிறது.

- **பொதுக்காலம்**

இது இரு பிரிவுகளைக் கொண்டது. அவை:-

1. நத்தார் காலத்தின் இறுதித் திகதியிலிருந்து திருநீற்றுப் புதனுக்கு முன் வரும் செவ்வாய்க்கிழமை வரை
2. பெந்தகோஸ்தே தினத்திற்குப் பின்வரும் திங்கள் முதல் திருவருகைக் காலத்தின் முதலாம் ஞாயிறுக்கு முன் வரும் சனிக்கிழமை வரையாகும். இக் காலம் 34 வாரங்களைக் கொண்டதாகும். இப் பொது காலத்தில் கிறிஸ்தவ மக்கள் யேசுவில் தமக்குக் கிடைத்த மீட்பைத் தியானிப்பர். இக்காலத்தில் கொண்டாடப்படும் திருவிழாக்கள்:- திரித்துவிழா, நற்கருணை விழா, கிறிஸ்து அரசர் விழா ஆகியனவாகும்.

- **தவக்காலம்**

இது நாற்பது நாட்களைக் கொண்டது. நாம் பாவத்தில் மரித்து புது வாழ்வைப் பெற்றுக் கொள்ளும் காலமாகும். சுய நலத்தில் மரித்து ஆண்டவரில் சுதந்திரப் பிள்ளையாக வாழும் காலம்.

விபூதிப் புதனுடன் தவக்காலம் ஆரம்பமாகிறது. அன்றைய தினம் திருநீறு (சாம்பல்) ஆசிர்வதிக்கப்பட்டு விசுவாசிகளின் நெற்றியில் பூசப்படும். இதன் மூலம் இறைவன் முன்னிலையில் மனிதனின் பலயீனம், பெறுமதியற்ற நிலை ஆகியன நினைவுறுத்தப்படுகின்றது.

தவக்காலத்தின் நாற்பது நாட்களைத் தொடர்ந்து பரிசுத்த வாரம் ஆரம்பமாகிறது. பாஸ்கா மறை பொருள் ஆழமாக தியானிக்கப்படும் இவ் வாரம், திருவழிபாட்டு ஆண்டில் அதி உன்னத காலமாகும். இக் காலத்தில் ஆரம்ப கால திருச்சபையில் புதியவர்களை திருமுழுக்கிற்கு ஆயத்தம் செய்வதும், ஒப்புரவுக்காக மக்கள் பகிரங்கமாக அழைக்கப்படுவதும் நடைபெறுகிறது. சிறப்பாக இறை வார்த்தை, விசுவாச பிரமாணம், பரலோகமந்திரம் பற்றிய அறிவு புதியவர்களுக்கு அளிக்கப்படும்.

**தவக் காலத்தில் முக்கிய திருவழிபாட்டு தினங்கள்**

- **திருநீற்று புதன்**

திருநீற்று புதனுடன் தவக்காலம் ஆரம்பமாகிறது. சாம்பல் ஆசீர்வதிக்கப்பட்டு விசுவாசிகளின் நெற்றியில் பூசப்படும். இதனால் இறைவன் முன்னிலையில் மனிதனின் வீழ்ச்சியும், பெறுமதியற்ற நிலையும் நினைவுறுத்தப்படுகிறது.

- **குருத்து ஞாயிறு**

அன்றைய திருவழிபாட்டிலே குருத்தோலை ஆசீர்வதிக்கப்படும். அதன் பின் குருவானவர் குருத்தோலையை ஏந்திக் கொண்டு ஊர்வலமாக மக்களுடன் ஆலயத்தினுள் நுழைவார். இது யேசு வெற்றி வீரராக அன்று எருசலேம் நகருக்குள் சென்ற நிகழ்வை நினைவுறுத்துகிறது. யேசு துன்புறும் ஊழியன், துன்புறும் மெசியா என்பனவும் நினைவுறுத்தப்படுகிறன.

- **பரிசுத்த தைலம் ஆசிர்வதிக்கப்படும் திருப்பலி (CHRISM MASS)**

அன்றைய திருப்பலியில் பரிசுத்த தைலம் ஆசீர்வதிக்கப்படும். மறைமாவட்ட ஆயர் தனது மறைமாவட்ட குருக்களை ஓரிடத்தில் ஒன்று சேர்த்து விசேட திருப்பலியை நிறைவேற்றுவார். அன்று குருத்துவ வாக்குறுதி புதுப்பிக்கப்படும். ஆயருக்கும் அவரது குருக்களுக்குமிடையே உள்ள நல்லுறவு, ஒற்றுமை இங்கே காட்டப்படுகிறது. பரிசுத்த வாரத்தின் ஓர் நாள் இத் திருப்பலி நிறைவேற்றப்படும். மூன்று வகை தைலம் அன்று ஆசீர்வதிக்கப்படும்.

- **பெரிய வியாழன்**

இன்று ஆண்டவரின் திருவிருந்து விழா கொண்டாடப்படுகிறது. அன்றைய திருவழிபாட்டில் நற்கருணை, குருத்துவம் ஆகிய அருளடையாளங்கள் ஏற்படுத்தியமையும் நினைவுகூரப்படுகிறது.

**அன்றைய திருவழிபாடு நான்கு பகுதிகளைக் கொண்டது**

- இறைவாக்கு வழிபாடு
- பாதம் கழுவும் சடங்கு
- நற்கருணை வழிபாடு
- நற்கருணைப் பவனி

கிறிஸ்துவின் அன்பின் கட்டளையான "நான் உங்களை அன்பு செய்ததுபோல நீங்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள்" என்பதை நினைவுறுத்தி திருப்பலியில் மறையுரையாற்றிய பின், தெரிவு செய்யப்பட்ட பன்னிருவரின் பாதம் கழுவுதல் நடைபெறும். இன்றைய தினத்தில் ஆலய மணியோசையோடு வானோர் கீதம் பாடப்படும். அதன்பின் பாஸ்கா இரவு ஆராதனையின்போதுதான் ஆலய மணியோசையைக் கேட்கலாம். இன்றைய திருவழிபாடு மாலை வேளைதான் நடைபெறும். நற்கருணை பகிர்ந்தளிக்கப்பட்ட பின் தேவநற்கருணை ஊர்வலமாக, விசேடமாக தயாரிக்கப்பட்ட மண்டபத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே மக்களின் ஆராதனைக்காக வைக்கப்படும். நள்ளிரவுவரை நற்கருணை ஆராதனை நடைபெறும்.

- **பெரிய வெள்ளி**

யேசு சிலுவையில் பலியான நாளாகிய இன்று சிலுவை ஆராதனை நடைபெறும். பிற்பகல் 3 மணியளவில் வழிபாடு ஆரம்பமாகும். சில இடங்களில் மூன்று மணி வேதனைகளைக் காட்டும் திருப்பாடுகளின் காட்சி இடம் பெறும். அன்றைய வழிபாடு மூன்று பிரிவுகளைக் கொண்டது.

- இறைவாக்கு வழிபாடு
- திருச்சிலுவை ஆராதனை
- நற்கருணை வழிபாடு

தற்போது பெரிய வெள்ளியை வெற்றியின் நாள் எனவும் கூறுவர். இன்றைய தினத்தில் சிலுவையின் மறைபொருளைப் பற்றி ஆழமான தியானிக்கும் திருச்சபை மாமிசத் தவிர்ப்பையும் ஒருசந்தியையும் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்துகிறது.

- **புனித சனிக்கிழமை**


ஆண்டவரின் உயிர்ப்பை மகிழ்வுடன் கொண்டாடும் நாளாகும். இன்று ஆலயம் மூடப்பட்டிருக்கும் பாஸ்கா திருவிழிப்பு வழிபாடு நடைபெறுவது இன்றைய நாள் இரவாகும். வழிபாடு நான்கு பிரிவுகளைக் கொண்டது.

- திரு ஒளி வழிபாடு
- இறைவாக்கு வழிபாடு
- திருமுழுக்கு வழிபாடு
- நற்கருணை வழிபாடு

தண்ணீரை ஆசீர்வதித்தல், பாஸ்கா மெழுகுவர்த்தி ஒளியேற்றுதல் போன்றன இன்றைய நாளின் சிறப்பம்சமாகும். வளந்தோருக்கு திருமுழுக்கு இன்றைய நாளில் வழங்கப்படுவது தொன்று தொட்டு நடைபெற்று வருகிறது.

- **பாஸ்கா ஞாயிறு**

யேசுவின் உயிர்ப்பின் வெற்றி நினைவுகூரப்படுகிறது. பாஸ்கா திருவிழா திருவழிப்பாட்டு ஆண்டின் முக்கிய திருவிழாவாகும். கிறிஸ்தவ வாழ்வின் மைய நிகழ்வு இதுவாகும். இன்றைய தினம் திருமுழுக்கு வாக்குறுதி புதுப்பிக்கப்படுவதோடு இன்றைய இறைவார்த்தையில் உயிர்ப்பு செய்தியினூடாக புதிய பாஸ்காவையும் விடுதலைப்பயண நிகழ்வினூடாக பழைய பாஸ்காவையும் அனுபவிக்க அழைக்கப்படுகிறோம்.



## ஆறாம் பாடம்

## 6. செபம்

### செபம் என்றாம் என்ன?

கத்தோலிக்க மறைக்கல்வி, செபத்தை இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளது அவை:-

1. கிறிஸ்தவ வாழ்வும், செபமும்
2. இயேசு எமக்குக் கற்றுத்தந்த செபம்

முதல் பகுதி வாழ்வைப் பற்றியும், இரண்டாம் பகுதி இயேசு கற்பித்த செபத்தைப் பற்றியும் தெளிவாக விபரிக்கின்றது.

### பழைய ஏற்பாட்டில் செபம்

பழைய ஏற்பாட்டில் செபத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது நாம் முதலில் சந்திக்கும் நபர் ஆபிரகாம் ஆவார். இறைவனது சித்தத்திற்கு இணங்குவது செபத்தின் முக்கிய பண்பாகும். தனது நாட்டை விட்டு ஆண்டவர் காட்டும் நாட்டிற்குப் போகும்படி இறைவன் ஆபிரகாமை அழைத்த வேளையிலே ஆபிரகாம் செபத்துடன் கூடிய பதிலையே அளித்தார். அது கீழ்ப்படிவாகும். மௌனமாகும். ஒரு முறை இறைவனுக்கும் ஆபிரகாமுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலில் சொதோம், கொமோரா ஆகிய நகரங்களை அழிக்க வேண்டாமென ஆபிரகாம் இறைவனிடம் வேண்டினார்.

அடுத்ததாக மக்களுக்கு வழிகாட்டும் நபராக இருந்த மோசே செபவாழ்வு வாழ்ந்தவராக விளங்கினார். நெருப்புப் பற்றி எரிந்தும் அழியாத முட்புதரின் அருகே இறைவனின் வார்த்தைக்கு உடன்பட வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. அவர் இறைவனின் குரலுக்கு செவிமடுத்தார். அதன் பின்னர் இறைவனுக்கும் மோசேக்கும் இடையே ஆழமான உறவு வளர்ந்தது. முகத்திற்கு முகம் பார்த்துப் பேசக்கூடிய அளவிற்கு அவர்களது நட்பு வளர்ந்தது. அது ஆழமான செபம், ஆழமான உறவு.

இஸ்ராயேலரின் வாழ்க்கையில் செபம் எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனைப் பழைய ஏற்பாட்டின் மூலம் அறியலாம். அவர்கள் மிகவும் மேன்மையானதாகக் கருதிய திருப்பாடலில் தனிப்பட்ட செபத்திற்கும், குழுச்செபத்திற்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டது. புகழ்ச்சி நன்றி நவிலல், பயம், கவலை, கோபம், மகிழ்ச்சி, மனச்சோர்வு போன்ற மனித உணர்வுகள் அதில் காணப்படுகின்றன. திருச்சபை தனது உத்தியோக பூர்வ செபத்தில் திருப்பாடலைப் பயன்படுத்துகிறது.

### புதிய ஏற்பாட்டில் செபம்

1. இயேசு எவ்வாறு செபித்தார் என்பதைப் புனித லூக்கா முன்வைக்கிறார். இயேசு இவ்வுலகில் மனிதாவதாரம் எடுத்ததுடன் செபத்தின் முக்கியத்துவம் முழுமையாக வெளிப்படுகிறது. நாம் எவ்வாறு செபிக்க வேண்டும் என்பதை யேசு தமது வாழ்நாட்களில் கற்றுத் தந்ததுடன் அதனை செயலிலும் வெளிப்படுத்தினார்.

2. இயேசு தனது பணியை முழுமையாக ஆரம்பிக்கும் முன்னர் அதற்கெனத் தம்மை எவ்வாறு ஆயத்தம் செய்தார் என்பதைப் புனித லூக்கா குறிப்பிடுகிறார். (லூக் 4:1) அவர் அடிக்கடி தனிமையான இடத்திற்குச் சென்று செபித்தார். சில சந்தர்ப்பங்களில் இரவு முழுவதும் செபத்தில் ஈடுபட்டார். பல சந்தர்ப்பங்களில் பிதாவுடன் ஆழமான உரையாடலில், தியானத்தில் ஈடுபட்டார். தனது தூதுப் பணியின் முக்கிய சந்தர்ப்பங்களில் நீண்ட, ஆழமான செபத்தில் நிலைத்திருந்தார். சீடர்களைத் தெரிவு செய்யும்போது, உருமாற்றம் பெற்றபோது, பாடுகளின் ஆரம்பத்தின்போது சிறப்பாக செபித்தார். லூக்கா 11ம் அதிகாரத்தில் இயேசு செபித்த முறை பற்றி மனதைத் தொடும் விதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நம்பிக்கையுடன் (விசுவாசத்துடன்) செபித்தல்

- "நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது நம்பிக்கையுடன் கேட்பதை எல்லாம் பெற்றுக் கொள்வீர்கள்" (மத் 21:22)
- இரத்தப் போக்குடைய பெண் நலம் பெறுதல். (லூக் 8:43-48)
- காற்றையும், நீரின் கொந்தளிப்பையும் அடக்குதல். (லூக் 8:22-25)
- தாழ்ச்சியுடன் செபிக்க வேண்டும் என்பதை விளக்கும் உவமை
  (பரிசேயனும், வரிதண்டுபவரும் - லூக் 18:9-14)

### திருச்சபை செபிக்கிறது

### அறிமுகம்

செபித்தல் கிறிஸ்தவ விசுவாசத்தின் பிரதான பண்பாகும். செபத்தின் மூலம் அனைத்தையும் படைத்த இறைவனுடன் நாம் ஆழமான உரையாடுகிறோம். அவரை ஆண்டவராக ஏற்றுக் கொள்கிறோம்.

### திருச்சபையில் செபம்

பெந்தகோஸ்தே தினத்தில், திருச்சபையில் செயலாற்றிய தூய ஆவியை எதிர்பார்த்திருந்த திருத்தூதர்களும், ஏனையோரும் ஒரே உள்ளத்துடன் இறைவனிடம் வேண்டினர் (திப 1:14). தூய ஆவியின் வருகையுடன் கிறிஸ்துவின் செய்தியைக் கற்பித்து அதனை உறுதி செய்ததுடன் அனைத்தையும் மீண்டும் நினைவில் இருத்தி, அந்த மறையை வாழ்வில் கடைப்பிடித்தனர். முதலாம் நூற்றாண்டில் அரம்பத் திருச்சபையினர் செபத்திலும் அப்பம் பிடுதலிலும், கற்பித்தலிலும் நிலைத்திருந்து (திப. 2:42) தமது படிப்பினையை - திருச்சபையைப் பரவச் செய்தனர். செபத்தில் இறை தந்தையின் உதவியை வேண்டினர் (திப. 4:29 - 30). பின்னர் அந்த செபம் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

1. இறை ஆசீரின் பொருட்டும் இறை ஆராதனையின் பொருட்டும் செய்யப்படும் செபம்.
   ஆசீர்வதித்தல் கிறிஸ்தவ செபத்தில் சிறப்பான பண்பாகும்.
2. வேண்டுதலின் நிமித்தம் செய்யப்படும் செபம்
   எமது பாவநிலையை ஏற்றுக் கொள்ளல். அவ்வாறே வர இருக்கும் விண்ணரசுக்கு உரிமையுடையோராவதற்கு தேவையான செபம்.
3. நம் சகோதரரின் (அயலாரின்) பொருட்டு செய்யப்படும் செபம் கிறிஸ்தவர்களாகிய நாம் எமது அயலவருக்காக உழைத்தல். அர்ப்பணிப்புடன் செயற்படுதல். அவர்களுக்காக செபித்தல்.
4. நன்றி நவிலல்
   திருப்பலி நன்றி நவிலல் ஆகும்.
5. புகழ்ச்சிச் செபம்
   இறைவன் வல்லமை மிக்கவராதலால் நாம் அவரை ஆராதிக்க வேண்டும்.

### செபத்தின் நோக்கம்

- இறைவனின் மகிமையை சொற்களால் மட்டுமன்றி, செயலாலும் வெளிப்படுத்தல்
- எமது சகோதரர்களின் ஆன்மீக, சரீர தேவைகளின் பொருட்டு மன்றாடுதல்.
- இறைவனின் மகிமையின் பொருட்டுக் கிறிஸ்துவில் உலகை ஒன்றிணைத்தல்.
- எமது ஆன்ம, சரீர தேவைகளை இறைவனின் முன் வைத்தல்.
- இறைவனிடம் எமது ஆழமான அன்பை வெளிப்படுத்துதல்.
- இறை அன்பிற்குப் பிரதி அன்பு காட்டுதல்.

### செபத்தின் பண்புகள்

* செபத்தின் முக்கிய பண்பு நம்பிக்கை அல்லது விசுவாசமாகும். கிறிஸ்துநாதர் தமது வாழ்நாளிலே அதனை எமக்குக் கற்பித்தார். (மத். 21:22, லூக். 8:43-48, லூக். 8:22-25) வாசிக்கவும்.
* செபிக்கும்போது இருக்க வேண்டிய பண்பு தாழ்ச்சியாகும். பரிசேயரும் வரிதண்டுபவரும் உவமையில் இயேசு இதனைத் தெளிவுபடுத்தினார். (லூக். 18:9-11)
* நாம் அன்புடன் செபிக்க வேண்டும். எம் மனதிலுள்ள பகைமை, வன்முறை, பழிவாங்கும் எண்ணம் என்பவற்றை நீக்கி, அனைவரிலும் ஆழமான அன்பைக் கட்டியெழுப்ப வேண்டும். அப்போது இறைவனும் எமக்கு அன்பு காட்டுவார். (மத்5:23-34)வாசிக்கவும். அவரது முழுமையான பாதுகாப்பு எமக்குக் கிடைக்கும் மனந்தளராமல், விடாமுயற்சியோடு இடைவிடாது செபிக்க வேண்டும் என்பதை இயேசு உவமைகள் மூலம் விளக்கினார்.

(உ+ம்)

- நேர்மையற்ற நடுவனும் கைம் பெண்ணும் உவமை (லூக். 18:1-8)
- நள்ளிரவில் அப்பம் கேட்ட நண்பனின் உவமை (லூக். 11:5-8)

* ஆழமான அன்புடன் ஒற்றுமையாக செபிக்க வேண்டும் என்பது மத்தேயு 5:23-24ல் விளக்கப்படுகிறது.

* செபித்தும், தாம் வேண்டுவது கிடைக்காவிடத்து பலர் செபிப்பதை நிறுத்திவிடுவர். அது விசுவாசக் குறைவின் அடையாளமாகும். நாம் வேண்டுவது கிடைப்பதும், கிடைக்காததும் இறை சித்தமாகும். நாம் இறை சித்தத்திற்கு செவி சாய்க்க வேண்டும். ''நீங்கள் கேட்பதற்கு முன்னரே உங்களுக்குத் தேவையானது எவையென உங்கள் விண்ணகத் தந்தை அறிவார்'' எனக் கூறி, இயேசு தமது சீடர்களை செபிப்பதற்கு ஊக்குவித்தார்.

* நம்பிக்கையுடன் செபிக்க வேண்டும் என்பதற்குத் திருவிவிலித்தில் பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.

- இரத்தப் போக்குடைய பெண் நலம் பெறுதல் (லூக். 8:43-48)
- காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் அடக்கியது. (லூக். 8:22-25)
- யாயீரின் மகளை உயிர்ப்பித்தல் (லூக். 8:40-56)

மேலும் நம்பிக்கையுடன் நாம் எதனைக் கேட்டாலும் அது எமக்குக் கிடைப்பதாக இயேசு கூறியுள்ளார். (மத் 21:22)

* செபிக்கும்போது நாம் பக்தியுடன் அல்லது முழு அவதானத்துடன் செபிப்பது அவசியமாகும். ''நீங்கள் சோதனைக்கு உட்படாது விழித்திருந்து செபியுங்கள்'' என இயேசு கெத்சமனியில் சீடர்களுக்குக் கூறினார். செபிக்கும்போது சோதனைகள் ஏற்படுவதால் பக்தியுடனும் அவதானத்துடனும் செபிக்க வேண்டும் என அவர் கற்பித்தார். (லூக் 22:40-46)

இயேசு எமக்கு செபிப்பதற்கான அறிவுரை வழங்கினார். கற்பித்தார். வழமையான முறையைக் கைவிட்டு செபிக்க வேண்டிய முறையைக் கிறிஸ்துநாதர் தமது சீடர்களுக்குக் கற்பித்தார். இயேசுவின் சீடர்கள் தமக்கு செபிக்கக் கற்றுத் தரும்படி இயேசுவை வேண்டினர். பயத்தை அடிப்படையாகக் கொண்ட பக்தியுடன் அல்லாது அன்பை அடிப்படையாகக் கொண்ட மனநிலையுடன் இறை தந்தையை நோக்கி செபிக்கும்படிக் கூறிய இயேசு, பரலோக மந்திரத்தை அவர்களுக்குக் கற்றக் கொடுத்தார். அந்த செபம் மிகவும் எளிமையானது. செபத்தில் இருக்க வேண்டிய அனைத்துப் பண்புகளும் அதில் அடங்கியுள்ளன. அவையாவன,

1. இறை புகழ்
2. வேண்டுதல்
3. மன்னிப்பு
4. இறை பராமரிப்புக்கு அர்ப்பணம்

கிறிஸ்துநாதர் தமது முன்மாதிரியான வாழ்வின் மூலம் செபத்தின் மேன்மையை எடுத்துக் காட்டினார். செப வாழ்விற்குக் கிறிஸ்துவே சிறந்த எடுத்துக்காட்டாவார். அவர் பன்னிரண்டு வயது முதல் தந்தையின் வேலைகளில் ஈடுபட்டு செப வாழ்வு வாழ்ந்தார்.

**இயேசுவின் முன்மாதிரிகை**

* உபவாசத்துடன் செபித்தல். (மத். 4:2)

* விடியற்காலை கருக்கலில் செபித்தல். (மாற். 1:35)

* தனிமையான இடத்திற்கு சென்று செபித்தல்.(மாற். 1:35)

* தந்தையின் விருப்பத்திற்கமைய செபித்தல்.(மத். 26:39)

* இடைவிடாமல் செபித்தல்.(லூக். 18:1-7)

* தூய ஆவியின் வரம் வேண்டி செபித்தல். (பாலைவனத்தில்) இத் திருவிவிலியப் பகுதிகளைக் கற்கவும்.

கிறிஸ்து நாதர் தமது முன்மாதிரிகையான வாழ்வால் செபத்தின் முக்கியத்துவம் பற்றித் தெளிவுபடுத்தினார். கிறிஸ்தவர்களுக்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும். இயேசு பன்னிரண்டு வயது முதல் தந்தையின் செயற்பாடுகளில் ஈடுபட்டு செப வாழ்வில் நிலைத்திருந்தார்.

**ஆரம்ப திருச்சபையின் செபம்**

செபம் பரிசுத்த ஆவியின் கொடையாகும். தந்தையை நோக்கி, அப்பா பிதாவே என்று செபிப்பதற்கு எமது உள்ளங்களைத் திறப்பது பரிசுத்த ஆவியாகும். ஆழமான செபத்திற்கு பரிசுத்த ஆவியின் வரம் அவசியமாகும். அன்று கிறிஸ்துவின் விண்ணேற்பின் பின்னர் அனைத்துக் கிறிஸ்தவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி மேல்மாடியில் இருந்த குழுவினர் ஒரே மனதுடன் இடைவிடாமல் செபித்தனர். பரிசுத்த ஆவியின் வருகையின் பின்னர் திடனைப் பெற்ற அவர்கள், செபிப்பதற்கென சிறு குழுக்களை அமைத்தனர். ''அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும் இறை வேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்.'' (திப 2:42-47) பார்க்கவும். ஆதி திருச்சபையின் சிறப்பான பண்புகளைத் தேடி அறியவும்.

**திருச்சபையில் குழுச் செபமும், தனிச் செபமும்**

திருச்சபையின் உறுப்பினர்களை இடைவிடாது செபிக்கும்படி திருச்சபைத் தூண்டுகிறது. பொது வழிபாடு எனும் குழுச்செபம் உத்தியோகபூர்வமாக நிறைவேற்றப்படும்போது அது திருவழிபாடு எனப்படுகிறது. திருவழிபாட்டில் திருப்பலி முக்கிய இடத்தைப் பெறுகிறது. குருவானவரின் வழிநடத்துதலில் நடைபெறும் திருவழிபாடாக அது அமைகிறது. குழுவாகச் செபிக்கும்போது இறைவன் எம்மிடையே வாசம் செய்கிறார். (மத். 18:20)

- இவை தவிர திருமணி ஆராதனை, திருவிவிலிய வழிபாடு, குணமாக்கும் வழிபாடு, மாலை ஆராதனை, பொது சிலுவைப்பாதை என்பனவும் குழுச் செபமாகும். குழுச் செபம் இறை புகழாக அமைய வேண்டுமாயின் அனைவரும் சேர்ந்து செபிக்க வேண்டும், பாடல்களில் பங்கேற்க வேண்டும்.

- குடும்பங்கள் ஒன்றுபட்டு செய்யும் செபமும் பொதுச் செபமாகும். செபமாலை ஓதுதல், அடிக்கடி தியானிக்கக் கூடிய செபங்கள் என்பன இதன் பொருட்டு உள்ளன. தந்தை அல்லது தாய் தலைமைத்துவம் வகித்துத் திருப்பாடல்கள், திருவிவிலியம், பாடல்கள் என்பனவற்றை ஒன்றிணைந்து சொல்வது, வாசிப்பது அல்லது தியானிப்பதன் மூலம் இவற்றை இறைபுகழாக மாற்றலாம். பழைய மரபு முறைகளிலிருந்து விடுபட்டு செபிப்பதற்கு நாம் பழக வேண்டும்.
- எம்மைத் தனியாக செபிப்பதற்கும் அன்னையாம் திருச்சபை அழைப்பு விடுக்கிறாள். பொருத்தமான சூழலைத் தெரிவு செய்து, அமைதியாக அல்லது வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலம் செபிக்க முடியும்.

- காலையில் எழும்பும்போதும், இரவு படுக்கைக்கு செல்லும் முன்பும் நாம் கட்டாயமாக செபிக்க வேண்டும். அவ்வாறு அவசர சந்தர்ப்பங்களிலும், முக்கிய வேலையைத் தொடங்கும் முன்னரும், பின்னரும் செபிப்பதில் எம்மை நாம் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும். திருச்சபையால் அனுமதிக்கப்பட்ட பொது செபங்கள் சிலவற்றை மனனம் செய்து பக்தியுடன் சொல்லலாம். குழுவாகவும் அவற்றைச் சொல்வது பொருந்தும்.

**திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள செபங்கள்**

- சிலுவை அடையாளம்
- கர்த்தர் கற்பித்த செபம்
- விசுவாசப் பிரமாணம்
- மனதுக்க செபம்
- தேவ அன்னைக்கு செபம்
- பாஸ்கா கால மூவேளைச் செபம்
- கிருபை தயாபர செபம்
- பச்சாத்தாப செபம்
- பரிசுத்த ஆவியின் செபம்
- திரித்துவ ஆராதனை
- அருள் நிறைந்த மரியே செபம்
- மூவேளை செபம்
- இராச் செபம்
- காவல் தூதருக்கு செபம்
- உணவு உட்கொள்ளும் முன்/பின் செபம்
- மிக்கேல் சம்மனசானவருக்கு செபம்
- காலைச் செபம்
- செபமாலை மறையுண்மைகள்

**இச் செபங்களை மனனம் செய்யவும்**

* **சிலுவை அடையாளம்**

சிலுவை எமது மீட்பின் அடையாளமாகும். இதன் மூலம் நாம் பரிசுத்த திரித்துவத்திற்கு எம்மை அர்ப்பணிக்கிறோம். அதனை வெளிப்படையாக அறிவிக்கிறோம்.

* **திரித்துவ ஆராதனை**

திரித்துவ மறைபொருளை வெளிப்படுத்துகிறோம். திரித்துவ இறைவனைப் புகழ்கிறோம், ஆதியிலிருந்து இறுதி வரை அவர் வாழ்வதை வெளிப்படுத்துகின்றோம்.

* **கர்த்தர் கற்பித்த செபம்**

எம் ஆண்டவர் திருத்தூதருக்கு கற்பித்த செபம். செபத்தில் இருக்க வேண்டிய அனைத்து இயல்புகளும் பண்புகளும் அடங்கியுள்ளன.

இது நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது
1. ஆராதனை
2. புகழ்ச்சி
3. வாழ்க்கைக்குத் தேவையானதைக் கேட்டல்
4. மன்னிப்பு வேண்டுதல்

* **அருள் நிறை மரியே (மங்கள வார்த்தை) செபம்**

- தேவ அன்னையின் துணையையும், பரிந்து பேசுதலையும் இதன் மூலம் வேண்டுகிறோம். இது கிறிஸ்தவர் களாகிய எமது முக்கிய செபமாகும். இந்த செபம் மூன்று பிரிவுகளையுடையது.
- கபிரியேல் தூதர் கூறிய வார்த்தை
- எலிசபெத் மரியாளை வாழ்த்துதல்
- திருச்சபையினால் சேர்க்கப்பட்ட பகுதி

* **விசுவாசப் பிரமாணம்**

கத்தோலிக்கத் திருச்சபையின் முக்கிய சத்தியங்கள் (உண்மைகள்) இதிலடங்கியுள்ளன. நாம் விசுவசிக்க வேண்டிய பன்னிரண்டு சத்தியங்களும் இதில் உள்ளன.

* **மூவேளைச் செபம்**

புனித லூக்கா நற்செய்தியை அடிப்படையாகக் கொண்டு இயேசுவின் மனிதவதார மறைபொருளை நினைவு கூருமுகமாக முன் வைக்கப்படும் செபமாகும். நாளொன்றுக்கு மும்முறை இதனைச் சொல்லும்படி அன்னையாம் திருச்சபை எமக்கு அழைப்பு விடுக்கிறாள்.

* **மனத்துக்க செபம்**

பாவ மன்னிப்பும், மனம் வருந்துதலின் மூலம் நல்வாழ்வும் வாழ இறைவனுக்கு அளிக்கும் வாக்குறுதியும் இதில் உள்ளன.

* **செபமாலை மறை உண்மைகள்**

இயேசுவினதும், தேவ அன்னையினதும் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளை மீட்பின் மறை உண்மைகளை களோடு இணைத்து கருத்துடன் செபமாலை சொல்வது ஆழமான செபமாகும். ஆழமான தியானமாகும். இதற்கென நான்கு வகையான மறை உண்மைகள் உள்ளன.

**1. மகிழ்ச்சி நிறை மறையுண்மைகள் (திங்கள், திருவருகைக் கால ஞாயிறு)**

- வானதூதர்“அன்னை மரியாவுக்கு இறைமகன் இயேசுவின் மதித அவதாரத்தை அறிவிக்கிறார். (லூக் 1:30-31)
- மரியாள் எலிசபேத்தை சந்தித்தல் (லூக் 1:42-43)
- பெத்லேகேமில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் இயேசு பிறத்தல். (லூக் 2:7)
- இயேசு எருசலேம் ஆலயத்தில் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்படுதல். (லூக் 2:25-35)
- இயேசு 12 வயதில் காணாமற் போய் எருசலேம் ஆலயத்தில் கண்டுபிடிக்கப்படுதல். (லூக் 2:41-51)

**2. துன்பம் நிறை மறையுண்மைகள் (செவ்வாய், வெள்ளி, தவக்கால ஞாயிறு)**

- கெத்சமெனித் தோட்டத்தில் இயேசு (மாற் 14:36)
- இயேசு கற்றூணிற் கட்டியடிக்கப்படுகிறார். (மாற் 15:15)
- இயேசு முள்முடி சூடப்பட்டு அவமானமடைகிறார். (மாற் 15:17-18)
- இயேசு சிலுவை சுமந்து செல்கிறார். (யோவா 19:17)
- இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரணிக்கிறார். (லூக் 23:46)

**3. மகிமை நிறை மறையுண்மைகள் (புதன், சனி, ஞாயிறு)**

- இயேசு மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார்.(மத் 28:5-6)
- இயேசு விண்ணகம் சென்று தந்தையாம் இறைவனின் வலப்பக்கம் அமர்ந்துள்ளார். (திப 1:9-11)
- இயேசு பரிசுத்த ஆவியாரைத் திருத்தூதர்கள் மீதும் ஆதித் திருச்சபை மீதும் பொழிந்தார்.(திப 2:2-4)
- இயேசுவின் உயிர்ப்பால் அன்னை மரியாள் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்ட பின் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டார். (1தெச 4:14-17)
- அன்னை மரியாள் விண்ணின் மண்ணின் அரசியாக முடி சூட்டப்பட்டார். (தி.வெ12:1)

**4. ஒளி நிறை மறையுண்மைகள் (வியாழன்)**

- யோர்தான் ஆற்றில் இயேசு திருமுழுக்குப் பெற்று சாத்தானின் சோதனைகள் மேல் வெற்றி வாகை சூடுகிறார்.(மாற்1:9-11)
- கானா ஊர் திருமணத்திற்கு இயேசு சென்று அங்கு மணமக்களுக்கு உதவி செய்கிறார். (யோவா2:3-5)
- மலைப் பிரசங்கத்திலே இயேசு விண்ணரசின் இரகசியங்களை எடுத்துரைக்கிறார். (மத் 5:1-12)
- தாபோர் மலையிலே திருத்தூதர்கள் முன்பாக இயேசு மறுரூபமாக காட்சியளிக்கிறார். (மாற் 9:2-7)
- கடைசி இராப்போசன வேளையில் இயேசு குருத்துவத்தையும் நற்கருணையையும் நிறுவினார். (மத் 26:26-28)

## ஏழாம் பாடம்

### 7. இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம்

திருச்சபை வரலாற்றிலே இது 21வது சங்கமாகும். 1959ம் ஆண்டிலே, திருத்தந்தை 23ம் அருளப்பர் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தைக் கூட்ட இருப்பதாக அறிவித்தார். இச் சங்கத்தின் முன்னோடி அவரே. கி.பி 1962-1965 வரை சங்கம் நடைபெற்றது. 2900க்கு மேற்பட்ட ஆயர்கள் பங்கு கொண்ட இச் சங்கத்தின் முக்கிய விவாத பொருள் "உலகோடு உரையாடும் திருச்சபை" யாகும். அவரது திடீர் மரணத்தைத் தொடர்ந்து, திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்ட திருத்தந்தை 6ம் சின்னப்பர் சங்கத்தை முன்னெடுத்துச் சென்றார். நான்கு ஆண்டுகள் ஆயத்தம் செய்யப்பட்ட இச்சங்கம் 4 முக்கிய அமர்வுகளைக் கொண்டது.

| | | |
|---|---|---|
| முதலாம் அமர்வு | - | 1962 ஐப்பசி 11ம் திகதியிலிருந்து மார்கழி 8ம் திகதி வரை |
| இரண்டாம் அமர்வு | - | 1963 புரட்டாதி 29ம் திகதியிலிருந்து மார்கழி 4ம் திகதி வரை |
| மூன்றாம் அமர்வு | - | 1964 புரட்டாதி 14ம் திகதியிலிருந்து கார்த்திகை 21ம் திகதி வரை |
| நான்காம் அமர்வு | - | 1965 புரட்டாதி 14ம் திகதியிலிருந்து மார்கழி 8ம் திகதி வரை |

**பின்னணி**

முதலாம் வத்திக்கான் பொதுச்சங்கம் 1869 மார்கழி 8ம் திகதி ஆரம்பமானது. இச் சங்கத்தில் 51 செயற் திட்டங்கள் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டாலும் அதில் இரண்டுக்கு மட்டுமே அனுமதி கிடைத்தது. 1870ல் பிரான்ஸ் யுத்தம் ஆரம்பமானது. இதனால் ஜெர்மனிய ஆயர்கள் பலர் தம் நாட்டை விட்டு வெளியேறினர். உரோமை நகர் எதிரிகளினால் கைப்பற்றப்பட்டது. இதனால் 1ம் வத்திக்கான் பொதுச்சங்கம் இடைநிறுத்தப்பட்டது. அதில்:-

- நம்பிக்கைக்கும் நன் நடத்தைக்கும் எதிராக எழும் தவறான படிப்பினைகளை இல்லாதொழித்தல்.
- மாறுகின்ற காலத்திற்கேற்ப ஒழுங்கு விடயங்களைத் தயாரித்தல்.
- திருச்சபையின் நிலையை விளக்கமாக விபரித்தல்.
- அரசுடன் கைகோர்க்கும் நோக்கத்தை நிறைவேற்ற முடியாதாயினும் இவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவையை திருப்பீடம் உணர்ந்தது.

**இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்கு முன்பு உலகம்**


மத்திய யுகத்திலிருந்து புத்தக அறிவின் அடிப்படையிலேயே எண்ணங்கள், தொடர்பான பணியாற்றப்பட்டது. உண்மையின்பால் கவனம் செலுத்தப்பட்டது. மத்திய காலத்தில் அறிவின் அடிப்படையில் எழுதப்பட்ட விசுவாச உண்மைகள் காலத்திற்கு ஏற்றதாக இருக்கவில்லை. திருச்சபையின் உள்ளேயும் வெளியேயும் மெய்யியல் கண்ணோட்டத்தில் வேறுபாட்டைக் காணக் கூடியதாயிருந்தது. விசுவாச உண்மைகள் உண்மை வாழ்விற்கு வெகு தூரத்திலிருந்தது. விஞ்ஞான எழுச்சி, கைத்தொழில் புரட்சி, பிரான்ஸ் புரட்சி ஆகியவற்றால் விசுவாசத்திலிருந்து விலகி உலகியலுக்கு வளைந்து கொடுக்கும் பண்பாடு கீழைத்தேய ஐரோப்பாவில் ஏற்பட்டது. படைத்த இறைவனை விட மனிதனை மையமாகக் கொண்டு அவனுக்கு முந்திய இடம் வழங்கப்பட்டது.

**இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்திற்கு முன் திருச்சபை**

திருச்சபையில் ஒரு நிறுவன இயல்பைக் காணக் கூடியதாயிருந்தது. திருச்சபையில் துறவறத்தாருக்கு பரந்த அதிகாரமும் பொறுப்பும் அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் பொது நிலையினருக்கு திருச்சபையில் ஒரு கீழான இடமே தரப்பட்டிருந்தது. கீழேயுள்ள படத்தில் அதனைக் காணலாம்.

பொதுநிலையினர் Pay – Pray – Obey அதாவது பணம் செலுத்துதல், திருச்சபைக்காக செபித்தல், திருச்சபையின் கட்டளைக்கு கீழ்ப்படிதல் என்ற நிலையிலிருந்தனர். இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பின் இந் நிலையில் மாற்றம் ஏற்பட்டது.

**இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன் திருச்சபை**




லௌகீக முன்னேற்றத்திற்கும், புத்தெழுச்சிக்கும் ஏற்ற - அதற்கு பொருத்தமான மறுசீரமைப்பு/ புத்தெழுச்சி திருச்சபையில் ஏற்பட வேண்டும் என்பதை திருத்தந்தை 23ம் அருளப்பர் உணர்ந்தார். அதனால் காலாகாலமாக மூடியிருந்த திருச்சபையின் கதவுகளைத் திறக்க வேண்டும் என எண்ணினார். திருத்தந்தை 23ம் அருளப்பரின் தலைமைத்துவத்தின் கீழ் திருச்சபை நல் கண்ணோட்டத்தோடு பயணத்தை ஆரம்பித்தது. நன்மையான பணித்திட்டங்கள் ஆரம்பமாயின. அவர் எழுதிய **அநீதிக்கு பதில், அவனியில் அமைதி** போன்ற சுற்றுமடல்களில் அவற்றைக் காணலாம். பல்வித கிறிஸ்தவ சபைகளுக்குள்ளும் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்பது அவரது நோக்கமாக இருந்தது. திருச்சபையின் வெற்றி நிலையை விட தாழ்மை குணத்தை பாராட்டிய திருத்தந்தை 23ம் அருளப்பர் சில சந்தர்ப்பங்களில் திருச்சபையின் தவறுகளுக்காக பகிரங்கமாக மன்னிப்பு கேட்கும் அளவுக்கு தாழ்மையானார். மேல் காணப்படும் விடயங்களைக் கருத்திற் கொண்டு அவற்றை உலகெங்கும் பரப்புவதற்காக சங்கம் கூட்ட வேண்டிய அவசியத்தை உணர்ந்தார்.

**2ம் வத்திக்கான் சங்கம் கூட்டுவதற்கான அடிப்படை நோக்கங்கள்:-**

1. முதலாம் வத்திக்கான் சங்கம் பிரான்ஸ் - ஜேர்மனி யுத்தத்தினால் இடைநிறுத்தப்பட்டது. அதனால் மிகுதியான செயற்திட்டத்தில் உள்ள விடயங்கள் மூலம் திருச்சபையை மீண்டும் உயிரூட்டம் பெறச் செய்வதற்கு திருத்தந்தை 23ம் அருளப்பர் விரும்பினார்.
2. முதலாம் வத்திக்கான் சங்கம் - சிறப்பாக மறையுண்மைகளைப் பாதுகாப்பதற்காக மறைக்கு எதிரானோரை, மாற்று கருத்துடையோரை எதிர்த்தது. ஆனால் 2ம் வத்திக்கான் சங்கம் மறையுண்மைகளைப் பாதுகாப்பதற்கு மேலாக ஆயர்த்துவ பணி ஆற்றும் நோக்கத்தை முன்வைத்தது. இதனால் வத்திக்கான் சங்கத்தின் அடிப்படை நோக்கம் யாதெனில் மனிதனின் முக்கியத்துவத்தையும் மேன்மையையும் காட்டுவதாகும்.
3. குடும்பம், சமூக வாழ்வு அடங்கலாக மனித செயற்பாட்டின் அனைத்து தரத்திற்கும் மறையைக் கொண்டு செல்லும்போது திருவிவிலியம், முதல் தந்தையர்களினால் உரிமை பேறான மறையுண்மைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துதல்.
4. விசுவாச உண்மைகள் மாறுபடும் உலகில் - நவீன மனிதனின் மன நிலையைக்கேற்ப இறைவனை மறையில் முன்வைத்தல்.
5. உலகம் ஒரு பக்கமாக பயணிக்கும்போது அதற்கு முற்றிலும் வேறுபட்ட வழியில் திருச்சபை பயணித்ததால் காலாகாலமாக மூடியிருந்த திருச்சபையின் கதவுகளைத் திறந்து திருச்சபை உலகில் மனிதாவதாரம் எடுக்க வேண்டும் என்பதை திருத்தந்தை 23ம் அருளப்பர் உணர்ந்தார்.
6. பல்வேறு கிறிஸ்தவ சபைகளுக்கிடையே இருந்த சந்தேகம், விசுவாசமின்மை நிலையை மாற்றி திருச்சபையின் ஒற்றுமைக்கு வழிசமைத்தல்.

**இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தில் கலந்துரையாடப்பட்ட அனைத்து விடயங்களையும் முக்கிய நான்கு தலைப்பில் அடக்கலாம் அவை.**

- இறைவன் - அன்பான தந்தை என. (யோவா 15:13, லூக் 5:20, மத் 6:9)
- மனிதன் - மனிதன் இறைசாயலிலும் அவருக்கு சமமாகவும் படைக்கப்பட்டுள்ளான் என. (தொநூ 2:19-20)
- பரிசுத்த திருச்சபை - உயிர்த்த கிறிஸ்து வரலாற்றில் உலகின் இறுதி வரை வாழ்கிறார். (மத் 28:16-20)
- உலகம் - மனித சமூகம் அனைத்தும் ஒரே குடும்பமாக வாழுதல்.

(மனித பெறுமதிக்கும் கிறிஸ்தவ பெறுமதிக்குமிடையே வேறுபாடு இல்லை.)

இன்றைய நவீன உலகில் நேர்மை, உண்மை, நீதி, அபிவிருத்தி ஆகிய அனைத்தும் கிறிஸ்துவுக்கான வேறு பெயர்களாகும். (தொநூ 1:31)

**இரண்டாம் வத்திக்கான் பொதுசங்கம் பற்றிய மக்களின் பதிலளிப்பு**

மக்களின் பதிலளிப்பு ஒரேவிதமாக இருக்கவில்லை. பல்வேறு தரப்பினரும் தமது சிந்தனைகளுக்கேற்ப பல்விதமாக பதிலளித்தார்.

- ஆரம்பத்திலிருந்தே மனித அடிப்படை நோக்கு முறையில் பரந்த எண்ணம் கொண்டோர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தை அதிக ஆசையுடன் ஏற்றுக் கொண்டனர்.
- சிலர் இந்த படிப்பினைகளில் தமக்கு பழக்கம், ஈடுபாடு இல்லாவிடினும் திருச்சபையின் ஆசிரிய அதிகாரத்திற்கு மதிப்பளித்ததால் ஏற்றுக் கொண்டனர்.
- சிலர், வத்திக்கான் சங்கம் மனிதன், உலகு மட்டில் அதிக ஈடுபாடு கொண்டு மறையை கவனத்திற் கொள்ளவில்லை என குற்றம் சுமத்தினர்.

இச்சங்கத்தின் படிப்பினைகளிலுள்ள ஆழத்தையும் புதிய தன்மையையும் பார்க்கும்போது இத்தகைய பதிலளிப்புக்கள் ஒன்றும் புதுமையானதல்ல என கூறும் திருத்தந்தை 6ம் சின்னப்பர் சங்கத்தை முடிவுக்கு கொண்டு வரும்போது அதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டதாக கூறினார். அதில் மூன்றாவது பதிலளிப்பில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் கருத்து தெரிவித்தார். நல்ல சமாரியன் உவமையில் முன்வைக்கப்பட்ட சகோதர அன்பை அடிப்படையாகக் கொண்ட ஆன்மீகத்தையே 2ம் வத்திக்கான் பொதுசங்கத்தில் திருச்சபை பின்பற்றுகிறது எனவும் அவர் கூறினார்.

இரண்டாம் வத்திக்கான் சங்க போதனைகள் 16 ஏடுகளாக வெளிவந்தன. அவற்றை மூன்று வகையாக பிரிக்கலாம். அவை:-

- கொள்கை விளக்கம் - (4)
- கோட்பாடு விளக்கம் - (3)
- விதித் தொகுப்பு - (9)

**கொள்கை விளக்கம் (நான்கு)**

1. திருவழிப்பாடு பற்றிய கொள்கை விளக்கம்
2. திருச்சபை பற்றிய கோட்பாடு விளக்கம்.
3. இறைவெளிப்பாடு பற்றிய கோட்பாடு விளக்கம்
4. இன்றைய உலகில் திருச்சபை பற்றிய கொள்கை விளக்கம்.

**அறிக்கைகள் (மூன்று)**

1. கிறிஸ்தவ கல்வி பற்றிய அறிக்கை
2. கிறஸ்தவமல்லா சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு பற்றிய அறிக்கை
3. சமய சுதந்திரம் பற்றிய அறிக்கை

**விதித் தொகுப்பு (ஒன்பது)**

1. சமூக தொடர்புக் கருவிகள் பற்றிய விதித்தொகுப்பு
2. கத்தோலிக்க கீழைச் சபைகள் பற்றிய விதித்தொகுப்பு
3. கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய விதித்தொகுப்பு
4. திருச்சபையில் ஆயர்களின் அருள்பணி பற்றிய விதித்தொகுப்பு
5. துறவற வாழ்வைப் புதுப்பித்தல் பற்றிய விதித்தொகுப்பு
6. திருப்பணிப் பயிற்சி பற்றிய விதித்தொகுப்பு
7. பொது நிலையினரின் தூதுப் பணி பற்றிய விதித்தொகுப்பு
8. திருச்சபையின் நற்செய்திப் பணி பற்றிய விதித்தொகுப்பு
9. திருப்பணியாளர்களின் பணியும் வாழ்வும் பற்றிய விதித்தொகுப்பு

## எட்டாம் பாடம்

## 8. மறைக்கல்வியும் அதன் நோக்கமும்

**அறிமுகம்:-**

கிறிஸ்து தமது வாழ்வினாலும் வார்த்தையினாலும் வெளிப்படுத்திய, கற்பித்த – மறையை அனைத்து மக்களுக்கும் போதிப்பதற்கும் கற்பிப்பதற்குமான அதிகாரத்தை தம் சீடர்களுக்கு அளித்தார். அதுவே அவர் உயிர்த்த பின் தம் சீடர்களுக்கு அளித்த இறுதி கட்டளையாகும். "எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" (மத் 28:18-20) இத் தூதுப்பணியை நிறைவேற்றுவதற்காக தூய ஆவியின் வரத்தையும் அவர்களுக்கு அளித்தார்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் படிப்பினையின்படி, மறைக்கல்வி – அனைத்து கத்தோலிக்கரினதும் நம்பிக்கை - (செயற்பாடு) திருச்சபையின் முழுமையான ஞானத்துடன், (உணர்வுடன்) ஆற்ற வேண்டிய பணி என திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் கூறுகிறார். அவ்வாறே மறைக்கல்வி என்பது மக்களின் நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்தி நற்செய்தியை போதிப்பதாகும். இது கிறிஸ்துவை மையமாகக் கொண்டதாகும். இயேசுவின் படிப்பினையை மற்றவர்களுக்கு கற்பித்து அவர்களிடையே பரப்புவதே இதன் நோக்கமாகும். முழுமையான கிறிஸ்தவ வாழ்வுக்கு எம்மைக் கொண்டு செல்வதற்காக மறைக்கல்வியை முறையாக முன் கொண்டு செல்ல வேண்டியது அவசியமாகும்.

**அதன்படி பார்க்கும் போது:-**

1. மறைக் கல்வி இறை வெளிப்பாட்டிலிருந்து வருகிறது.
2. மறை என்பது கிறிஸ்துவே ஆவார்.
3. கிறிஸ்துவைப் பற்றிய அறிவை முறைசார் விதத்தில், தேவைப்படும்போது அதிலிருந்து சற்று விலகியும் மறையாசிரியர் அளிக்க வேண்டும்.
4. மறையை அளிக்கும்போது மனித அனுபவத்தைத் தூய ஆவியின் ஒளியில் சீர்தூக்கிப் பார்த்து இறை செய்தியை விளக்கமாக அளிக்க வேண்டும்.
5. நிறைவான கிறிஸ்தவ வாழ்விற்கு கிறிஸ்துவின் மறை உண்மைகள் அடிப்படையாக இருக்க வேண்டும்.
6. மறை பாடத்தை முறையாக அளிக்க வேண்டும்.
7. மறைபாடம் தெளிவான நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
8. மறை, திருவிவிலியத்திற்கேற்ப அமைய வேண்டும்.
9. மறைக்கல்வி நம்பிக்கை வாழ்வில் தங்கியிருக்க வேண்டும்.

**மறைக்கல்வியின் நோக்கம்**

கிறிஸ்துவினால் இவ்வுலகில் ஆரம்பிக்கப்பட்ட பணியை முன்னெடுத்துச் செல்வதன் மூலம் இவ்வுலகில் விண்ணரசைப் பரப்புவதும் அவருடன் ஆழமான உறவை ஏற்படுத்திக்கொள்வதுமே ஆகும். மறைக்கல்வியின் முக்கிய நோக்கம் யாதெனில் சுருக்கமாகச் சொல்வதானால் கிறிஸ்துவின் ஆளுமையைப் பிள்ளையில் முழுமையாகக் கொண்டு வருவதாகும்.

**இந்த நோக்கத்தை சுருக்கமாக கீழ்கண்டவாறு விளக்கலாம்.**

1. முழுமையான மனிதத்துவத்தைக் கட்டியெழுப்புதலும் இறைவன்பால் மனிதனின் மனதைத் திருப்புவதுமாகும்.
2. இறைவார்த்தையை அளிப்பதன் மூலம் உண்மையான மனஸ்தாபத்தை ஏற்படுத்துதல்.
3. கிறிஸ்துவின் மறை உண்மையை நோக்கி மனிதனைக் கொண்டு செல்லுதல்.
4. பாஸ்கா மறை பொருளுக்கு செயல் முறையில் சான்று பகரும் திறனை ஏற்படுத்தல்.
5. இறை மக்களின் விடுதலைக்காக செயற்படும் மக்களை உருவாக்குதல்.
6. லௌகீக உலகில் நற்செய்தியின் மேன்மையை உள்வாங்கி உலகைத் தூய்மைப்படுத்தல்.

நிறைவான ஆளுமைக்கு வழிகாட்டும் மறைக்கல்வியானது, நல் மக்களாகவும், ஆன்மீக வாழ்வில் வளர்ச்சியை ஏற்படுத்தி முன்மாதிரிகையான கிறிஸ்தவனாகவும் நம்பிக்கையிலும் அன்பிலும் வாழ்வதற்கு எம்மைக் கொண்டு செல்கிறது. நல்ல கிறிஸ்தவ மனநிலையை உள்ளத்தில் ஏற்படுத்துவதன் மூலம் விண்ணரசை இவ்வுலகில் பரப்புவதற்கு ஆர்வத்துடன் செயற்படச் செய்வது மறைக்கல்வியின் நோக்கம்.

**மறைக்கல்வி என்றால் என்ன?**

மறை ஒரு கற்பிக்கும் விஞ்ஞானமாயிருக்கிறது. அதற்கு அடிப்படை ஏதுவாயிருப்பது என்ன என்பதை நாம் கற்று அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு ஏதுவானவற்றில் பல்வித பிரிவுகளையும் ஆரம்ப மறையைப் பற்றியும் மறையாசிரியர் அறிந்திருக்க வேண்டும். மறைக் கல்வியின் முக்கிய பிரிவு,

| | | |
|---|---|---|
| கற்பிப்பது யார்? | - | ஆசிரியர் |
| கற்பிப்பது யாருக்கு? | - | மாணவருக்கு |
| கற்பிக்கப்படுவது எது? | - | பாட விடயம் (மறை) |
| கற்பிப்பது எவ்வாறு? | - | முறைசார் போதனை முறை |

**ஆசிரியர்**

ஆசிரியர், மறையாசிரியர் என அறிமுகப்படுத்தப்படுகிறார். மறைக் கல்வி கற்பிக்கும்போது ஆசிரியரை மையமாக அல்ல. மாணவனை மையமாகக் கொண்டு மறைகற்பிக்கப்படுவது முக்கியமானதாக இருக்கிறது. ஆனாலும் சமயக் கல்வியில் ஆசிரியர் இன்றும் முக்கியமானவராக இருக்கிறார்.

**அவரது பணி**

அவரது பணி இறைவாக்கு பணியாகும். யேசுவின் வாழ்வையும், படிப்பினைகளையும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதும், மாணவர்களை இறைவனுடன் நெருங்கிய உறவு கொள்ளச் செய்வதும் அவரது பணியாகும். மறையாசிரியர் யேசுவின் கையிலுள்ள ஆயுதமாக இருக்கிறார். அவர் இறைவார்த்தையை / நற்செய்தியைப் போதிக்க வேண்டும். தமது பணியை மதிப்புக்காகவும் புகழுக்காகவும் அல்லாது இறை மகிமைக்காகவும் புகழ்ச்சிக்காகவும் ஆற்ற வேண்டும்.

**அவரது முன்மாதிரிகை**

மறையாசிரியரின் வாழ்வும் பணியும் எப்போதும் கிறிஸ்துவுடனும் தந்தை இறைவனுடனும் தூய ஆவியுடனும் இணைந்திருக்க வேண்டும். செப வாழ்வும் அர்ப்பண பணியும் அத்துடன் **<u>மறையாசிரியரில் பிரகாசிக்கும் ஆன்மீக</u>** பண்புகள் வழியாக தாம் கற்பிப்பவற்றிற்கு சான்று பகர வேண்டும். அவ்வாறே நம்பிக்கை ஒளியில் உயிர் பெறும் தமது செயல்கள் வழியாக லௌகீக நோக்கங்களை உள்ளத்திலிருந்து அகற்றி விட வேண்டும். தமது வாழ்கையில் நற்செய்தியின் பெறுமதியைக் காட்டும், சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகை காட்டப்பட வேண்டும்.

**அவரது அர்ப்பணம்**

மறைக்கல்வி பணியில் வெற்றி, அதில் ஈடுபடுபவரின் அர்ப்பணத்தில் தங்கியுள்ளது. அதனால் அவர் தம் மாணவர்களிடையில் மனிதாவதாரம் எடுக்க வேண்டும். இப் பணியை நிறைவேற்றும் போது பல்வித தடைகள், சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். அவரது அர்ப்பண வாழ்வினால் இத் தடைகளையெல்லாம் அகற்றிவிடலாம். தடைகளுக்கு மத்தியில் விண்ணரசை – கிறிஸ்துவின் உடலைக் கட்டியெழுப்பும் திறனை அவர் பெற்றிருக்க வேண்டும். யேசு, இறை சித்தத்தை நிறைவேற்றுவதற்கு – தமக்கு அளிக்கப்பட்ட பணியை செய்து முடிப்பதற்கு தம்மை அர்ப்பணித்தது போலவும் மரியாள் தனது அழைப்பை உணர்ந்து மகனின் தூதுப் பணிக்கு தன்னை அர்ப்பணித்தது போலவும் தன்னை, ‘தான்’ என்ற நிலையை அழித்து தன்னை வெறுமையாக்கி - தனது அழைப்புக்கு முழுமையாக தன்னை அர்ப்பணிக்க வேண்டும்.

**ஆசிரிய ஆளுமை**

தம்மிடம் கற்கும் மாணவரின் மனதில் ஆசிரியரைப் பற்றி எழுப்பப்பட்டுள்ள கற்பனை உருவம் அல்லது மனநிலையை ஆசிரியர் ஆளுமை என அறிமுகப்படுத்தலாம். பல வேளைகளில் அவரின் தோற்றம், பேசும் பாணி, சைகை, திறமை, முன்மாதிரிகை, கற்பிக்கும் திறமை, வகுப்பபைக் கட்டுப்படுத்தல், ஒழுக்கம், அறிவு, நடை உடை, செயல், நடத்தை ஆகியவற்றைக் கொண்டு ஆசிரிய ஆளுமை கட்டியெழுப்பப்படுகிறது. வேறு விதமாகச் சொல்வதானால் மறையாசிரியரில் ஒளிரும் ஆளுமை – நாசரேத் யேசுவும், அவரது ஆளுமையுமாகும்.

**நல்ல ஆசிரிய ஆளுமையுள்ள மறையாசிரியரின் பண்புகள்:-**

* மறையாசிரியர் பிள்ளைகளின் ஆசானைப் போலவே பெற்றோராகவும் செயற்படுவதை தமது வாழ்க்கைச் சான்றின் வழியாக காட்டுதல்.
* மறையைக் கற்பித்தல் இறை அழைப்பு ஆதலால் தாம் கற்பிப்பவற்றைப் பற்றிய அறிவைக் கொண்டிருத்தல்.

* மறைக்கல்வி தூய ஆவியின் பணியாகும். அதனால் மறையாசிரியர் அதிக ஆர்வம், செயற்பாட்டுடன் கற்ப்பிக்கும் திறன் - கொண்டிருத்தல்.

* சட்டம், தண்டனை, கடன், நீதி ஆகியவற்றை விட உள்ளத்திலிருந்து எழும் அன்பு, இரக்கத்துடன் பிள்ளைகளை இறைவனிடம் இட்டுச்செல்லுதல்.

* மாணவர்களில் அவர்களைப் பற்றிய நல்லெண்ணத்தை ஏற்படுத்தல்.

* முன்னேற்றம் அடைகிற உலகிலே முகம் கொடுக்கக்கூடிய விதத்தில் புதிய தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மறையைக் கற்பிக்கும் திறமை.

**மாணவன்**

மறையைக் கற்பிக்கும்போது அங்கு மாணவன் இன்று முக்கியமானவனாக இருக்கின்றான். காரணம், இன்றைய கல்வி, மாணவனை மையமாகக் கொண்டே அளிக்கப்படுகிறது. மறையைக் கற்பிக்கும் ஆசிரியர் மறையை மட்டுமன்றி கல்வி, உளவியல் கல்வி, அடிப்படைக் கல்வி பற்றிய அறிவைக் கொண்டிருக் வேண்டும். **"ஜோனுக்கு எழுத்து கற்பிக்கும் முன் அவனைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்."** என்பதிலிருந்து இது புலனாகிறது. கற்பித்தலை சிறப்பாக செய்வதற்கு மாணவரைப் புரிந்து கொள்வதாலும் அவர்களுடன் நட்புறவு கொள்வதாலும் அவர்களின் விருப்பு வெறுப்புக்களை பற்றி அறியலாம். இதற்காக ஆசிரியர் மாணவரில் கிறிஸ்துவாக செயலாற்றலாம். இங்கே சிறப்பாக ஆசிரியர் - மாணவ உறவு அவசியமாகிறது. உரையாடல், இந்த உறவுக்கு தேவையானதாக இருக்கிறது. அதனால் அவர்களின் உடல், உள தேவைகள், வாழும் சுற்றாடல், அவர்களின் முன்னைய அறிவு, நடத்தை ஆகியவற்றை மறை ஆசிரியரால் இலகுவில் அறிந்து கொள்ள முடியும்.

**மாணவரைப் புரிந்து கொள்வதற்கு மேற்கொள்ளக் கூடிய சில நடவடிக்கைகள்:-**

- மாணவரின், பெற்றோருடன் தொடர்பைக் கட்டியெழுப்புதல்.
- நம்பிக்கையின் மூலம் மாணவர் கொண்டிருக்கும் மனநிலையை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்கள் மட்டில் அவதானமாயிருத்தல்.
- மாணவர் உலகுடன் தொடர்பு கொள்வதற்கு உரையாடல் அவசியமானதாக இருக்கிறது.
- குடும்ப சூழலிலே பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை உளவியல் தேவைகள், அன்பு, இரக்கம், சுதந்திரம் கிடைக்கிறதா என தேடிப்பார்த்தல்.
- மாணவரின் உடல் தேவைகள் அவர்களுக்கு அளிக்கப்படுகிறதா என விசாரித்தலும் பெற்றோரை அறிவுறுத்தலும்.
- ஞாயிறு திருப்பலியிலும் மறை சடங்குகளிலும் பங்கு கொள்கிறார்களா என தேடிப் பார்த்தல்.
- மாணவர் சுதந்திரமாக நடமாடும்போது அவர்களைக் கவனித்தல்.
- பல்வித தேர்வுகள், ஒப்படை, செயற்பாடு ஆகியவற்றின் மூலம் மாணவரின் அறிவு, உளப் பாங்கை புரிந்து கொள்ளுதல்.

**பாடம்**

மறைக்கல்வியிலே பாட விடயங்கள் கற்பிக்கப்படுகிறது. வயது எல்லைக் கேற்ப பாட விடயங்கள் வேறுபடு கின்றது. இதனால் ஒவ்வொரு வகுப்புக்கும் (தரத்திற்கும்) உரிய பாட நூல் முன்வைக்கப்பட்டுள்ளது. அவை வருடாந்த, மாதாந்த, அன்றாட, பாடத்திட்டங்களாக தயாரிக்கப்பட்டுள்ளன. ஆயினும் தமது வகுப்பு மாணவர் களுக்கு கற்பிக்கும்போது ஆசிரியர், அந்த பாட நூலில் மட்டும் தங்கியிராது, வேறு புத்தகங்களிலிருந்தும் விடயங்களைத் ஆதடி கற்பிப்பது அவரின் பொறுப்பாக உள்ளது.

மறைக்கல்வி கற்பித்தல் பற்றி திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் கூறிய சில அறிவுரைகள் (தகேசிந்திராதென் - 21)

1. மறைக்கல்வி முறையாக – விளக்கமான நோக்கத்துடன் அளிக்கப்பட வேண்டும்.
2. மறையின் சாரம்சம் தவிர தேவையற்ற கேள்விகள் அதில் உள்வாங்கப்படுவது தகுதியற்றது.
3. மறைக்கல்வியானது மறையை ஆராய்வதற்கல்ல நம்பிக்கை வாழ்வை நோக்கி இட்டுச் செல்கிறது.
4. சமய பாடங்கள் அனைத்திலும் ஒரு முழுமையான நிலை காணப்பட வேண்டும்.

கிறிஸ்தவ மறை பற்றிய பாட விடயங்கள் இறை வெளிப்பாடு அடங்கிய திருவிவிலியத்திலே உண்டு. அதிலுள்ள செய்தி, அதற்கான பதிலளிப்பு, அதற்கேற்ப வாழ்தல் ஆகியன மறையைக் கற்பிப்பதில் எதிர்பார்க்கப் படுகின்றது. யேசு இவ்வுலகுக்குக் கொண்டு வந்த மீட்பின் நற்செய்தி மறை பாடத்தில் முக்கியமானதாயிருக்கிறது. குறிப்பிட்ட பாட விடயத்தைத் தெரிவு செய்து பிழையின்றி அதனை முன்வைத்தலும், அச் செய்தியை விளக்கு தலும், அதற்கேற்ப மாணவரை மாற்றுதலும் அவ்வாறே வாழச்செய்வதும் ஆசிரியரின் கடமையாக இருக்கிறது.

பல்வித மறை நூல்கள், சஞ்சிகைகள் இதற்கு உதவியாக உள்ளன. அவை:- ஒவ்வொரு வகுப்புக்கும் பொருத்தமான

- பாட நூல்
- திருவிவிலியம்
- தூயவர்கள் சரிதை
- மறை பத்திரிகைகள், சஞ்சிகைகள்
- வத்திக்கான் ஏடு
- கத்தோலிக்க மறைக்கல்வி நூல்
- ஞாயிறு மறை உரை ஆகும்.

அடிக்கடி பல்வித மறை சம்மேளனங்களில் பங்கு கொள்ளுதல், சமய பாட திட்டங்கள் - பாடங்களைக் கற்றல், மறைத் தேர்வுகளில் பங்கு கொள்ளுதல் மூலம் மறையாசிரியர் தமது அறிவை விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

## ஒன்பதாம் பாடம்

## 9. கிறிஸ்தவ தலைமைத்துவமும், விழுமியங்களும்

தலைமைத்துவம் என்பது செயற்பாடுடன் கூடிய ஒரு பணியாகும். தலைவர் தலைமைத்துவத்தை மூன்று வழிகளில் பெற்றுக் கொள்கிறார்.

- பிறப்பிலிருந்தே பெற்றுக்கொள்ளும் தலைமைத்துவம்.
- சுய முயற்சியினால் பெற்றுக்கொள்ளும் தலைமைத்துவம்.
- பலவந்தமாக தலைமைத்துவ நிலைக்கு தள்ளப்படுதல்.

தலைமைத்துவம் தனிப்பட்ட ஒருவருக்கு மட்டும் உரியதல்ல. அதை தனியாக செயற்படுத்த முடியாது. அதற்காக தலைவருடன் தொடர்புடைய ஒரு குழு இருக்க வேண்டும்.

(உ+ம்)

- விளையாட்டுக் குழுவொன்றின் தலைவர்.
- மாணவர் தலைவர்.
- அரசியல் கட்சித் தலைவர்.
- உல்லாசப் பிரயாண குழுவொன்றின் தலைவர்.
- சமய நிலையமொன்றின் தலைவர்.
- துறவற சபையொன்றின் தலைவர்.
- பாடசாலை அதிபர்.
- நிறுவனமொன்றின் (தொழில்) தலைவர்.

சகல சமய, அரசியல், சமூகம், சார்ந்த அனைத்து குழுக்களுக்கும் தலைவர் ஒருவர் காணப்படுகிறார். அவ்வாறாயின் தலைமைத்துவம் என்றால் என்ன? முன்மாதிரிகையான வாழ்வின் மூலம் பிறருடன் ஆழமான தொடர்பை கட்டியெழுப்பக்கூடிய, தம் ஆளுமையினால் பிறரைத் தன்பால் ஈர்ந்தெடுக்கக் கூடிய திறனாகும்.

**தலைமைத்துவம் பற்றி நாம் கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்**

- தலைவரின் குணநலபண்புகள், திறமைகள், தேவைகள்.
- குழுவில் ஏனையோரது தேவைகள், எதிர்பார்ப்புகள்.
- தலைவருக்கும், குழுவினருக்குமிடையே உள்ள தொடர்பு (தொடர்பாடல்).
- பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் திறமை.

**கிறிஸ்தவ தலைமைத்துவம் என்றால் என்ன?**

திருச்சபையில் பல்வாறான தலைமத்துவங்கள் காணப்படுகின்றன. அவை சபை ஒழுங்கின்படி பிரிக்கப்பட்டுள் ளன. கிறிஸ்தவ தலைமைத்துவம் திருத்தூதர்கள் வழிவந்தவையாகும். திருத்தந்தை முதல் பொதுநிலையினர் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. உலகை தூய்மைப்படுத்தி இறையரசைக் கட்டியெழுப்புவதே சகல கிறிஸ்தவ தலைமைத்துவத்தினதும் நோக்கமாகும். இறைதந்தை காலாகாலமாக - உலக ஆரம்பத்திலிருந்து பல்வித தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார் என திருவிவிலியமும், திருச்சபை வரலாறும் சான்று பகர்கிறது. அறிவு, திறமை, புத்தி, பரம்பரை, கல்வி என்பன கிறிஸ்தவ தலைமைத்துவ தெரிவுக்கு அவசியமற்றது என்பது தெரிவின் மூலம் விளக்கப்படுகிறது.

**மீட்பின் வரலாற்றில் இறைவன் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிலரை தெரிவு செய்து தலைவராக நியமித்தார்.**

❖ **ஆபிரகாமின் அழைப்பு.**

"உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன். நீயே ஆசியாய் விளங்குவாய்" (தொநூ 12:1)

❖ **ஈசாக்கு பெற்ற அழைப்பு**

உன் தந்தை ஆபிரகாமின் கடவுள் நானே, அஞ்சாதே ஏனெனில் நான் உன்னோடு இருக்கிறேன். உனக்கு ஆசி வழங்கி..... (தொநூ 26:24)

❖ **யாக்கோபு பெற்ற அழைப்பு**

"நானே எல்லாம் வல்ல இறைவன், நீ விருத்தியடைவாய். உன்னிடமிருந்து ஓர் இனமும் இன சமுதாயமும் தோன்றும்." (தொநூ 35:11)

❖ **யோசேப்பு பெற்ற அழைப்பு**

இறைவன் யோசேப்பை கனவின் மூலம் தலைமைத்துவத்திற்கு அழைக்கிறார். அவர் தாம் கண்ட கனவைத் தன் சகோதரர்களுக்குக் கூறுகிறார். ''கதிரவனும் நிலவும் பதினொரு விண்மீன்களும் என்னை வணங்கக் கண்டேன்.'' (தொ.நூல் 37:9)

இவ்வாறு மீட்பின் வரலாறு முழுவதும், தலைமுறை தலைமுறையாக இறைதந்தையினால் பிதா பிதாக்கள் தலைமைத்துவத்திற்கு அழைக்கப்பட்ட வழிமுறைகளாகும்.

## கிறிஸ்தவ தலைமைத்துவத்தின் பண்புகள்

| தலைமைத்துவத்தைப் பெற்றவர்களின் செயற்பாடுகள் | செயற்பாட்டில் தலைமைத்துவத்தின் பண்புகள் |
|---|---|
| தாம் பெற்ற இறையழைப்பை ஏற்றுக் கொள்ளல். | இறைவனில் நம்பிக்கை வைத்தல்<br>இறைவிருப்பிற்கு தாழ்மையுடன் அடிபணிதல். |
| ஆயனாக தன் பொறுப்பிலுள்ள பிள்ளைகளுக்கு கற்பித்தல். | தமது கலாச்சாரத்தை எதிர்கால சந்ததியினருக்கு உரிமையாக்கிக் கொடுத்தல்.<br>பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்த்தல் |
| எதிரிகளிடமிருந்தும், இயற்கை விபத்துக்களிலி -ருந்தும் காப்பாற்றுதல். | பாதுகாப்பளித்தல்<br>துன்பங்களின்போது உதவுதல். |
| மக்களிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல். | நீதி, நேர்மையை அனைவருக்கும் பொதுவாக நிறைவேற்றுதல்.<br>மன்னிப்பளித்து அன்பாக ஏற்றுக்கொள்ளுதல் |
| ஒரே இறைவனைப் பற்றி கற்பித்தல். | ஒரே இறைவழிபாட்டிற்கு அடித்தளமிடுதல்.<br>ஒரே இறைகொள்கைக்கு மக்களைப் பழக்குதல். |

இயேசுவைப் போன்று புத்தர், மகாத்மா காந்தி போன்ற பெரியோர்களும் எதுவித அதிகாரத்தையும் பயன்படுத்தாது, எவ்வித பலவந்தமும் இல்லாது தமது தலைமைத்துவத்தை முன்னெடுத்துச் சென்றது மட்டுமன்றி தமது சீடருடன் ஆழமான தொடர்பைக் கட்டியெழுப்பி அவர்களைத் தலைமைத்துவத்திற்காக பயிற்றுவித்தார்கள்.

**அதன்படி நல்ல தலைமைத்துவத்திற்கு.........**

ஆளுமை : தமது குறிக்கோளை, இலக்கை நோக்கிச் செல்லல்.

பிரசித்தி : எல்லாவற்றிலும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ள முடியும் என்பது.

சுயமான ஆக்கத்திறன் ஆகியன அவசியமாகும்.

கிறிஸ்து, தான் ஏற்படுத்திய திருச்சபையின் தலைவராக தூய பேதுருவைத் தெரிவு செய்தார். அவர் மீன்பிடிப்பவர், படிப்பறிவற்றவர். இருப்பினும் அத்தலைமைத்துவம் இன்றுவரை திருச்சபையில் முன்னோக்கி பயனிக்கிறது.

''பேதுரு நீ பாறை, இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா'' (மத். 16:18)

''என் ஆட்டுக்குட்டிகளைப் பேணி வளர், என் ஆடுகளை மேய்'' (யோவான் 21:15-17)

கிறிஸ்து பவுலடியாருக்கு வேறுவிதமாக தலைமைத்துவத்தை அளித்தார். பவுல் சவுலாக இருந்தபோது கிறிஸ்தவர்களைக் கொன்றார். அவ்வாறு அவர்களைத் துன்புறுத்துவதற்கு பயணித்துக் கொண்டிருந்தபோது கிறிஸ்து அவரை அழைத்துத் தலைமைத்துவத்திற்கு தெரிவு செய்தார்.

''சவுலே, சவுலே நீ ஏன் என்னைத் துன்புறுத்துகிறாய்,'' (திப. 9:3-9)

கிறிஸ்து, தலைமைத்துவப் பண்புகளை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கு எம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். திருமுழுக்கின் வழியாக திருச்சபையின் அங்கத்தவரான எமக்குத் தரப்பட்டுள்ள அழைப்பை நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியமானதொன்றாகும்.

- ❖ பிறரை நன்முறையில் ஏற்றுக் கொண்டு ஒற்றுமையாக செயலாற்றுதல்.
- ❖ தியாகம் செய்தல்.
- ❖ சட்டத்தை மதித்தல்.
- ❖ இன்ப துன்பங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல்.
- ❖ இறைதந்தைக்குப் பிரமாணிக்கமாய் வாழுதல்.

**திருவிவிலியத்தின்படி முன்மாதிரிகையான தலைவர்கள்**

- மோசே - (விப 3/2 லிருந்து வாசிக்குக)
- கிதியோன் - (நீத. 6/1 லிருந்து வாசிக்குக)
- எரேமியா - (எரே. 1/4 லிருந்து வாசிக்குக)
- சாமுவேல் - (1சாமு 3/19 லிருந்து வாசிக்குக)
- பவுலடியார் - (1திமோ 3ம் அதிகாரம்)
- யேசு

இவற்றை வாசித்துத் தலைமைத்துவம் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சரியான சந்தர்ப்பங்களை தேடிப் பார்க்கவும்.

**மறையாசிரியரும், விழுமியங்களும்**

மறையாசிரியர் என்பவர் தனது திருமுழுக்கு அழைப்பினால் கிறிஸ்துவைப் பின்பற்றுபவராவார். இறைத் தந்தையின் விருப்பின்படி இறையரசைக் கட்டியெழுப்பும் கிறிஸ்துவின் பணியை நிறைவு செய்யும் கடமை மறையாசிரியருக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதனால் மறையாசிரியரின் பொறுப்பு மிக உயர்ந்த அழைப்பாகும். ஆகவே மறையாசிரியர் கிறிஸ்துவை மற்றவரில் உருவாக்கவும், தாம் பிறருக்கு கிறிஸ்துவாக மாறவும், தாம் கிறிஸ்துவை அனுபவித்து பிறரையும் அவ் அனுபவத்திற்குட்படுத்தும் பொறுப்பையும் பெற்றுள்ளார்.

அவ்வாறாயின் நசரேத்தூரில் தமது பணியை ஆரம்பித்த கிறிஸ்துவின் பண்பு, அர்ப்பணிக்கப்பட்டபணி, சிலுவை மரணம், உயிர்ப்பு வரையான, அவரது பண்புகள் அனைத்தும் மறையாசிரியரிலும் காணப்பட வேண்டும். அதற்காக தாம் பெற்ற உறுதிப்பூசுதல் என்னும் அருளடையாளத்தின் மூலம் தூய ஆவியினால் வலிமை பெற்று பிள்ளைகளுக்கு இறையன்பைப் பகிர்ந்தளித்து அனைவருக்கும் ஒரேவிதமாகக் காட்டப்படும் இரக்கம் மிகு அன்பு, அர்ப்பணிப்பு, தியாகம், தலைமைத்துவம் ஏற்பதற்கான கல்வி, அறிவு ஆகியன மறையாசிரியர்களுக்கு அவசியமாகிறது.

அவ்வாறே மறையாசிரியர் கிறிஸ்துவின் விண்ணரசைக் கட்டியெழுப்புவதற்காக பிள்ளையை – சிறுவயதிலி ருந்தே முழுமையான மனிதனாக்குவதற்கான ஆன்மீக வழிநடத்துதலை – மாணவனுக்கு அளிக்கவேண்டிய பாரிய பொறுப்பைப் பெற்றுள்ளார். அத்துடன் மறைப்பாடசாலை ஆசிரியரின் பொறுப்பு பிள்ளையைப் புரிந்து கொள்ளுதலுமாகும்.

உதாரணமாக சொல்வோமாயின்,

- ❖ 1ம் தரம் கற்கும் பிள்ளையின் வயதெல்லை (1-5 வரை) இவர்களில் காணக்கூடிய நம்பிக்கை - **பெற்றோர் அறிவுறுத்தும் நம்பிக்கையாகும்.**
- ❖ 6-12 வயது சிறுபராயம் வரை - **கூட்டு நம்பிக்கை**
- ❖ 13-19 வயது வரை இளம் பராயத்தினர் - **தனிப்பட்ட நம்பிக்கை**

இதனால் இந்நிலைப்பாட்டை சரியாக புரிந்து கொண்டு அவர்களது நம்பிக்கையை (விசுவாசத்தை) ஆழப்படுத்து வதற்கும் வளர்ப்பதற்குமான பொறுப்பு தமக்கு உண்டென்பதை மறையாசிரியர் மனதிற்கொள்ள வேண்டும்.

**பொறுப்புக்களை ஏற்பதில் பிள்ளைகளை ஈடுபடுத்துவதன் அவசியம்**

- ❖ பிள்ளைகள் இயலுமானதைச் செய்வதற்கு, தன்னலத்தை இல்லாதொழிப்பதற்கு.
- ❖ கல்வியை அர்த்தத்துடன் கற்பதற்கு.
- ❖ பணிக்காக பயிற்றுவிப்பதற்கு.
- ❖ அன்றாடம் அளிக்கப்படும் பொறுப்புக்களையும் கடமைகளையும் நன்முறையில் நிறைவேற்றுவதற்கு
- ❖ தூய ஆவிக்கு கீழ்ப்படிந்து அழைப்பு, பணி ஆகியவற்றை விளங்கிக் கொள்ளுவதற்கு.
- ❖ விடுதலையைப் பெற்றுக் கொடுத்த கிறிஸ்துவை அறிந்து, பிறருக்கும் விடுதலையைப் பெற்றுக் கொடுப்பதற்காக செயலாற்றுவதற்கு.
- ❖ தாம் வாழும் சமூகத்தில் மனிதாபிமானத்துடன் செயற்படுவதற்கு.

**மறையாசிரியர் முன்மாதிரிகையுடையவராதல்**

மறையாசிரியர் தனது வாழ்நாள் முழுவதும் இறையுறவை ஆழமாகக் கொண்டிருக்க வேண்டும். அவரது குடும்ப வாழ்வும் முன்மாதிரிகையாக இருக்க வேண்டும். செபத்திலும், தியானத்திலும் ஈடுபாடுடையவராக இருக்க வேண்டும். பிளவுகள் ஏற்படும்போது அச்சூழலை சமநிலைப்படுத்துபவராகவும், அவரிலிருந்து வெளிப்படும் வார்த்தைகள், செயற்பாடுகள், முன்மாதிரிகையினால் பிள்ளைகள் ஆறுதல் பெறவும் வேண்டும்.

''சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்'' என்று கூறிய கிறிஸ்துவின் வார்த்தையின்படி பிள்ளைகள் அச்சமின்றி மறையாசிரியரிடம் செல்லக்கூடிய அமைதியான, கனிவான குண இயல்பு காணப்பட வேண்டும். அவ்வாறானவர்கள் இறைவனின் உண்மையில் வாழ்பவராவர். ''எளியோருக்கு தமது வழியைக் கற்பிக்கின்றார்'' (திபா 25:9) எனக்குறிப்பிடப்பட்டிருப்பது அவரது வழிகாட்டல் அவர்களுக்கு தொடர்ச்சியாக கிடைப்பதினா லேயாகும்.

லௌகீக பெறுமதிகளில் மூழ்கியிருக்கும் எமது சமுகத்திலே ஆன்மீகத்தில் புத்துயிர் அளிக்க வேண்டியது அவசியமாகும். பெற்றோரின் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்களில் மறைப்பாடசாலையில் மறையாசிரியர் முன்மாதிரிகையான பெற்றோராக செயற்பட வேண்டும். காரணம் மாணவரை மையமாகக் கொண்டு மறை (கிறிஸ்தவம்) அளிக்கப்படுகிறது.

லௌகீக மற்ற மனதுடன் விண்ணரசைக் கட்டியெழுப்பும் பரந்த நோக்கோடு பிள்ளைகளை மறையில் வளர்க்கும் மேன்மையான பணிக்குத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். நற்செய்தியை வெளிப்படுத்தும் கண்ணாடியாக மறையாசிரியரின் வாழ்வு இருக்கவேண்டும். வாழ்வின் சவால்கள் அனைத்தையும் பணிவுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். துன்பங்கள், தடைகள், வரும்போது மனம் தளராமல் இறைமகிமையின் பொருட்டு தம் பணியை ஆற்றவேண்டும்.

கிறிஸ்து ''என்னைப் பின்பற்ற விரும்புகின்ற எவரும் தன் சிலுவையைத் தோள்மேல் சுமந்து கொண்டு என்னைப் பின்தொடரட்டும்'' என்றார். அவர் போதித்த வார்த்தைகள், ஆற்றிய செயல்கள், அவரது பிரசன்னம் ஆகியன ''வயலில் விதைக்கப்பட்ட விதைக்கு ஒப்பாகும்''. (மாற். 4:14)

அவரது வார்த்தையை ஏற்றுக்கொண்டு அதனால் அதிக பயன் அளிக்கவும், இறையரசை வெளிப்படுத்தவும் இயலுமாயிருப்பது எப்போதெனில், பணியாற்றவும், பலரின் மீட்புக்காகவும் தன்னையே பலியாக அளிக்குமளவிற்கு அர்ப்பண வாழ்வு வாழ்ந்த **கிறிஸ்துவில்** நாம் வாழ்ந்தால் மட்டுமே ஆகும்.

புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைப்பதற்கு தூய ஆவியின் வழிகாட்டுதலைப் பெறுவதிலும், அவ்வாறு படைக்கும் திறனுடையோரை உருவாக்குவதிலும் மறையாசிரியர் கவனம் செலுத்த வேண்டும்.

**விழுமியம்**

எந்த ஒரு சமூகத்தினதும் விழுமியமானது அந்தந்த சமூக கலாச்சாரம், நன்நடத்தை, வரலாற்றின் தாக்கம் ஆகியவற்றிலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மனிதன் சமூகத்தில் ஒருவன் ஆதலால் அவனது செயற்பாடுகள் அனைத்தும், அனைவருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். அனைத்து சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். பாராட்டப்பட வேண்டும். அவ்வாறு கட்டியெழுப்பப்பட்ட விழுமியத்தில் தமது உணர்வுகளையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்தல், பயன்படுத்தல் ஆகியன நிகழ்கின்றன. பல்வித சமூகங்களிலுள்ள சம்பிரதாய சடங்குகள், பழக்க வழக்கங்கள் (செய்ய வேண்டிய, செய்யக் கூடாத செயல்கள்) நன்நடத்தை, மனித உரிமைகள், கடமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் சட்ட திட்டங்கள் ஆகியவற்றால் இந்த சமூக வாழ்வு வலிமை பெறுகிறது. மேற்கூறியவற்றை புதிய ஆக்கத் திறன் மிக்க செயற்பாட்டின் கலவையாக – செயற்பாடாக கணிக்கலாம்.

சமூகத்தில் உள்ள விழுமியங்கள் காரணமாக மனிதனில் இருக்கக் கூடிய கீழான, துர்க் குணங்களிலிருந்து விடுபடுவதற்கும், மறைக்கேற்ப வாழ்வதற்கும், உண்மையைக் கண்டடைவதற்கும், கனிவுள்ளவராவதற்கும், நல் உணர்வுகளோடு நன்னடத்தை, நேர்மை, கலைத்திறன், தூய்மையான எண்ணங்களுடனும் வாழும் திறனைப் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய திறனை இனமாக, சமூகமாக பெற்றுக்கொள்வதானால் இறைதந்தையின் படைப்புக்களிலே மேன்மையான படைப்பான மனிதர் அவரது மகிமையாவர். அவரது மக்களாவர். அவர் எமது இறைதந்தையாவார். இனத்தின், சமூகத்தின் தனித்துவம் இறைவனேயாவார்.

**ஆகவே விழுமியம் என்பது**

ஒருவர் தனது வாழ்வில், சமூகத்தில் வளம் சேர்க்கும் நற்குணங்கள், பண்புகள், மனிதம் கொண்டு வாழ்வதாகும். எல்லா நன்மைகளினதும் ஊற்று இறைதந்தையாவார். அவரின் சாயலாக படைக்கப்பட்ட மனிதரில் அவரின் எல்லா நன்மைகளும் நிச்சயம் உள்ளன. ஆனால் தீமையின் வலிமையினால் இந்த நன்மைத்தனங்கள் அவனிலிருந்து அகன்றாலும் கிறிஸ்து தமது விடுதலையளிக்கும் இறப்பு, உயிர்ப்பு வழியாக நன்மைகளை மீண்டும் எம்மில் பொழிந்துள்ளார்.

திருவிவிலியத்தைக் கற்கும் மனிதரில் இருக்க வேண்டிய விழுமியங்கள் யாவை என்பதை விளங்கிக் கொள்வோம். விழுமியத்தில் வாழ்பவர்களின் இறையுறவு ஆழமானது என்பது கீழ் கண்ட விவிலிய வார்த்தைகளில் விளக்கப்படுகிறது.

- ❖ "நோவா நேர்மையாளராகவும் குற்றமற்றவராகவும் இருந்தார். நோவா கடவுளோடு நடந்தார்." (தொநூ 6:9)
- ❖ நல் சமூகத்தை உருவாக்கும்போது "எனக்கு பணிந்து நடந்து மாசற்றவனாய் இரு" (தொநூ 17:16)
- ❖ உன் கடவுளாகிய ஆண்டவருக்கு நீ முற்றிலும் உண்மையாய் இரு. (இச 18:13)
- ❖ மறையில் வாழ்பவரின் வாழ்வும் சமூக வாழ்வும் மேம்படும்.
- ❖ குற்றமில்லாவர்களின் நேர்மை அவர்களின் வழியை நேராக்கும். (நீமொ 11:5)
- ❖ குற்றமற்றவர்கள் வீழ்ந்துவிடமாட்டார்கள்.
- ❖ நீதியை விதைப்போர் உண்மையான ஊதியம் பெறுவர். (நீமொ 11:18)

நேர்மையாளன், மறையைப் பின்பற்றுபவன், பின்பற்றும் மறையின்படி செயற்படுபவன், நீதிமொழிகள் முழுவதிலுமே நேர்மையாளரின் குண இயல்புகள் - பண்புகளைக் காண்கிறோம். அத்தகையவர்களை நேர்மையான, நற்குணமுடைய, அமைதியான பண்புடைய, மென்மை, இரக்கமுடைய, தியாகம், உண்மை குணங்களுடைய சிறந்தவர்களாகக் காணலாம். அவ்வாறே நேர்மையாளன் வாழ்வின் விருட்சத்தைப்போல் பலன் தருவதாகவும் நல்லார் ஆண்டவரின் கருணையைப் பெறுவதாகவும் (நீமொ. 12:2)ல் காட்டப்படுகிறது. ஆகவே திருமுழுக்கின் வழியாக கிறிஸ்தவ அழைப்பைப் பெற்றுள்ள நாமும் எமது "விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நிறைவுள்ளவர்களாய்" இருக்க வேண்டும். (மத். 5:48) அவ்வாறாயின் எமக்கு "அவர் தம் வழிகள் அனைத்தும் நீதியானவை. (இச 32:4)

பழைய ஏற்பாட்டிலே, பத்துக் கட்டளைகள் அம் மக்களின் வழிகாட்டியாய் இருந்தது. கிறிஸ்து அக் கட்டளைகளுக்கு புத்துயிர் அளித்து வாழ்வை நன்மையாக்கும் பொருட்டு எட்டு பேறுகளைப் போதித்தார். எம்மை இறைமக்களாக்கவே அவ்வாறு செய்தார். அதனால் கிறிஸ்து எம் அனைவரையும் செயற்பாடுள்ள, மறை வாழ்வு வாழும், நற்குணங்கள் நிறைந்த மனிதராக வாழ்வதற்கு அழைப்பு விடுக்கின்றார். அந்த அழைப்பின் நிறைவு விண்ணரசை உரிமையாக்கிக் கொள்வதாகும். அத்தகைய கிறிஸ்தவ விழுமியங்களால் வாழ்வை நிறைவு பெறச் செய்வதற்கும் மற்றவர்களையும் அதில் ஈடுபடுத்தி அனைவரையும் இறைபிள்ளைகளாக்க முயற்சிப்பதும் கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும்.

## பத்தாம் பாடம்

## 10. பரிசுத்த திருச்சபை வரலாறு

### முதல் நான்கு நூற்றாண்டுகள்

விண்ணரசை நிறுவுவதற்காகவே கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார். அவரது மறையானது விண்ணரசின் மறையாகும். விண்ணரசின் வருகையை வெளிப்படுத்துவதற்காக அவர் தமது திருச்சபையை ஏற்படுத்தினார். திருச்சபையின் ஆரம்பத்தை 3 சந்தர்ப்பங்களாகக் காட்டலாம்.

1. தனது பகிரங்க வாழ்விலே திருத்தூதர் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குக் கற்பித்து, பயிற்சியளித்து திருச்சபைக்கு அடித்தளமிடுதல்.
2. தமது வாழ்க்கைப் பலியின் மூலம் திருச்சபைக்கு உயிரூட்டமளித்தல். (பாடுகள், மரணம், உயிர்ப்பு)
3. தூய ஆவியின் மூலம் திருச்சபையை உலகிற்கு வெளிப்படுத்தல்.

கி. பி 33-450 வருட காலத்தை முதல் நான்கு நூற்றாண்டுகள் என வரலாற்றாசிரியர்கள் காட்டுகின்றனர். அது தவிர தூய ஆவியின் வருகையிலிருந்து கி.பி 450 வரை முதல் நான்கு நூற்றாண்டு காலம் என்ற ஒரு கருத்தும் உண்டு,

கிறிஸ்துவின் திருச்சபை எந்த ஒரு இனத்திற்கோ, மொழிக்கோ, பண்பாட்டிற்கோ, காலத்திற்கோ வரையறுக்கப்படவில்லை என திருத்தூதர் பணி நூலில் காண்கிறோம். எல்லா சூழலிலும் அவற்றிற்கேற்ப வளைந்து, விரிந்து, வேறுபட்டு செயற்படும் விதத்தை திருச்சபை வரலாற்றை வாசிக்கும்போது காண்கிறோம். அந்த மாற்றத்திற்கேற்ப திருச்சபை வரலாற்றை இலகுவாக கற்றுக் கொள்வதற்காக அது மூன்று யுகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை:-

- ❖ கி.பி 33-450 வரை **ஆரம்ப யுகம்**
- ❖ கி.பி 450-1500 வரை **மத்திய யுகம்**
- ❖ கி.பி 1500 லிருந்து தொடர்ந்து வரும் காலம் - **இன்றைய யுகம்**

ஆயினும் முதல் நான்கு நூற்றாண்டுகளும் தொடர்ந்து அடுத்த நூற்றாண்டும் திருச்சபை வரலாற்றில் ஆரம்ப யுகத்தில் அடங்குகின்றது. இந்நூற்றாண்டுகளில் திருச்சபை அந்தந்த சூழலிலும் பண்பாட்டிலும் அவற்றிற்கேற்ப வளர்ந்த விதத்தையும், 300 ஆண்டுகளாக திருச்சபைக்கு ஏற்பட்ட துன்புறுத்தல்களையும் (கலாபனை) அதன்பின் கி.பி 313ல் மிலான் சாசனத்தின் பின் சுதந்திரம் பெற்ற திருச்சபையைப் பற்றியும் கற்றுக் கொள்ள வேண்டும்.

யூத பெந்தகோஸ்து தினத்தன்று திருத்தூதரில் எழுந்தருளிய தூய ஆவி புதிய பெந்தகோஸ்து வழியாக திருச்சபைக்கு பிறப்பை பெற்றுக் கொடுத்த விதத்தை திருத்தூதர்பணி நூலில் காண்கிறோம். அன்றிலிருந்து திருச்சபை வளர்ச்சி பெற்ற விதத்தைக் காட்டும் எழுத்து வடிவ சாட்சிகள் பல. அவற்றில் முக்கியமானவை:-

- ❖ திருத்தூதர் பணி நூல்
- ❖ திருமுகங்கள்
- ❖ ஆயர் கிளமென்ட், அந்தியோக்கியாவின் இக்னாசியஸ் அடிகளார் ஆகியோரின் சில கடிதங்கள்
- ❖ திருத்தூதரின் படிப்பினைகள் அடங்கிய டிடாக்கே நூல்

முதல் நூற்றாண்டின் இறுதி காலத்திலிருந்து உரோமைப் பேரரசு முழுவதும் திருச்சபை பரவத் தொடங்கியது. அத்திலாந்திக் சமுத்திரத்திலிருந்து மத்திய கிழக்கின் கல்ப் வரையிலும், பிரான்சின் டெனியுப் எல்லையிலிருந்து வட ஆபிரிக்கா வரையிலும் ஆச்சரியத்துக்குரிய விதமாக திருச்சபை பரவியது. திருத்தூதர் நடமாடும் மறைத்தூதுப் பணியாளராக ஒவ்வொரு இடமாகச் சென்று கிறிஸ்தவ குடும்பங்களை உருவாக்கியதே இதற்கு காரணமாக அமைந்தது. திருத்தூதர் பன்னிருவரிலும் தூய பேதுரு தலைமைத்துவம் வகித்ததாக திருத்தூதர்பணி நூல் சான்று பகர்கிறது.

- ❖ பெந்தகோஸ்தே தினத்தன்று தூய பேதுருவின் அருளுரையின் பின் 3000 பேர் கிறிஸ்தவ மறையைத் தழுவினர்.

- ❖ யூதாசின் இடத்திற்கு மத்தியாசை தெரிவு செய்யும்போது தூய பேதுரு தலைமைத்துவம் வகித்தார்.
- ❖ திருத்தொண்டரை நியமிக்கும்போது அதற்காக முன் நின்றவர் தூய பேதுரு ஆவார்.
- ❖ எருசலேம் சங்கத்தில் விருத்தசேதனம் பற்றிய பிரச்சனை எழுந்தபோது அதனைத் தீத்து வைப்பதில் தூய பேதுருவே தலைமைத்துவம் வகித்தார்.
- ❖ அழகுவாயிலில் கால் ஊனமுற்றவரைக் குணமாக்கியவரும் தூய பேதுரு ஆவார்.
- ❖ இவரது தலைமைத்துவத்தின் பிற்காலத்தில் உரோமை வரை திருச்சபை பரவியது.

கிறிஸ்தவ குடியேற்றம் பெருகியபோது கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையும் பெருகியது. அதனால் அதை முன்னெடுத்துச் செல்வதற்காக நிர்வகிப்போர் தேவைப்பட்டனர். எனவே திருத்தூதர் தாம் நிறுவிய கிறிஸ்தவ குடியேற்றங்களுக்கு பெரியோரை நியமித்தனர். (Presbytery) அது தவிர முதல்வராக ஒரு பகுதியினரையும் நியமித்தனர். (Episcopal) அவர்கள் திருத்தூதரின் பெயரால் செயற்பட்டனர்.

இவ்வாறு திருத்தூதரின் தூதுப்பணி எல்லா இனத்தவருக்கும் கொண்டு செல்லப்படும்போது இம்மறையை ஏற்றுக் கொண்ட மக்கள் ஒன்றுகூடி புதிய வாழ்க்கை முறை ஒன்றை ஆரம்பித்தனர். (திப. 2:42-47) இக் காலத்தில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய யூத மக்கள் இரு வகையினர்.

- ❖ எபிரேய யூதர் - அரமெய்க்மொழி பேசும் இவர்கள் யூத மரபை நுணுக்கமாகப் பின்பற்றினர்.
- ❖ எலனிஸ்த யூதர் - கிரேக்க மொழி பேசுகின்ற இவர்கள் கிரேக்க பண்பாட்டிற்கேற்ப வாழ்ந்தவர்கள்.

இவர்களில் கிறிஸ்தவ மறையைத் தழுவிய பிற இனத்தவரும் பலர் இருந்தனர்.

**இக்காலத்தில் பலஸ்தீன அரசியல் பின்னணி**

கீழைத்தேய அத்திலாந்திக் கடலிலிருந்து கிழக்கே யூப்பிரடிஸ் நதி வரையிலும் வடக்கில் பிரித்தானியா உள்ளிட்ட ரயின் டெனியுப் நதி வரையிலும் வலப் புறத்தில் ஆபிரிக்கா அரசு வரையிலுமான பரந்த நிலப்பரப்பு உரோமைப் பேரரசுக்குட்பட்டது. இங்கே பல் இன, பல்மொழி, பல்வித பண்பாட்டுக்குரிய மக்கள் உரோமை பேரரசனால் ஆளப்பட்டனர். பேரரசன் பிரதம நீதி அரசராக, பிரதம தளபதியாக, மேலான குருவாக இருந்தார். இந்த பேரரசு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மாகாண அலுவலகரினதும், பிரதி அரசரினதும் கீழ் ஆட்சி செய்யப்பட்டது. பேரரசன், இறைவனைப் போன்று மேலான உபசரிப்பைப் பெற்றார்.

(ஆரம்ப காலத்தில் திருத்தூதர் தமது தூதுப்பணியை ஆற்றுவதற்கு - பரப்புவதற்கு பேரரசு முழுவதும் சௌகரியம் அளிக்கப்பட்டிருந்தது.)

**உரோமைப் பேரரசின் ஆட்சி முறை**

பேரரசு முழுவதும் ஒரே ஆட்சி முறையே பரவியிருந்தது. ஒரு நாட்டிலிருந்து வேறு நாட்டுக்குச் செல்வதற்கு அனுமதி தேவைப்படவில்லை. முன்னேற்றமடைந்திருந்த நிலப்பரப்பும் கடல் பிரதேசமும் பாதையாக அமைந்தது. இந்த அமைதியான சூழலில் திருச்சபை சுதந்திரமாகப் பரவியது.

**கிரேக்க பண்பாட்டின் தாக்கம்**

நாடு முழுவதும் கிரேக்க மொழி பரவியிருந்ததால் மறைத்தூதர்களுக்கு போதிப்பதற்கு இலகுவாயிருந்தது.

**கல்வி பயிற்சிக் கூட்டங்கள்**

உரோமையில் எதென்ஸ், அந்தியோக், அலெக்சாந்திரியா ஆகிய கல்வி பயிற்சி கூடங்கள் உரோமைப் பேரரசில் இருந்தது. ஆற்றல் மிகு இளைஞர்கள் இதில் கல்வி பயின்றனர். பிலேடோ, எரிஸ்டோட்டல், சாக்ரடிஸ் ஆகியோரின் ஆழமான மெய்யியலைக் கற்றனர். இதனால் மனச்சான்றின்படி நன்மை, தீமையை விளக்கிக் கொள்ளும் உள வலிமையைப் பெற்றனர்.

**அக்காலத்தின் வெறுக்கத்தக்க நம்பிக்கைகள்**

உரோமைப் பேரரசு முழுவதும் பல்வித மத நம்பிக்கை முறைகள் இருந்தன. அவை வெறுக்கத்தக்க சடங்குகளாயிருந்தன. கோயிலில் கூடாத நடத்தைகள் இடம் பெற்றன. அறிவுடைய மக்கள் மறையின் பெயரால் நடைபெறும் இத்தகைய நிகழ்வுகளை எதிர்த்ததோடு புதிய ஒரு மறையின் தேவையை உணர்ந்தனர். அக் குறையை கிறிஸ்தவ மறை நிவர்த்தி செய்தது.

**உரோமைப் பேரரசு முழுவதும் சிதறியிருந்த யூத மக்கள்**

பேரரசு முழுவதிலும் பல்வித வர்த்தகங்களை யூத இனத்தவர்களே செய்தனர். அவர்கள் தமது மறையை - இறைவாக்கு பணியை அங்குள்ள நாடுகளில் செயற்படுத்தினர். இதனால் மெசியா சிந்தனை உரோமைப் பேரரசு முழுவதிலும் பரவியது.

முதலாம் நூற்றாண்டின் இறுதியில் (திருத்தூதர் காலம்) பல்வித துன்புறுத்தல்கள் (கலாபனை) திருச்சபைக்கு எதிராக எழுந்தன. திருச்சபை நன்கு பரவியதால் பல்வித பிரச்சனைகள் தோன்றின. அவை,

**யூத கிறிஸ்தவர்களிடையே எழுந்த பிரச்சனை**

அரமெயக் மொழி பேசிய யூத கிறிஸ்தவர்களுக்கும் கிரேக்க மொழி பேசிய யூத கிறிஸ்தவர்களுக்குமிடையே முரண்பாடுகளும் பிரச்சனைகளும் தோன்றின. காரணம் எலனிஸ்த யூத கிறிஸ்தவர்களின் கைம் பெண்களுக்கு நன்கொடைகள் வழங்குவது தொடர்பாக பிரச்சினைகள் தோன்றின. இதனைத் தீர்ப்பதற்காகத் திருத்தொண்டர்கள் நியமிக்கப்பட்டனர். (தி.ப 6:1-6)

**திருச்சபையில் யூத கிறிஸ்தவர்களுக்கும் புறவின கிறிஸ்தவர்களுக்குமிடையில் எழுந்த பிரச்சனை**

இதற்கான காரணம், புறவின கிறிஸ்தவர்கள் யூத கிறிஸ்தவர்களைப்போல சட்டங்களுடன் கூடிய சடங்கு முறைகளைப் (விருத்த சேதனம்) பின்பற்ற வேண்டுமா இல்லையா என்ற கேள்வி எழுந்ததாலாகும். அவற்றைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்பது பவுலடியாரின் நிலைப்பாடாக இருந்தது. அதன் பலனாக எருசலேம் சங்கம் கூட்டப்பட்டது. (தி.ப15) இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்காக பிற இனத்தவர்களுக்கு கட்டளைகள் நான்கு பிறப்பிக்கபட்டன. அவை:-

- சிலைகளுக்குப் படைக்கப்பட்டவற்றை உண்ணாது தவிர்த்தல்.
- பரத்தமையைத் தவிர்த்தல்.
- கழுத்து நெரிக்கப்பட்டு செத்த விலங்குகளை உண்ணாது தவிர்த்தல். (இரத்தம் - உணவில் தவிர்த்தல்.) (இவை நிலையாக கடைப்பிடிக்க வேண்டிய கட்டளைகள் அல்ல)

**திருச்சபை வளர்ச்சியடைந்ததன் காரணமாக பல வேத கலாபனைகளுக்கு (துன்புறுத்தல்களுக்கு) முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.**

- உரோமையில் சமய துன்புறுத்தல்களுக்கு உள்ளான திருச்சபை

**திருத்தூதர் காலம்**

திருத்தூதர் காலத்தில் அதாவது முதலாம் நூற்றாண்டின் இறுதி காலத்தில் கிறிஸ்தவம் (திருச்சபை) உரோமைப் பேரரசில் நன்கு ஒழுங்கு செய்யப்பட்ட சக்திமிகு மதமாக விளங்கியது. ஆயரின் தலைமைத்துவத்தின் கீழ் குருக்களால் திருத்தொண்டர்களாலும் வழிநடத்தப்பட்ட கிறிஸ்தவ குழுமம் உரோமைப் பேரரசு முழுவதும் பரவியது. தலைமைப் பீடம் உரோமையில் அமைவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதனால் இம் மறை உரோமன் கத்தோலிக்கம் என பெயர் பெற்றது. இத்தகைய மகிழ்ச்சியான பின்னணி இருந்தாலும் முதல் கிறிஸ்தவ சீடர்களின் இந்த முயற்சிகளை வெற்றி கொள்வதற்காக அவர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. திருச்சபை பலவாறு தாக்கப்பட்டது.

**யூத மறைத் தலைவர்களின் எதிர்ப்பு**

தலைமைக் குருக்கள், சதுசேயர், பேதுரு, யோவான் ஆகியோர் சிறைப்பிடிக்கப்பட்டு மரண அச்சுறுத்தப்பட்டனர். ஸ்தேவானை கல்லால் அடித்து கொன்றனர். சவுல் கிறிஸ்தவர்களை சிறையில் அடைத்தனர்.

**எருசலேமில் உரோமை ஆளுநரின் எதிர்ப்பு**

- அவன் யாக்கோபுவை சிரச்சேதம் செய்தான். பேதுருவை சிறையிலடைத்தான்.
- உரோமைப் பேரரசிலிருந்தும் எதிர்ப்புக்கள் கிளம்பின.

**உரோமைப் பேரரசன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியமைக்கான காரணங்கள்**

- கிறிஸ்தவர்கள் அரச, இராணுவ பணிகளை மறுத்தமை.
- உரோமைப் பேரரசனை அரசனாக வழிபடவும் அவனது பெயரால் ஆணையிடவும் கிறிஸ்தவர்கள் மறுத்தமை.
- உரோமைத் தேவர்களுக்கு மலர், விளக்கு ஒப்புக்கொடுக்க மறுத்தமை.

- ❖ கிறிஸ்தவர்கள் இரகசியமாகக் கூடி நடாத்தும் வழிபாடுகளைத் துர்நடத்தைக்காகவே கூடுவதாகவும் அவர்கள் தந்திரமானவர்கள் எனவும் யூதத் தலைவர்கள் பேரரசரிடம் குற்றம் சுமத்தியமை.
- ❖ விண்ணரசைப் பற்றி போதிப்பதால் அவர்கள் பேரரசிற்கு எதிரானவர்கள் என எண்ணியமை. இதனால் கிறிஸ்தவர்களுக்கு எதிரான தடைச்சட்டம் பேரரசனால் பிறப்பிக்கப்பட்டது.
- ❖ கிறிஸ்தவ மறை உரோமைப் பேரரசில் தடைசெய்யப்பட்ட மதமாக இருந்தது.
- ❖ கிறிஸ்தவ மறையைக் கைவிடுவதாக கூறும் ஆணை சாசனத்தில் கைச்சாத்திட மறுத்தமை.
- ❖ கிறிஸ்தவ மறையைக் கைவிடாதவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள் அபகரிக்கப் பட்டன. அடிமைகளாக விற்கப்பட்டனர். நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர், கொல்லப்பட்டனர்.

இவற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ மறையானது மூன்று நூற்றாண்டுகளாக உரோமைப் பேரரசிலே கொடிய துன்புறுத்தல்களுக்கு (கலாபனைகளுக்கு) முகம் கொடுக்க நேர்ந்தது. பத்து பேரரசர்களின் கீழ் நடைபெற்ற இக் கொடிய கலாபனைக்களுக்கிடையே அமைதியாக வாழ்வதற்கு இடமளித்த அரசர்கள் சிலரும் இருந்தனர்.

## ஏற்பட்ட துன்புறுத்தல்கள் (கலாபனைகள்)

### முதலாம் துன்புறுத்தல் (1)

நீரோ பேரரசனின் கீழ் கி.பி 64-68ல் ஏற்பட்டது. அவன் உரோமைக்குத் தீ மூட்டி விட்டு பழியை கிறீஸ்தவர்கள் மீது சுமத்தினான். இதனால் மக்கள் கிறிஸ்தவர்களை எதிர்த்தார்கள். கிறிஸ்தவர்கள் பலர் விளையாட்டு மைதானத்தில் மிருகங்களுக்கு இரையாகினர். சிலர் டயிபர் நதியில் மூழ்கடித்துக் கொல்லப்பட்டனர். சிலரது உடல்களில் கெந்தகம் பூசப்பட்டு இரவில் எரியும் வர்த்திகளாகப் பாவிக்கப்பட்டார்கள். இக் கலாபனைக் காலத்திலேதான் பேதுரு அடிகளார் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். பவுலடியார் சிரச்சேதம் செய்யப் பட்டார். இக் கலாபனை உரோமையில் மட்டுமே நடைபெற்றது. இது கி.பி 68ல் நீரோவின் தற்கொலையுடன் முடிவுற்றது. கி.பி 69-70ல் வெஸ்பேசன் பேரரசன் காலத்தில் துன்புறுத்தல் இருக்கவில்லை. அவரது காலத்தில் அவரது மகன் டய்டஸ் எருசலேமுக்குத் தீ வைத்து ஆலயத்தைக் கொள்ளையிட்டு அழித்தான்.

### இரண்டாம் துன்புறுத்தல் (2)

கி.பி 81-96ல் தோமிற்சியன் பேரரசன் காலத்தில் ஏற்பட்டது. தூய யோவான் கொதிக்கும் எண்ணெய் தாச்சியில் போடப்பட்டார். ஆயினும் அவருக்கு எவ்வித தீங்கும் ஏற்படவில்லை. அதன்பின் சிறைக்கைதியாக பெட்மொஸ்க்கு நாடு கடத்தப்பட்டார். பேரரசரின் சகோதரியான பிளேவியாவின் கணவன் பிளேவியஸ் கிளெமன் சிரச்சேதம் செய்யப்பட்டு கொல்லப்பட்டதோடு பிளேவியா நாடு கடத்தப்பட்டதும் இக்கலாபனைக் காலத்திலாகும்.

### மூன்றாம் துன்புறுத்தல் (3)

98-117ல் திராஜன் பேரரசன் காலத்தில் நடைபெற்றது. இவரது காலத்தில் திட்டமிட்டு துன்புறுத்தல்கள் இருக்கவில்லை ஆயினும் சில பிராந்திய ஆளுநர்கள் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களாய் இருந்தமையால் திராஜனின் அனுசரணையுடன் பல கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர். இத்துன்புறுத்தல் காலத்தில் அந்தியோக்கிய நகர இக்னேசியஸ் அடிகளார், எருசலேம் ஆயர் சிமியோன் உரோமை திருத்தந்தை கிளமென்ட், டெலஸ்போரஸ், டொமிடில்லா அம்மையார் ஆகியோர் மறைசாட்சியாக மரித்தனர். அதன்பின் ஆட்சிக்கு வந்த பேரரசன் கிறிஸ்தவர்களுக்கு பாதுகாப்பு அளித்தார்.

### நான்காம் துன்புறுத்தல் (4)

மாக்கஸ் அவுரேலியுஸ் காலத்தில் கி.பி 161-180ல் ஏற்பட்டது. இக்காலத்திலே பேரரசில் ஏற்பட்ட பெருவெள்ளம், கொடிய நோய் அனைத்தும் கிறிஸ்தவர்களால் ஏற்பட்டது என கூறி மிக கொடிய துன்புறுத்தல் கள் நடைபெற்றன. பொலிகாப் அடிகளாரும், 163ல் கிறிஸ்தவ மெய்யியலாளர் தூய ஜஸ்டினும் உரோமையில் மறைசாட்சிகளாக மரித்தனர்.

### ஐந்தாம் துன்புறுத்தல் (5)

கி.பி.193-211ல், பேரரசன் செப்திமுஸ் செவரஸ் காலத்தில் நடைபெற்றது. தூய இரணிமுஸ் அடிகளார், கார்தேபில் வாழ்ந்த பெர்பேதுவா பெலிசிதாஸ், கன்னிப் பெண் சிசிலியா ஆகியோர் மறைசாட்சியாயினர். அவ்வாறே ஓரிகனின் தந்தையான அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த லியோவும் இக்கலாபனையில் உயிர் துறந்தார்.

**ஆறாம் துன்புறுத்தல் (6)**
பேரரசன் மாக்சிமினஸ் காலத்தில் கி.பி235-238ல் நடைபெற்றது. ஆயர்கள், குருக்கள் கொல்லப்பட்டனர். திருத்தந்தையர் அடிமைகளைப்போல சுரங்கம் தோண்டுவதற்கு அனுப்பப்பட்டனர். இக்காலத்தில் திருத்தந்தை பொன்டேனியஸ், திருத்தந்தை ஹிபொலிடஸ் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

**ஏழாம் துன்புறுத்தல் (7)**
கி.பி240-251ல், பேரரசன் டேசியஸ் காலத்தில் விசேடமாக ஆயர்கள், குருக்களுக்கு எதிராக நடைபெற்றது. திருத்தந்தை பேபியஸ், தூய அகத்தா, அலெக்சாந்திரியா ஆயர் ஒரிகன் அடிகளார், அனதியோக், எருசலேம் ஆயர்கள் ஆகியோர் கொல்லப்பட்டனர். கி.பி251ல் வெசியசைக் கொன்றபின் இத்துன்புறுத்தல் நிறைவுக்கு வந்தது.

**எட்டாம் துன்புறுத்தல் (8)**
கி.பி256-260ல் பேரரசன் வலேரியனால் கிறிஸ்தவ புத்தகங்கள் எரிக்கப்பட்டன. ஆலயத்தை அழித்தான். திருச்சபையின் உடைமைகள் அரசுடைமையாக்கப்பட்டது. ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் சிறையிலிடப்பட்டனர். அவ்வாறே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர் ஆகியோர் மரண வேதனையின் மத்தியிலும் உரோமைத் தேவர்களுக்கு பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டனர். திருத்தந்தை இரண்டாம் சிக்ஸ்டஸ், அவரது திருத்தொண்டர் லோரன்ஸ், தூய சிப்ரியன் அடிகளார், ஆபிரிக்காவில் சிரில் என்ற சிறுவன் ஆகியோர் மறைசாட்சிகளானார்கள். கி.பி 259ல் பர்சியானுவால் வலேரியன் அரசன் சிறைப்பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டதால் அவனது மகன் கல்லினுஸ் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். அத்துடன் துன்புறுத்தல்கள் நிறுத்தப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட திருச்சபையின் உடைமைகள் மீண்டும் அளிக்கப்பட்டன.

**ஒன்பதாம் துன்புறுத்தல் (9)**
274 - 280 கிறிஸ்தவர்களுக்கு எதிராக எழுந்த கொடிய கலாபனைக் காலமாகும். உரோமை ஆயர் பீலிக்ஸ், பாரீஸ் ஆயர் டெனிஸ் ஆகியோர் கொல்லப்பட்டதோடு பல கிறிஸ்தவர்கள் வனவிலங்குகளுக்கு இரையாக்கப்பட்டனர்.

**பத்தாம் துன்புறுத்தல் (10)**
284-305 பேரரசன் தியோக்கிளேசியன் காலத்தில் இடம்பெற்ற இந்த வேதகலாபனை ஏனைய கலாபனைகளிலும் பார்க்கக் கொடியதும் நீண்டகாலத்திற்கு நீடித்ததுமாகும். அதனால் இக்காலத்தை “மறை சாட்சிகளின் யுகம்” என அழைப்பர். இவனது காலத்தில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதற்காக நான்கு ஆணைகள் (கட்டளைகள்) பிறப்பிக்கப்பட்டன.

**1ம் ஆணை (கட்டளை)**
கிறிஸ்தவர்களின் மறை நூல்களை எரிக்கவும், ஆலயங்களைத் தகர்க்கவும், அவர்கள் ஒன்றுகூடுவதைத் தடைசெய்யவும் அவர்களின் அரச உரிமைகளைப் பறிக்கவும் கட்டளையிடப்பட்டது.

**2ம் ஆணை (கட்டளை)**
ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள், வாசகர்கள், பேய் ஓட்டுபவர்கள் எல்லோரும் சிறையிலிடப்பட்டார்கள்.

**3ம் ஆணை (கட்டளை)**
விக்கிரகங்களுக்குப் பலி செலுத்த மறுத்த ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்களைத் துன்புறுத்த உத்தரவு அளிக்கப்பட்டது.

**4ம் ஆணை (கட்டளை)**
எல்லா விசுவாசிகளும் விக்கிரங்களுக்குப் பலியிட உத்தரவிடப்பட்டார்கள். இதன் விளைவாக கிறிஸ்தவர் களுக்கு எதிராக மிகப் பெரியளவிலான கலாபனையொன்று ஆரம்பமாகியது.

தூய செபஸ்தியார், கன்னியான லூசியா, கன்னியான அக்னஸ், தூய மொறிஸ், திருத்தந்தை மார்சிலஸ், ஆயர் ஜனவாரிஸ், எம்லாலியா ஜூஸ்தின், ப்ரன்கிராசி ஆகியோர் கொல்லப்பட்டனர். அவனால் கட்டளையிடப்பட்ட கொடிய உபாதைகள் அதாவது, கண்களைப் பறித்தல், பாதங்களை வாளினால் வெட்டுதல், சூடாக்கப்பட்ட இரும்பு கதிரையில் கட்டி எரித்தல், உடல்களைக் குறடுகளால் கிழித்தல் போன்ற சித்திரவதைகளோடு பட்டினியாலும் கொல்லப்பட்டனர்.

இந்த துன்புறுத்தல்களினால் திருச்சபை அழியவில்லை. மறைசாட்சிகளின் இரத்தத்தால் கிறிஸ்தவம் உயிரூட்டம் பெற்றது. கிறிஸ்தவ மறை வியத்தகு விதத்தில் பரவியது. பாலைநிலத்தில் கடும் தபசு வாழ்வு வளர்ச்சி பெற்றது. அதன்பின் உரோமைப் பேரரசனாக கொன்ஸ்தாந்தின் நியமனம் பெற்றார். அவர் கி.பி 313ல் மிலான் சாசனத்தின் வழியாக கிறிஸ்தவர்களுக்கு சுதந்திரமளித்தார்.

**மிலான் சாசனம் வழியாக கிறிஸ்தவர்களுக்கு கிடைத்த நன்மைகள்**

- நீரோ காலந்தொட்டு கிறிஸ்தவ மதத்தில் மூன்று நூற்றாண்டுகளாக இருந்த தடைச்சட்டம் நீக்கப்பட்டது.
- கிறிஸ்தவ மதத்திற்கு சுயாதீனம் - சுதந்திரம் வழங்கப்பட்டது.
- பேரரசு முழுவதும் மறையைப் பரப்புவதற்கு மறைத்தூதுப் பணியாளர்களை அனுப்பும் சுதந்திரம் கிடைத்தது.
- திருச்சிலுவை, மதிப்பை – மாண்பைப் பெற்றது.
- ஆலயங்கள் கட்டுவதற்கு சுதந்திரம் கிடைத்தது.
- உரோமை விளையாட்டு மைதானத்திலிருந்த பேதுரு ஆலயம் மிகவும் அழகான ஆலயமாக பேரரசனால் புனரமைக்கப்பட்டது.
- பேரரசனின் லாதரன் மாளிகை திருத்தந்தையின் வதிவிடமாக்கப்பட்டது.
- பேரரசனின் தாயாரினால் பெத்லகேமில் மூன்று ஆலயங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

இக்காலத்திலிருந்தே திருச்சபைக்கு சுதந்திரயுகம் தோன்றியது. திருச்சபை வளர்ச்சி பெறுகின்ற அதே வேளையில் உள்ளிருந்தே மறை உண்மைகளுக்கு எதிராக தப்பறைப் பேதகங்கள் எழுந்தன. அவை திருச்சபைக்கு உள்ளேயே இருந்து வந்த சவால்களாகும். ஆயர்கள், குருக்கள், துறவறத்தோர் இவற்றில் பங்கேற்றனர். இவை திருச்சபையின் உள்ளார்ந்த பிரச்சினைகள் அல்லது பேதகங்கள் ஆகும். பல யுகங்களில் பல விதமாக இவை தோன்றின.

அவற்றில் சில:-

ஆரிய பேதகம், மசடோனிய பேதகம், பெலாஜிய பேதகம், நெஸ்தோரிய பேதகம், இயுக்திக்கேய பேதகம், மோனோதெலோ பேதகம்

இவர்கள் திருத்தூதரின் படிப்பினைகள் காலத்திலிருந்து வந்த திருச்சபையின் மறை உண்மைகளுக்கு எதிராக பல்வித கருத்துக்களை வெளியிட்டனர். அவற்றைப் பொதுவாக இவ்வாறு குறிப்பிடலாம்.

- உலக படைப்பு
- கிறிஸ்துவின் மீட்பு செயற்பாடு (கிறிஸ்துவின் இரு இயல்புகள்)
- மரியாளின் இறைத் தாய்மை
- இறப்பின் பின் வாழ்வு
- வானதூதர் பற்றி

பல்வித வேத பேதகர்களும் தமது எண்ணங்களுக்கேற்ப பல்வித கருத்துக்களை முன்வைத்துள்ளனர். சிறப்பாக கிரேக்க தத்துவ சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அவை கட்டியெழுப்பப்பட்டன.

இதற்காக திருச்சபை மேற்கொண்ட செயற்பாடுகள்.

- பாரபட்சமின்றி பேதகர்களைத் திருச்சபையிலிருந்து வெளியேற்றினர்.
- பல்வித சங்கங்களைக் கூட்டி பேதகர்களின் கருத்துக்களை நிராகரித்தனர்.
- தர்க்கவாதிகளினால் கிரேக்க தத்தவ சாஸ்திரத்திற்கேற்ப தர்க்க ரீதியாக முன்வைத்த இலக்கிய நூல்கள் மூலம் வேதபேதகர்களின் கருத்துக்களுக்கு பதில் அளித்தனர்.

மேலும், வேறு வேதபேதக கருத்துக்களுடன் பல நூற்றாண்டு காலமாக திருச்சபை பயணித்ததற்கு வரலாறு சான்று பகர்கிறது.

**திருச்சபையின் தந்தையர்**

ஐந்தாம் நூற்றாண்டு வரை மறையை விளக்குவதற்காக நூல்களை எழுதி, மறையைப் போதித்து, தூய வாழ்க்கை வாழ்ந்தவர்களைத் திருச்சபையின் தந்தையர் என்கிறோம். அவர்களில் சிலர் கிரேக்க மொழியிலும் சிலர் இலத்தீன் மொழியிலும் சிறந்த நூல்களைத் தயாரித்தனர். அவர்களில் முக்கியமானவர்கள்:-

- தூய யுஸ்தின் (கிரேக்கம்)
- தூய அத்தனாசியஸ் (கிரேக்கம்)
- தூய அலெக்சாந்திரியா சிறில் (கிரேக்கம்)
- தூய எரோம் (லத்தீன்)
- தூய அகுஸ்தினார் (லத்தீன்)

**தூய யுஸ்தின் (தூய ஜஸ்டின்)**

கி.பி100-167ல் உரோமையில் வாழ்ந்த முக்கிய அப்பொலொஜிஸ்த் (சத்தியத்தின் பாதுகாவலர்)
எழுத்தாளர். அக்கால திருச்சபையைப் பற்றிய பல விடயங்களை அவரது நூல்களில் காணலாம். (திருவழிபாடு, திருச்சபை கலாபனைகள்) இவர் ஒரு தத்துவசாஸ்தியாவார்.பேரரசின் பல இடங்களுக்குச் சென்று ஸ்டொயிக்,

எரிஸ்டோனட் ஆகியோரின் தத்துவசாஸ்திர முறைகளைக் கற்று தர்க்க ரீதியாக கிறிஸ்தவ மறை பற்றிய விடயங்களை விளக்கி இரண்டு சிறந்த புத்தகங்களை வெளியிட்டார். "அப்போலொஜியா" என்ற நூலை பேரரசர் மார்க்கஸ் அவுறேலியுஸ்சுக்கு சமர்ப்பித்தார். கி.பி167ல் மறைசாட்சியாக மரித்தார்.

**தூய அத்தனாசியுஸ் (296-373)**
எகிப்திலுள்ள அலெக்சாந்திரியாவில் 296ல் பிறந்தார். அவர் ஒரு திருத்தொண்டராக இருந்த காலத்திலேயே ஆரிய பேதகத்துக்கு எதிராக முழு மூச்சாக போராடி திருச்சபையின் மரபுப்போதனையை நிலைநிறுத்தினார். 327ல் அலெக்சாந்திரிய ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு 50 ஆண்டுகள் பணி புரிந்தார். நிசேயா சங்கத்தின் விசுவாச அறிக்கையைப் பாதுகாத்து நிலைநிறுத்த அயராது உழைத்தார். பல முறை பொய்க் குற்றங்கள் சுமத்தப்பட்டு நாடுகடத்தப்பட்டார். பல நூல்களை எழுதிய இவர் 373ல் அலெக்சாந்திரியாவில் இறந்தார்.

**புனித அலெக்சாந்திரியா சிறில் (376-444)**
எகிப்தில் 376ம் ஆண்டில் பிறந்த இவர் 412ல் அலொக்சாந்திரிய ஆயரானார். அஞ்ஞான முறைகளுக்கும் தப்பறை கொள்கைகளுக்கும் எதிராக போர்புரிந்தார். நெஸ்தோரிய பேதகத்திற்கும் இயேசு இறைவனல்ல என்பதற்கும் எதிராக வாதாடி இயேசுவின் இறைதன்மையை மிகைப்படுத்திப் போதித்தார். மரியாள் யேசுவின் அன்னை ஆனால் இறையன்னை அல்ல என்ற நெஸ்தோரியுசின் கருத்துக்கு எதிராக மரியாளின் இறைதாய்மைத்தவத்தைக் காட்டுவதற்கு எபேசில் 431ல் கூட்டப்பட்ட பொதுச்சங்கத்தின் அதி சிறந்த இறையியல் வல்லுனராக செயற்பட்டார். திருச்சபையின் மறை உண்மைகளை உறுதிப்படுத்துவதற்கு பணியாற்றினார்.

**தூய எரோம் (331-420)**
331ல் பிறந்தார். சிறந்த மறைவல்லுநர், திருவிவிலிய அறிஞர். லத்தீன் கிரேக்க மொழியில் தேர்ச்சி பெற்றார். இலத்தீனில் மொழி பெயர்க்கப்பட்டிருந்த புதிய ஏற்பாட்டு நூல்களை நன்கு ஆராய்ந்து திருத்தி புதிய மெருகுடன் எழுதும்படி திருத்தந்தை 1ம் டமாசுசின் கேட்டுக்கொண்டதற்கிணங்க பெத்லகேமில் தம் இருப்பிடத்தை அமைத்துக்கொண்டார். அவர் எபிரேயத்திலிருந்து இலத்தீனுக்கு மொழிபெயர்த்த விவிலியம் "இலத்தீன் வல்கேற்" என அழைக்கப்படுகிறது. நிறையநூல்கள், மறைபோதனைகளை எழுதினார். 420ல் இறைபதமடைந்தார்.

**தூய அகுஸ்தினார் (354-430)**
வட ஆபிரிக்காவிலுள்ள தகாஸ்த் என்னும் ஊரில் 354ல் பிறந்தார். சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், பண்டிதர், சிந்தனையாளர். இளம் வயதில் சிற்றின்பம், கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்த இவர் 387ல் மிலான் நகரில் தூய அம்புரோசினால் திருமுழுக்குப் பெற்றார். 396ல் ஆபிரிக்காவில் கிப்போ நகர ஆயரானார். பல வகை நூல்கள், மறையுரை லத்தீன் மொழியில் எழுதினார். அவரது பாவ வாழ்க்கை, அதிலிருந்து மனம் திரும்பி தூய வாழ்வை மேற்கொள்ளல் பற்றி எழுதிய "பாவ அறிக்கை" என்ற நூல் மிக சிறந்த நூலாகும்.

**கிறிஸ்தவ எழுத்தாளர்கள்**
இவ் எழுத்தாளர்களில் பலர் திருச்சபையின் தந்தையர்களாவர். சுதந்திர யுகத்தில் ஏற்பட்ட தப்பறைகள் காரணமாக வேதபாரகர்களினால் பல நூல்கள் எழுதப்பட்டன. (கி.பி 150-550)க்கு இடைப்பட்ட காலம் கிறிஸ்தவ இலக்கியத்தின் பொற்காலமாகும்.

- **ஓரிஜன்:-**

(கி.பி 185-254) அலெக்சாந்திரிய மறைக் கல்விக்கூடத்தில் பாடங்கற்று பின்பு அக்கல்லூரிக்கே அதிபரானார். திருவிவிலியம், இறையியல், ஞானவாழ்வு போன்ற பல விடயங்களைப் பற்றி 800 நூல்கள் எழுதினார். திருவிவிலியம் பற்றிய நூலில் திருவிலியத்தின் ஆறு மொழி பெயர்ப்புக்களை ஆறு சமாந்திரப் பந்திகளில் நிரல்படுத்தி எழுதினார். இவர் எழுதிய நூல்களில் முக்கியமானவை:- கிறிஸ்துவேத ஆதாரம், பிரமாணங்கள், ஆறு வரிசையில் வேதாகமம் எனப்படும்.

- **தூய பெசில்:-**

கப்பதோசியாவிலுள்ள செசாரியாவில் பிறந்தார். (கி.பி330-376) அலெக்சாந்திரியாவில் எழுத்தாளர் மரபைச் சார்ந்த ஒரிஜன் என்ற மாமேதையின் சீடர்களான தூய பெசில், நாசியன்கஸ் கிரகோரியார் (330-390) நிசா கிரகோரியார் ஆகிய மூவரும் புகழ் பெற்ற எழுத்தாளர்கள், கப்பதோக்கியாவின் தந்தையர் என அழைக்கப்பட்டனர். தூய பெசில் துறவற வாழ்வு பற்றியும், தொராலியா என்ற பெயரில் இல்லற வாழ்வு பற்றியும் எழுதிய நூல்கள் பிரசித்தி பெற்றவை. திருவிவிலிய விளக்கவுரை போதனைகள், துறவற வாழ்வு பற்றிய போதனைகள் இவரால் எழுதப்பட்டன. துறவற வாழ்வுக்கான சட்ட திட்டங்களைத் தயாரித்ததோடு துறவிகள் மடம் ஒன்றையும் நிறுவினர்.

- **தூய கிறிசோஸ்தம் யோவான்:-**

மேலே தரப்பட்டுள்ள திருச்சபையின் தந்தையர்களைத் தவிர அந்தியோக்கிய எழுத்தாளர்களிடையே தூய கிறிதோஸ்தம் யோவானும் குறிப்பிடத்தக்கவராவார். ''பொன் வாய்'' எனவும் அழைக்கப்பட்டார். சிறந்த போதகர், எழுத்தாளர், தூய பவுலின் திரு முகங்களுக்கு விளக்கவுரைகள் எழுதியுள்ளார். ''குருத்துவம்'' என்ற நூலை எழுதினார். துணிச்சலான ஞான மேய்ப்பர். அந்தியோக் நகர ஆயராக இருந்தபோது எயுதேசியா அரசியால் மக்கள் துன்புறுத்தப்பட்டதை இவர் விமர்சித்ததால் சிறையிலிடப்பட்டு, கொடிய தண்டனை அனுபவித்து இறந்தார்.

## திருச்சங்கங்களும் பேதகங்களும்

**திருச்சங்கம் என்றால் என்ன?**

திருச்சங்கம் என்றால் உரோம ஆயர்களும், திருத்தந்தையும் ஏனைய உலக ஆயர்களுடன் இணைந்து திருச்சபையின் நலனுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் வாழ்க்கையில் எதிர்நோக்கும் சவால்களின்போது மறையைச் சார்ந்த அல்லது ஒழுக்க விழுமியங்கள் சார்ந்த அதிகார பூர்வமான அறிவுறுத்தல் அல்லது கோட்பாடுகளை வெளியிடுவதற்காக ஒன்றுகூடும் சபையாகும். திருச்சபை வரலாற்றில் இவ்வாறான 21 திருச்சங்கங்கள் கூட்டப்பட்டுள்ளன.

**பேதகங்கள் என்றால் என்ன?**

திருச்சபையின் படிப்பினைக்கு எதிரான போதகமே பேதகம் எனப்படும். தவறானவற்றையே போதிப்பதும் விசுவாச சத்தியங்களை தவறென்பதும் பேதகமாகும்.

**நிசேயா பொதுச்சங்கம் கி.பி 325 (முதலாம் திருச்சங்கம்)**

(பேரரசன் கொன்ஸ்தாந்தீன் என்பவரால்) திருச்சபையின் பேதகத்தால் பிளவு ஏற்படக்கூடாது என்பதற்காக இத்திருச்சங்கம் 318 ஆயர்களுடன் கூட்டப்பட்டது. அலெக்சாந்திரியாவைச் சார்ந்த குருவான ஆரியஸ் (Arius) என்பவர் இயேசுநாதர் இறைவனல்ல, நித்தியரல்ல, பிதாவுக்கு சமமானவரல்ல, அவர் படைக்கப்பட்டவர். எனவே படைக்கப்படுமுன் அவர் இருந்ததில்லை. கடவுளின் படைப்புக்களில் அவர் மூத்தவர் எனக் கூறினார். (ஆரியபேதகம்) அலெக்சாந்திரிய ஆயர் அதி வணக்கத்துக்குரிய அத்தனாசியுஸ் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணமாகப் பெரும் போராட்டம் ஒன்று அரசு முழுவதும் பரவியது. நிசேயா திருச்சங்க ஆயர்கள் இணைந்து விசுவாசப் பிரமாணம் ஒன்றை இயற்றினர். இது நிசேயா விசுவாசப் பிரமாணம் என அழைக்கப்பட்டது. இவ்விசுவாசப் பிரமாணத்தை இன்று நாம் திருப்பலியில் பயன்படுத்துகிறோம்.

**கொன்ஸ்தான்திநோபிள் பொதுச்சங்கம் கி.பி 381 –(இரண்டாம் திருச்சங்கம்)**

நிசியான் திருச்சங்கம் அத்தனாசியுஸ் கருத்தை ஏற்று விசுவாச சத்தியங்களை முன் வைத்தனர். இச்சங்கம் கூட்டப்படுவதற்கான காரணம் ஆரியஸ் இறந்த போதிலும் அவருடைய கொள்கை அழியாது சிலர் மத்தியில் பரவியிருந்தமையே ஆகும். கொன்ஸ்தாந்தினோபிள் ஆயர் நசியன் சென் கிறகோரியார் தலைமைத் தாங்கிய இச்சங்கத்தில் நிசியா விசுவாசப் பிரமாணத்தில் கீழ் தரப்பட்டுள்ள இப்பகுதிகளை இணைத்துக் கொண்டனர்.

- **இயேசுவைப் பற்றி குறிப்பவை**

இவர் செனித்தவர். உண்டாக்கப்பட்டவர் அல்ல. பிதாவோடு ஒரே பொருளானவர்.

- **தூய ஆவியைப் பற்றிக் குறிப்பவை**

- பிதாவினின்றும் சுதனினின்றும் புறப்படும் ஆண்டவரும் உயிர் அளிப்பவருமான தூய ஆவியையும் விசுவசிக்கின்றேன்.
- இவர் பிதாவோடும் சுதனோடும் ஒன்றாக ஆராதனையும் மகிமையும் பெறுகிறார்.

இயேசுக் கிறிஸ்துவின் இறைதன்மை பற்றியும் தூய ஆவி பற்றியும் ஏற்பட்ட பலவிதமான தப்பறைகள் காரணமாக இரண்டாம் திருச்சங்கத்தில் மேற்கூறப்பட்டுள்ள இறுதித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

**எபேசு பொதுச்சங்கம் கி.பி 431 (மூன்றாவது திருச்சங்கம்)**

கொன்ஸ்தாந்தினோபிள் ஆயரான நொஸ்தோரியசின் தவறான படிப்பினைகளைத் தகர்த்தெறிந்து மரியாள் இறைவனின் தாய் என பிரகடனப்படுத்தப்பட்டது. நொஸ்தோரியஸ், யேசு இரண்டு ஆட்களாய் இருக்கிறார் என்றும் கன்னிமரியாள் தேவதாய் அல்ல ஆனால் கிறிஸ்துவின் தாய் எனவும், மனித கிறிஸ்து கடவுள் அல்ல எனவும் போதித்தார். (நொஸ்தோரியஸ் பேதகம்) அவருக்கு எதிராக இச் சங்கத்தில் பேரரசர் 2ம் தியோடோசியசின் காலத்தில் (408-450) இப் பேதகத்தின் தவறை சுட்டிக் காட்டியவர் திருச்சபையின் தந்தை அலெக்சாந்திரியா சிறில் ஆவார்.

**கல்செடோன் பொதுச்சங்கம் கி.பி 451 (நான்காவது திருச்சங்கம்)**

கொன்ஸ்தாந்தினோபிளில் ஒரு துறவற மடத்தின் தலைவராயிருந்த யுத்திக்கேஸ் என்பவர் இயேசுவிடம் ஒரு சுபாவம் மட்டுமே உண்டு என போதித்தார். பேரரசன் மாஷியன்காலத்தில் (450-457) ஒரு பொதுச்சங்கம் கூட்டப்பட்டது. லியோ பாப்பரசரால் முன்வைக்கப்பட்ட மறையுண்மைமை களை விசுவாசிக்கச் செய்தனர். அதாவது கிறிஸ்து ஒரு ஆளாக இருப்பினும் இரு சுபாவங்களைக் கொண்டுள்ளார். அதாவது இறை + மனித சுபாவம் இரண்டையும் கொண்டுள்ளார். என விளக்கப்பட்டது.

**சுதந்திர யுகம் கி.பி 325-451**

கி.பி 313ல் உரோம பேரரசு முழுவதும் பரவியிருந்த கிறிஸ்தவ ஒடுக்கு முறைகளை (துன்புறுத்துதல்) தகர்த்தெறிந்து பேரரசன் கொன்ஸ்தான்தீன் அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைத்தார். மெல்லியன் பாலம் அருகில் தொடக்கப்பட்ட இறுதிப் போரில் அவர் பெற்ற மாபெரும் வெற்றி கிறிஸ்துவின் அனுக்கிரகத்தினால் ஏற்பட்ட வெற்றி என ஏற்று மிலான் சாசனத்தை ஏற்படுத்தி கிறிஸ்தவர்களுக்கு மதச் சுதந்திரத்தை அளித்தார். பேரரசு கூட்டரசாக இருந்தமையால் மேற்கத்தேய ஐரோப்பாவிற்கு பொறுப்பாளராகக் கடமையாற்றிய லிபினயஸ்சின் ஆதரவு பெற்று அரசு முழுவதும் இதனை அமுல்படுத்தினார். கி.பி 324ல் அவர் தனியான ஒரே பேரரசனாக நியமனம் பெற்றார். கி.பி 380ல் 1வது தியடோசியஸ் பேரரசன் கிறிஸ்தவத்தை அரச மதமாகப் பிரகடனப்படுத்தி சபையின் வளர்ச்சிக்கான பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டார்.

## துறவற வாழ்வு

**துறவற வாழ்வு என்றால் என்ன?**

உலக நிலையை விட்டகன்று செப, தப, தியானத்தில் ஈடுபட்டு தனியாக அல்லது குழுவாக இணைந்து வாழும் வாழ்வாகும். இவ்வாறு ஆரம்ப யுகத்தில் மக்களது வரவேற்பைப் பெற்ற 2 குழுக்கள்

1. மறை சாட்சிகள்
2. துறவற துறவிகள்

**ஆரம்பம்**

இக்காலகட்டத்தில் ஏற்பட்ட துன்புறுத்தல்களிலிருந்து தப்பியோடி தனியாக வாழ்வதில் விருப்பு. மேலைத்தேய துறவற சபைகளுக்கு முன் கீழைத்தேய துறவற சபைகள் உருவாகின. திருத்தந்தை திபியஸ்சில் கி.பி (255-341) குகைக்குள் வாழ்ந்தார். அவரது சீடரான வனத்து அந்தோனி (233-355) துறவற வாழ்வின் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

325ல் எகிப்திய துறவற துறவிகள் 5000ம் பேரளவில் வாழ்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு 4ம் நூற்றாண்டின் இறுதியில் துறவறக் குடியேற்றங்கள் இருந்ததாகவும் ஆண்களுக்கு முன்னர் பெண்கள் குழுவாக வாழ்ந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 4ம் நூற்றாண்டில் புனித நாட்டை நாடிச் சென்ற நூற்றுக்கணக்கான துறவிகளினால் உண்டான துறவறக் குடியேற்றங்கள் எருசலேம், பெத்தலகேம் ஆகிய இடங்களில் இருந்ததாக தெரிகின்றது. (புனித எரோம்)

**பல்வேறு முறைகள்**

- தனியாக வாழ்ந்த போதிலும் திருப்பலி வேளைகளில் ஓரிடத்தில் ஒன்று சேருதல்.
- ஒரு துறவற மடத்தில் வாழ்வதுடன் சூழ இருக்கும் ஒரு சில இல்லங்களில் வாழ்ந்தனர்.
- துறவற மட பரிபாலகருக்கு கீழ்ப்படிதல்.
- நயில் நதியருகில் வாழ்ந்த துறவிகள் வியாபாரத்திலும் ஈடுபட்டனர்.
- தூய பெசில் (329-379) இக்காலத்திற்கும் ஏற்றவிதத்தில் ஒழுக்க விதிமுறைகளைத் தயாரித்தார்.

மேலைத்தேய திருச்சபையில் 4ம் நூற்றாண்டில் துறவற வாழ்வு பற்றிய நூல்களை எழுதியும் துறவற மடங்களை ஏற்படுத்தியும் துறவற வாழ்வு விஸ்தரிக்கப்பட்டது. மேலைத்தேய நாட்டின் முதலாவது துறவற மடம் பிரான்ஸ் நாட்டு டுவர்ஸ்சில் மாட்டின் அடிகளாரால் நிறுவப்பட்டது.

திருச்சபையின் புத்தெழுச்சிக்காகவும் கொடிய மக்களை சத்திய வேதத்திற்கு மீண்டும் திரும்பச் செய்வதற்காகவும் துறவறத்தார் பெரும் பணியாற்றினர். இவர்களிடையே சபைத் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் மக்கள் மத்தியில் வரவேற்புப் பெற்றனர். இவர்கள் வழியாக நற்பண்புகளும் இலக்கியமும் பாதுகாக்கப்பட்டன.

**தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்**

**‘லங்காராம’, 19 பெல்கம் இடம்**

**கொட்டா வீதி, கொழும்பு – 08**

**தொ.பே. 011–2685459**

**தொலைநகல் : 011–2665021**

**மின் அஞ்சல் : natcatbible@gmail.com**

PRINTED BY : NUWANA PRINTERS 032 20 56 888